க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2017

மதிப்பீட்டு அறிக்கை

21 - பொருளியல்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2017

மதிப்பீட்டு அறிக்கை

21 - பொருளியல்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சைக்காக 2017 ஆம் ஆண்டில் 206630 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 46700 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இந்த அறிக்கையை மேலும் பரந்த ஆய்வுக்காக வழங்குவது பொருத்தமானது.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) பொருளியல் பாடத்தின் நோக்கம், பாட அடைவு பற்றிய தகவல்கள் என்பன இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம், ஆயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் பொருளியல் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர) - (2017) பரீட்சையில் பொருளியல் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றுக்கான வினாக்கள், அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாத்தாள் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புகள், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Test Theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாத்தாளிலுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துக்கள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக்கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் அச்சிட்டு வழங்கிய இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தலைமையதிகாரி உட்பட பணிக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2020 மே 14
ஆய்வு அபிவிருத்திக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

ஆலோசனை	:	**பீ. சனத் பூஜித** பரீட்சை ஆணையாளர் நாயகம்
ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்	:	**கயாத்திரி அபேகுணசேகர** பரீட்சை ஆணையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
இணைப்பு	:	**எஸ். பிரணவதாசன்** பிரதிப் பரீட்சை ஆணையாளர்
பாட ஒருங்கிணைப்பு	:	**டீ. ஆர். என். கே. கமகே** உதவிப் பரீட்சை ஆணையாளர் **டீ. வீ. சன்திக** உதவிப் பரீட்சை ஆணையாளர்
தொகுப்பு	:	**சிரேஷ்ட கலாநிதி டெனி அதபத்து** பொருளியல் கற்கைத்துறை ருகுணு பல்கலைக்கழகம் **கலாநிதி வசந்த அதுகோரல** பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆக்கக் குழு	:	**டீ. ஜீ. சுகத்** ஆசிரியர் சேவை மாற/ புனித தோமஸ் மகளிர் வித்தியாலயம் **ரம்யா குணசேகர** ஆசிரியர் சேவை கொ/ விசாகா வித்தியாலயம் **எஸ். என். பீ. எம். எஸ். ரஞ்சனி** ஆசிரியர் சேவை களு/ மிரிஸ்வத்த தேசிய கல்லூரி **தமரா. டீ. காரியவசம்** ஆசிரியர் சேவை கா/றிபன் பெண்கள் வித்தியாலயம் **ஆர். கே. எ. டி. எ. கே. ரத்நாயக்க** ஆசிரியர் சேவை றோயல் கல்லூரி
மொழிபெயர்ப்பு	:	**யூ. எல். எம். மின்னதுல் ஹைறா** அதிபர் சேவை (ஓய்வு நிலை)
கணினிப் பக்க வடிவமைப்பு	:	**சு.துஷாந்தினி** தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர்
முகப்பு அட்டை வடிவமைப்பு	:	ஆர். எம். நிலுபுல் ஷெஹான் யசரத்ன கணினித் தரவுப் பதிவாளர்

உள்ளடக்கம்

பக்க எண்

பகுதி I

1. பாடக் குறிக்கோள், பாட அடைவு தொடர்பான தகவல்கள்
 1.1 பாடக் குறிக்கோள்கள் 1

 1.2 பாட அடைவு தொடர்பான தகவல்கள் 2
  1.2.1 தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
  1.2.2 பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம் 2
  1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள் - மாவட்ட அடிப்படையில் 3
  1.2.4 புள்ளிகள் பெற்றுள்ள விதம் - வகுப்பாயிடையின் படி 4

 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு
  1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு 5
  1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6
  1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6
  1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு (அ) பகுதி 7
  1.3.5 வினாப்பத்திரம் II இன் அடைவு (ஆ) பகுதி 8

பகுதி II

2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்
 2.1 வினாப்பத்திரம் I உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

  2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9
  2.1.2 வினாப்பத்திரம் I 10
  2.1.3 வினாப்பத்திரம் I இற்கான எதிர் பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 18
  2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகள் 29
  2.1.5 வினாப்பத்திரம் I இன் ஒவ்வொரு வினாவினதும் விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் - சதவீதமாக 20
  2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 21

 2.2 வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்
  2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 24
  2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், 25
  விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 78
  2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

பகுதி III

3. விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்
 3.1 விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் 80
 3.2 கற்றல் கற்பித்தற் செயன்முறை தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் 84

பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 பாடக் குறிக்கோள்கள்

- ★ சமூகம் ஒன்றின் அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளை விஞ்ஞானரீதியாகப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவ்வடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை வழங்குதல்.
- ★ பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், நடைமுறைப் பொருளாதார பிரச்சினைகளையும் பிற்போக்கான நிலைமைகளையும் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான திறன்களை வழங்குதல்
- ★ பேரினப் பொருளாதார மாறிகள் மற்றும் அவற்றுக்கிடையே நிலவும் இடைத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளச் செய்தல்
- ★ சந்தையொன்றில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தர்க்கரீதியாக நடந்து கொள்ளும் முறைகளை ஆராய ஊக்குவித்தல்
- ★ பொருளாதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியாகச் சிந்திப்பதற்குத் தேவையான தர்க்கரீதியான சிந்தனைகளை உருவாக்குதல்
- ★ பல்வேறு பொருளியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களைக் கற்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ★ சந்தை முறையொன்றில் பேரினப்பொருளியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையீடு செய்கின்ற முறைமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்க ஊக்குவித்தல்
- ★ நடைமுறையிலுள்ள பொருளியல் கொள்கைகளை விமர்சன ரீதியில் விளக்கும் ஆற்றலை வழங்குதல்
- ★ பொருளியல் அபிவிருத்தியின் பல்வகைமையை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வதற்குத் தேவையான திறன்களை வழங்குதல்.
- ★ பொருளியல் பாடத்தைப் பகுப்பாய்வு ரீதியில் விளக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்குதல்.
- ★ சர்வதேச வர்த்தகத்தில், நிதியின் முக்கியத்துவம் மற்றும் பூகோளமயமாதல் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுதல்.
- ★ இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றுகை தொடர்பாக விமர்சனரீதியில் நோக்குவதற்கான திறன்களை வளர்த்தல்
- ★ சமூகத்தின் நல் நிலவுகைக்காகச் (Social well being) செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையினை வழங்குதல்
- ★ உயர் கல்விக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான அடிப்படையை வழங்குதல்

1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

மொழிமூலம்	பாடசாலை	தனிப்பட்ட	மொத்தம்
சிங்களம்	48112	4611	52723
தமிழ்	8014	1047	9061
ஆங்கிலம்	1921	886	2807
மொத்தம்	**58047**	**6544**	**64591**

அட்டவணை 1

1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்ய

தரம்	பாடசாலைப் பரீட்சார்த்திகள்		தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		மொத்தம்	சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்		சதவீதம்		
A	6385	11.00	389	5.94	6774	10.49
B	7428	12.80	580	8.86	8008	12.40
C	13926	23.99	1115	17.04	15041	23.29
S	17795	30.65	1917	29.30	19712	30.51
F	12513	21.56	2543	38.86	15056	23.31
மொத்தம்	**58047**	**100.00**	**6544**	**100.00**	**64591**	**100.00**

அட்டவணை 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

மாவட்டம்	தோற்றியோரின் எண்ணிக்கை	அதி சிறந்த சித்தி (A) பெற்றோர்		விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர்		திறமைச் சித்தி (C) பெற்றோர்		சாதாரண சித்தி (S) பெற்றோர்		சித்தி பெற்றோர் (A+B+C+S)		சித்தி அடையாதோர் (F)	
		எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. கொழும்பு	9125	1303	14.28	1186	13.00	2192	24.02	2619	28.70	7300	80.00	1825	20.00
2. கம்பஹா	5410	612	11.31	663	12.26	1177	21.76	1624	30.02	4076	75.34	1334	24.66
3. களுத்துறை	2784	342	12.28	374	13.43	648	23.28	812	29.17	2176	78.16	608	21.84
4. கண்டி	3431	352	10.26	405	11.80	747	21.77	1139	33.20	2643	77.03	788	22.97
5. மாத்தளை	849	65	7.66	95	11.19	207	24.38	271	31.92	638	75.15	211	24.85
6. நுவரெலியா	1218	127	10.43	144	11.82	320	26.27	337	27.67	928	76.19	290	23.81
7. காலி	2518	294	11.68	270	10.72	516	20.49	734	29.15	1814	72.04	704	27.96
8. மாத்தறை	1618	137	8.47	178	11.00	397	24.54	474	29.30	1186	73.30	432	26.70
9. அம்பாந்தோட்டை	1061	49	4.62	96	9.05	240	22.62	311	29.31	696	65.60	365	34.40
10. யாழ்ப்பாணம்	1022	135	13.21	139	13.60	242	23.68	337	32.97	853	83.46	169	16.54
11. கிளிநொச்சி	176	20	11.36	18	10.23	35	19.89	70	39.77	143	81.25	33	18.75
12. மன்னார்	174	22	12.64	34	19.54	50	28.74	48	27.59	154	88.51	20	11.49
13. வவுனியா	334	39	11.68	50	14.97	76	22.75	103	30.84	268	80.24	66	19.76
14. முல்லைத்தீவு	144	23	15.97	16	11.11	42	29.17	43	29.86	124	86.11	20	13.89
15. மட்டக்களப்பு	622	79	12.70	96	15.43	150	24.12	212	34.08	537	86.33	85	13.67
16. அம்பாறை	1071	90	8.40	124	11.58	263	24.56	316	29.51	793	74.04	278	25.96
17. திருகோணமலை	605	61	10.08	64	10.58	116	19.17	198	32.73	439	72.56	166	27.44
18. குருநாகல்	2799	305	10.90	341	12.18	652	23.29	857	30.62	2155	76.99	644	23.01
19. புத்தளம்	1406	178	12.66	195	13.87	338	24.04	445	31.65	1156	82.22	250	17.78
20. அனுராதபுரம்	1458	117	8.02	156	10.70	308	21.12	456	31.28	1037	71.12	421	28.88
21. பொலன்னறுவை	794	75	9.45	61	7.68	181	22.80	252	31.74	569	71.66	225	28.34
22. பதுளை	1724	131	7.60	182	10.56	409	23.72	562	32.60	1284	74.48	440	25.52
23. மொனராகலை	700	78	11.14	74	10.57	155	22.14	223	31.86	530	75.71	170	24.29
24. இரத்தினபுரி	1869	241	12.89	219	11.72	448	23.97	548	29.32	1456	77.90	413	22.10
25. கேகாலை	1508	136	9.02	181	12.00	375	24.87	473	31.37	1165	77.25	343	22.75
மொத்தம்	**44420**	**5011**	**11.28**	**5361**	**12.07**	**10284**	**23.15**	**13464**	**30.31**	**34120**	**76.81**	**10300**	**23.19**

அட்டவணை 3

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

வகுப்பாயிடை	மீடிறன்	மீடிறன் சதவீதம்	திரள் மீடிறன்	திரள் மீடிறன் சதவீதம்
91 - 100	98	0.15	64591	100.00
81 - 90	2171	3.36	64493	99.85
71 - 80	6253	9.68	62322	96.49
61 - 70	9013	13.95	56069	86.81
51 - 60	10847	16.79	47056	72.85
41 - 50	13013	20.15	36209	56.06
31 - 40	**11851**	**18.35**	**23196**	**35.91**
21 - 30	7859	12.17	11345	17.56
11 - 20	3275	5.07	3486	5.40
01 - 10	210	0.33	211	0.33
00 - 00	1	0.00	1	0.00

அட்டவணை 4

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி இப்பாடத்தில் 31 - 40 இற்கு இடையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 11851 என்பதுடன் அது பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கையில் 18.35% ஆகும். 40 புள்ளிகள் அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 23196 ஆகும். அது பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கையில் 35.91% ஆகும்.

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 **வினாத்தாள் I இன் அடைவு**



வரைபு 1 (RD/16/05/AL) படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

மேற்குறித்த வரைபின்படி 2 ஆம் வினாவுக்கே கூடுதலான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அதற்கு அவர்கள் காட்டியுள்ள இலகுதன்மை 97% ஆகும். அதேபோல் 9ஆம் வினாவுக்கே பரீட்சார்த்திகளில் குறைந்த எண்ணிக்கையானோர் சரியாக விடையளித்துள்ளனர். அதன் இலகுதன்மை 10% ஆகும்.

1.3.2 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்



இவ்வரைபின்படி 'அ' பகுதியில் 2 ஆவது வினா பெரும்பாலான பரீட்சார்த்திகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் சதவீதம் 98.37% ஆகும். 'ஆ' பகுதியில் 7 ஆவது வினா பெரும்பாலான பரீட்சார்த்திகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் சதவீதம் 64.98% ஆகும். 4 ஆவது வினாவின் தெரிவு 18% சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

வரைபு 2 - (RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்



இங்கு I ஆம் வினாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 20 ஆகும். இவ் வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% ஆயிடையில் அதாவது 16 - 20 இற்கிடையில் புள்ளிகளை 39% சதவீதத்தினர் பெற்றுள்ளனர். அதேபோல் ஒதுக்கப்பட்ட 20 புள்ளிகளில் 0%-25% ஆயிடையில் அதாவது 0 - 5 இற்கிடையிலான புள்ளிகளை 10% சதவீதத்தினர் மாத்திரமே பெற்றுள்ளனர்.

வரைபு 3 - (RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

1.3.4. வினாத்தாள் II இன் அடைவு



வரைபு 4.1 (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபின்படி 05 ஆம் வினாவின் (i) அ பகுதியின் இலகுதன்மை 94% ஆகக் காணப்படுவதுடன், 4 ஆம் வினாவின் (ii) ஆம் பகுதியின் இலகுதன்மை 11% ஆகும்.



வரைபு 4.2 (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபின்படி 7 ஆம் வினாவின் (i) ஆம் பகுதியின் இலகுதன்மை 72% ஆகக் காணப்படுவதுடன், 9 ஆம் வினாவின் (i) ஆம் பகுதியின் இலகுதன்மை 2% ஆகும்.

பகுதி II

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும்

2.1.1 வினாத்தாள் I இன் கட்டமைப்பு

- ⋆ நேரம் இரண்டு மணித்தியாலங்கள் ஆகும்.
- ⋆ ஐந்து தெரிவுகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ⋆ ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

2.1.2 வினாத்தாள் I

1. பின்வருவனவற்றுள் எது ஓர் உற்பத்திக் காரணி **அல்லாதது** ?
(1) இயற்கை வளங்கள் (2) மனித வளங்கள்
(3) மூலதனம் (4) பணம்
(5) முயற்சியாண்மை (……)

2. அருமை தொடர்பான பிரச்சினையானது,
(1) அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் மட்டும் காணப்படுகின்றது.
(2) சந்தைப் பொருளாதாரங்களில் மட்டும் காணப்படுகின்றது.
(3) பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் மிகவும் கூடுதலாக இருப்பதால் காணப்படுகின்றது.
(4) தற்போது காணப்படுகின்றது; ஆனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது இல்லாமற் செய்யப்படும்.
(5) வளங்கள் வரையறுக்கப்பட்டனவாக இருப்பதால் காணப்படுகின்றது. (……)

3. ஓர் உற்பத்தி சாத்திய வளையி உருவாக்கத்தில் பின்வருவனவற்றில் எது எடுகோளாகக் கொள்ளப்படுகின்றது ?
(1) பொருளாதாரமானது அதன் வளங்களை வினைத்திறனற்ற வகையில் பயன்படுத்துகின்றது.
(2) வளங்கள் தனியார் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
(3) பூரண உற்பத்தி அல்லாமல் நிறைதொழில் மட்டம் உணரப்படுகின்றது.
(4) உற்பத்தித் தொழினுட்பமானது நிலையானதாகக் காணப்படுகின்றது.
(5) பொருளாதாரத்தில் பணவீக்கம் காணப்படவில்லை. (……)

4. ஒரு பொருளாதாரமானது உற்பத்தி வினைதிறனை அடைந்துள்ளமையைக் காட்டுவது,
(1) அப்பொருளாதாரம் மற்றொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாமல் உள்ளபோது
(2) ஒவ்வொரு பொருளையும் உற்பத்திசெய்யும்போது ஏற்படும் எல்லைச் செலவானது அதன் விலைக்குச் சமமாக உள்ளபோது
(3) அப்பொருளாதாரம் அனைத்து எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளையும் இல்லாமல் செய்துள்ளபோது
(4) சமூகத்தினால் அதிகம் விரும்பப்படும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக வளங்கள் ஒதுக்கப்படுகின்றபோது
(5) அப்பொருளாதாரம் அனைத்து உற்பத்திப்பொருட்களிலும் தன்னிறைவினைக் கொண்டுள்ளபோது (……)

5. 'எதனை உற்பத்திசெய்தல்' மற்றும் 'யாருக்காக உற்பத்திசெய்தல்' ஆகிய அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் அடிப்படையில் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. ஏனெனில்,
(1) வெவ்வேறு வருமான பங்கீட்டு வடிவங்கள் வெவ்வேறு கேள்வி வடிவங்களை உருவாக்குவதனால் அதற்கேற்ற விதத்தில் வள ஒதுக்கீட்டு வடிவங்களும் வேறுபடுகின்றன.
(2) உற்பத்தி முறைகளின் வெவ்வேறு வடிவங்கள் வருமானப் பங்கீட்டின் வெவ்வேறு வடிவங்களை உருவாக்குகின்றன.
(3) சமூகத்தில் பொருளாதாரப் பலமுடைய பிரிவினரிடத்தில் வருமானமும் செல்வமும் குவிந்துள்ளன.
(4) வளங்களை வினைத்திறனாக ஒதுக்குவதற்கு சந்தைகளை நம்பியிருக்க முடியாது.
(5) ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீடானது உள்ளீடுகளின் பல்வேறு சேர்க்கைகளினால் உற்பத்திசெய்யப்படலாம். (……)

6. ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் பிரதான தொழிற்பாடு யாதெனில்,
(1) முயற்சியாளர்களுக்கு அதிக இலாபத்தினை உருவாக்குவது
(2) முதலீட்டு வாய்ப்புக்களைத் தெரிவுசெய்வது தொடர்பாக வீட்டுத்துறையினருக்கு வழிகாட்டுவது
(3) கேள்வி வளையிகளின் நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பது
(4) வருமானப் பங்கீட்டினை மேம்படுத்துவது
(5) மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையே அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வது (……)

7. பின்வரும் எந்தக் காரணியில் ஏற்படும் மாற்றமானது ஒரு பொருளுக்கான சந்தைக் கேள்வி வளையியினை மாற்றமடையாமல் அப்படியே இருக்கச் செய்யும் ?
(1) சனத்தொகை (2) அப்பொருளின் விலை
(3) பதிலீட்டுப் பொருளின் விலை (4) இணைப்புப் பொருளின் விலை
(5) வீட்டுத்துறையினரின் சராசரி வருமானம் (……)

8. கேள்வியின் வருமானம் மற்றும் விலை நெகிழ்ச்சிகளைக் காட்டும் பின்வரும் சேர்க்கைகளில் எது ஒரு கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியினைக் கொண்டுள்ள ஒரு சாதாரண பொருளுடன் இசைந்து செல்வதாக உள்ளது ?

	கேள்வியின் வருமான நெகிழ்ச்சி	கேள்வியின் விலை நெகிழ்ச்சி
(1)	எதிர்க்கணியம்	நேர்க்கணியம்
(2)	நேர்க்கணியம்	எதிர்க்கணியம்
(3)	எதிர்க்கணியம்	எதிர்க்கணியம்
(4)	நேர்க்கணியம்	நேர்க்கணியம்
(5)	எதிர்க்கணியம்	பூச்சியம்

(......)

9. A, B ஆகிய இரண்டு பொருட்கள் மட்டும் காணப்படுவதாகவும் நுகர்வோனின் பண வருமானம் உள்ளிட்ட ஏனைய காரணிகள் மாற்றமடையாமல் அப்படியே உள்ளதாகவும் கருதுக. A பொருளின் விலை வீழ்ச்சியடையும்போது B பொருளுக்கான கேள்வி அதிகரிக்குமானால் நாம் பின்வரும் எந்த முடிவிற்கு வரலாம் ?
(1) A ஒரு சாதாரண பொருள்
(2) A யும் B யும் சாதாரண பொருட்கள்
(3) A ஓர் இழிவுப் பொருள்
(4) B ஓர் இழிவுப் பொருள்
(5) B ஒரு சாதாரண பொருள் (......)

10. அரிசிக்கான விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பாணிற்கான கேள்வியை 30% ஆல் அதிகரிக்கச் செய்துள்ளது. அரிசிக்கும் பாணிற்கும் இடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியானது 3.0 ஆகும். அரிசியின் விலையில் ஏற்படும் எந்த மாற்றம் இவ்விளைவினை ஏற்படுத்தியுள்ளது ?
(1) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 90 இற்கு அதிகரித்தல்
(2) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 60 இலிருந்து 72 இற்கு அதிகரித்தல்
(3) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 85 இற்கு அதிகரித்தல்
(4) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 70 இலிருந்து 80 இற்கு அதிகரித்தல்
(5) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 88 இற்கு அதிகரித்தல் (......)

11. நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் அளவை விடவும் நடைமுறையில் உள்ள விலையில் உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் அதிகமாக விற்பனை செய்ய விரும்பினால் அச்சந்தை தொடர்பில் பின்வருவனவற்றில் எது உண்மையாகும்?
(1) கேள்வி கூடியளவு நெகிழ்ச்சியற்றது.
(2) நிரம்பல் கூடியளவு நெகிழ்ச்சியுடையது.
(3) இது ஓர் இழிவுப்பொருளாகும்.
(4) பொருளுக்கு உயர்ந்தபட்ச விலை விதிக்கப்பட்டுள்ளது.
(5) பொருளுக்கு குறைந்தபட்ச விலை விதிக்கப்பட்டுள்ளது. (......)

12. குறித்தவொரு நுகர்வுப் பொருளின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

கேள்வி $(Q_D) = 80 - 2P$ நிரம்பல் $(Q_S) = -20 + 3P$

அவ்வாறாயின் சமனிலைத் தொகையும் சமனிலை விலையும்
(1) 40 அலகுகள் மற்றும் ரூபா 20 ஆகும். (2) 56 அலகுகள் மற்றும் ரூபா 12 ஆகும்.
(3) 50 அலகுகள் மற்றும் ரூபா 15 ஆகும். (4) 60 அலகுகள் மற்றும் ரூபா 10 ஆகும்.
(5) 40 அலகுகள் மற்றும் ரூபா 120 ஆகும். (......)

13. பின்வரும் வரைபடமானது ஒரு குறிப்பிட்ட நுகர்வுப் பொருளுக்கான ஒரு நிறைபோட்டிச் சந்தையினைக் குறிக்கின்றது.



அரசாங்கத்தினால் சந்தையில் இப்பொருள் மீது சிறப்பு வரி (அலகு வரி) விதிக்கப்படுமானால் வரியின் பின்னர் உற்பத்தியாளர் மிகையினளவு
(1) A + B + F (2) B + E + C + F + D
(3) C + F + D (4) D
(5) E + F + H (......)

14. நிரம்பல் விலை நெகிழ்ச்சி ஒன்றை விடக் குறைவாகக் காணப்படுமானால் அதன் கருத்து,

(1) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் அதிகமானதாகும்.

(2) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தை விடவும் அதிகமானதாகும்.

(3) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் குறைவானதாகும்.

(4) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தை விடவும் குறைவானதாகும்.

(5) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் குறைவானதாகும். (……)

15. ஒரு நிறைப்போட்டிச் சந்தைக்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுவதாகக் கருதுக.

கேள்வி $(Q_D) = 60 - 2P$ நிரம்பல் $(Q_S) = -20 + 3P$

மேலுள்ள சமன்பாடுகளில் Q_D, Q_S என்பன முறையே கேள்வித் தொகையையும் நிரம்பல் தொகையையும் குறிப்பதோடு P விலையினைக் குறிக்கின்றது. மேலும் அரசாங்கமானது இச்சந்தையில் விற்கப்படுகின்ற பொருளின் அலகொன்றிற்கு ரூபா 20 இற்குச் சமமான ஒரு குறைந்தபட்ச விலையினை விதிப்பதாகக் கருதுக. இது,

(1) சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகை நிரம்பலிற்கு வழிவகுக்கும்.

(2) சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகை நிரம்பலிற்கு வழிவகுக்கும்.

(3) சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக் கேள்விக்கு வழிவகுக்கும்.

(4) சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக் கேள்விக்கு வழிவகுக்கும்.

(5) சந்தையில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்த மாட்டாது. (……)

16. 'குறைந்துசெல்லும் விளைவு விதி' குறிப்பது,

(1) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும்போது அதன் எல்லை உற்பத்தியானது படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.

(2) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும்போது அதன் சராசரி செலவானது படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.

(3) நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது, அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.

(4) நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதன் சராசரிச் செலவு படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.

(5) மாறும் உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு நிலையான உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும். (……)

17. உற்பத்தியில் உள்ளார்ந்த செலவுகள் காணப்படும்போது,

(1) கணக்கீட்டு இலாபமானது பொருளாதார இலாபத்தை விட கூடுதலாகக் காணப்படும்.

(2) பொருளாதார இலாபமானது எப்போதும் பூச்சியமாகக் காணப்படும்.

(3) பொருளாதார இலாபமானது கணக்கீட்டு இலாபத்தை விட கூடுதலாகக் காணப்படும்.

(4) கணக்கீட்டு இலாபமானது எப்போதும் பூச்சியமாகக் காணப்படும்.

(5) பொருளாதார இலாபமும் கணக்கீட்டு இலாபமும் ஒன்றுக்கொன்று சமமாகக் காணப்படும். (……)

18. பின்வருவனவற்றில் நிறைப்போட்டிச் சந்தையொன்றின் பண்பு **அல்லாதது** எது ?

(1) தனி நிறுவனம் எவ்வித குறிப்பிடத்தக்க சந்தைச் சக்தியினையும் கொண்டிருக்க மாட்டாது.

(2) சந்தைக் கேள்வி வளையியானது பூரண நெகிழ்ச்சியுடையதாகக் காணப்படும்.

(3) பொருளின் விலையினைப் பாதிக்காமல் எந்தத் தனி நிறுவனமும் அதன் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிக்கலாம்.

(4) தற்போது காணப்படும் நிறுவனங்கள் புதிய நிறுவனங்களின் உள்வருகையைத் தடுக்க முடியாது.

(5) சந்தையில் அதிகளவான கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் காணப்படுகின்றனர். (……)

19. பின்வரும் அட்டவணையானது நிறைபோட்டிச் சந்தையினதும் தனியுரிமைப் போட்டிச் சந்தையினதும் சில எடுகோள்களைக் காட்டுகின்றது. எடுகோள்களின் எச்சேர்க்கையானது இச்சந்தைகளுடன் இசைந்துச் செல்வதாக உள்ளது ?

	நிறைபோட்டி	தனியுரிமைப்போட்டி
(1)	ஒரே வகையான உற்பத்திப்பொருள்	உட்பிரவேசத்திற்கும் வெளியேற்றத்திற்குமான தடைகள்
(2)	வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள்	ஒரே வகையான உற்பத்திப்பொருள்
(3)	அதிகளவான விற்பனையாளர்கள்	குறைந்தளவான விற்பனையாளர்கள்
(4)	உட்பிரவேசத்திற்கும் வெளியேற்றத்திற்குமான தடைகள்	பூரணமான தகவல்கள்
(5)	அதிகளவான விற்பனையாளர்கள்	வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள்

(……)

20. நிறைபோட்டிக் கைத்தொழிலிலுள்ள ஒரு நிறுவனமானது குறுங்காலத்தில் பின்வரும் சூழ்நிலையினை எதிர்கொள்கின்றது.

நிகழ்கால வெளியீட்டு மட்டம்	= 500 அலகுகள்
சந்தை விலை	= அலகொன்றிற்கு ரூபா 6
மொத்தச் செலவு	= ரூபா 5 000
மொத்த நிலையான செலவு	= ரூபா 1 000
எல்லைச் செலவு	= ரூபா 6

இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்கில் செயல்படும் இந்நிறுவனம்,

(1) வெளியீட்டைக் குறைக்கும் அதேவேளை தொடர்ந்து உற்பத்திசெய்ய வேண்டும்.
(2) அதன் விற்பனை விலையை அதிகரிக்க வேண்டும்.
(3) வெளியீடு மாற்றமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
(4) வெளியீட்டினை பூச்சிய நிலைக்குக் குறைக்க வேண்டும்.
(5) வெளியீட்டினை அதிகரிக்கும் அதேவேளை விலையை நிலையாகப் பேண வேண்டும். (......)

21. வர்த்தக சகட ஓட்டத்தின் வரிசைக் கட்டங்கள்
(1) சுருக்கம், விரிவாக்கம், தாழ்வு மட்டம், உச்சம்
(2) சுருக்கம், உச்சம், விரிவாக்கம், தாழ்வு மட்டம்
(3) சுருக்கம், தாழ்வு மட்டம், உச்சம், விரிவாக்கம்
(4) சுருக்கம், தாழ்வு மட்டம், விரிவாக்கம், உச்சம்
(5) சுருக்கம், உச்சம், தாழ்வு மட்டம், விரிவாக்கம் (......)

22. பின்வரும் செலவினங்களில் எது மொத்த நிலையான மூலதன உருவாக்கம் கணிப்பிடப்படும்போது உள்ளடக்கப்படும்?
(1) புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்றினைக் கொள்வனவு செய்தல்
(2) புதிய ஆடம்பரக் கார் ஒன்றினைக் கொள்வனவு செய்தல்
(3) ஒரு தயாரிப்புத்துறைக் கம்பனியின் இருப்பில் 1 000 பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(4) இருப்புகளை விற்பதற்காக ஓர் இருப்புத் தரகருக்கு தரகுப் பணம் செலுத்துதல்
(5) ஐந்து ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளப் பயிர்ச்செய்கைக்காக பணம் செலவிடப்படல் (......)

23. ஒரு நாட்டில் இரண்டு காலப்பகுதிகளுக்கு இடையே நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அண்ணளவாக 8% ஆல் அதிகரித்த அதேவேளை மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அதே காலப்பகுதியில் 2% ஆல் வீழ்சியடைந்துள்ளதாகக் கருதுக. பின்வரும் விளக்கங்களில் எது இதனை விளக்குவதற்கு மிகப் பொருத்தமாக அமையும் ?
(1) பொது விலைமட்டம் 4% ஆல் வீழ்ச்சியடைந்தது.
(2) பொது விலைமட்டம் 8% ஆல் வீழ்ச்சியடைந்தது.
(3) பொது விலைமட்டம் 4% ஆல் அதிகரித்தது.
(4) பொது விலைமட்டம் 8% ஆல் அதிகரித்தது.
(5) பொது விலைமட்டம் 10% ஆல் அதிகரித்தது. (......)

24. பின்வருவனவற்றில் எதில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு ஒரு பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஒரு வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கக்கூடும் ?
(1) நுகர்வுச் செலவினம் (2) அரசாங்கக் கொள்வனவுகள்
(3) இறக்குமதிச் செலவினம் (4) முதலீட்டுச் செலவினம்
(5) வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் உட்பாய்ச்சல் (......)

25. ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் மொத்த நுகர்வுச் சமன்பாடு $C = 200 + 0.8Y$ ஆகவும் சமனிலைத் தேசிய வருமான மட்டம் ரூபா 4 000 பில்லியனாகவும் காணப்படுவதாகக் கருதுக. இப்பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது ?
(1) ரூபா 1 600 பில்லியன் (2) ரூபா 600 பில்லியன் (3) ரூபா 400 பில்லியன்
(4) ரூபா 380 பில்லியன் (5) ரூபா 300 பில்லியன் (......)

26. குறித்தவொரு பொருளாதாரம் தற்போது ரூபா 3 000 பில்லியன் சமனிலை வெளியீட்டு மட்டத்தில் தொழிற்படுவதாகவும் நிறைதொழில் மட்டச் சமனிலையினை அடைவதற்கு அது வெளியீட்டினை ரூபா 4 000 பில்லியன் மட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய தேவையில் உள்ளது எனவும் கருதுக. மேலும் இப்பொருளாதாரத்தின் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 ஆக உள்ளது. இப்பொருளாதாரம் நிறைதொழில் மட்டச் சமனிலையினை அடைவதற்கு மிகவும் பொருத்தமான கொள்கைச் சிபார்சு யாது ?
(1) அரச செலவினத்தை ரூபா 1 000 பில்லியனால் அதிகரித்தல்
(2) அரச செலவினத்தை ரூபா 500 பில்லியனால் அதிகரித்தல்
(3) அரச செலவினத்தை ரூபா 250 பில்லியனால் அதிகரித்தல்
(4) நேர் வரிகளை ரூபா 1 000 பில்லியனால் குறைத்தல்
(5) நேர் வரிகளை ரூபா 250 பில்லியனால் குறைத்தல் (......)

27. பின்வரும் அட்டவணையானது அரசாங்கத் துறையினைக் கொண்டுள்ள ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தின் பிரிவுகள் மற்றும் தேசிய வருமானம் தொடர்பான தரவுகளைக் காட்டுகின்றது. இங்கு C = நுகர்வுச் செலவினம், I = முதலீடு, G = அரசாங்கக் கொள்வனவுகள், X = ஏற்றுமதிகள், M = இறக்குமதிகள், Y = தேசிய வருமானம் எனக் கருதுக.

எந்தச் சூழ்நிலையில் இப்பொருளாதாரம் சமனிலையின்மையில் காணப்படுகின்றது ?

(அனைத்துத் தொகைகளும் ரூபா பில்லியனில் உள்ளன.)

	C	I	G	X	M	Y
(1)	250	50	100	75	25	400
(2)	300	50	100	75	25	500
(3)	450	50	100	75	25	650
(4)	600	50	100	75	25	800
(5)	750	50	100	75	25	950

(……)

28. 'பணத்தின் பெறுமானம்' என்பதனால் கருதப்படுவது யாது ?
(1) ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தினால் கொள்வனவு செய்யப்படக்கூடிய பொருட்களினதும் சேவைகளினதும் அளவு
(2) பண வடிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள செல்வத்தின் அளவு
(3) மத்திய வங்கியில் ஒதுக்குகளாக வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு
(4) குத்தி மற்றும் தாள் நாணயங்களின் உற்பத்திச் செலவு
(5) பண வடிவில் செல்வத்தை வைத்திருப்பதற்கான சந்தர்ப்பச் செலவு (……)

29. பணவீக்க இடைவெளியை குறைக்கத்தக்கதாய் இருப்பது,
(1) அரச செலவினத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(2) பண நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(3) வருமான வரி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(4) மத்திய வங்கியின் கழிவு வீதத்தில் ஏற்படும் ஒரு குறைப்பினால் ஆகும்.
(5) சட்டரீதியான நியதி (statutory) ஒதுக்கு வீதத்தில் ஏற்படும் ஒரு குறைப்பினால் ஆகும். (……)

30. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியில் (VAT) ஏற்படும் ஓர் அதிகரிப்பு கேள்வித் தூண்டற் பணவீக்கம் மற்றும் செலவுத் தூண்டற் பணவீக்கம் என்பவற்றின் மீது ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான விளைவுகள் எவை ?

	கேள்வித் தூண்டற் பணவீக்கம்	செலவுத் தூண்டற் பணவீக்கம்
(1)	வீழ்ச்சி	அதிகரிப்பு
(2)	அதிகரிப்பு	வீழ்ச்சி
(3)	அதிகரிப்பு	அதிகரிப்பு
(4)	வீழ்ச்சி	வீழ்ச்சி
(5)	அதிகரிப்பு	பாதிப்பில்லை

(……)

31. பின்வரும் சொத்துக்களில் அதிகம் திரவத்தன்மை வாய்ந்தது எது ?
(1) சேமிப்பு வைப்புகள்
(2) திறைசேரி உண்டியல்கள்
(3) கேள்வி வைப்புகள்
(4) திறைசேரி முறிகள்
(5) மெய்ச் சொத்துக்கள் (Real estate) (……)

32. ஒரு வணிக வங்கியிலுள்ள உமது வைப்புக் கணக்கில் ரூபா 10 000 இனை நீர் வைப்பிலிடுவதாகக் கருதுக. வங்கியானது அனைத்து வைப்புகளினதும் 20% இனை ஒதுக்காகப் பேண விரும்பினால் உமது வைப்பின் நேரடி விளைவாக இவ்வங்கி எவ்வளவு புதிய வைப்புகளை உருவாக்க முடியும் ?
(1) ரூபா 8 000 (2) ரூபா 10 000 (3) ரூபா 40 000 (4) ரூபா 50 000 (5) ரூபா 52 000 (……)

33. மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினைக் குறைக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும் ?
(1) பணக் கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(2) பணக் கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
(3) பண நிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(4) பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(5) பணக் கேள்வி, பண நிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரிக்கும். (……)

34. தனது பணக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய பிரதான குறிக்கோள்
(1) நடுத்தர காலப்பகுதியில் நடு ஒற்றையிலக்கப் பணவீக்கத்தினை உறுதிப்படுத்தல்
(2) ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை ஓர் உறுதியான மட்டத்தில் பேணுதல்
(3) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நிதியீட்டத்தில் அரசாங்கத்திற்கு வசதி செய்து கொடுத்தல்
(4) நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியினை அடைதல்
(5) அரச படுகடன் சுமையினைக் குறைத்தல் (……)

35. திறந்த சந்தையில் மத்திய வங்கியானது பிணையங்களை விற்பனை செய்யுமானால் பண நிரம்பலுக்கும் சமனிலை வட்டி வீதத்திற்கும் என்ன நடைபெறும் ?

	பண நிரம்பல்	சமனிலை வட்டி வீதம்
(1)	அதிகரிக்கும்	அதிகரிக்கும்
(2)	வீழ்ச்சியடையும்	அதிகரிக்கும்
(3)	அதிகரிக்கும்	வீழ்ச்சியடையும்
(4)	வீழ்ச்சியடையும்	வீழ்ச்சியடையும்
(5)	வீழ்ச்சியடையும்	மாற்றமில்லை

(……)

36. ஒரு தூய பொதுப் பொருளுக்கான ஓர் உதாரணம்
(1) சுகாதார சேவை
(2) தேசிய நூதனசாலை
(3) தேசிய பாதுகாப்பு
(4) புகையிரத போக்குவரத்துச் சேவை
(5) கல்வி (……)

37. ஒரு குறிப்பிட்ட பொருளுக்கான எல்லை தனியார் நலன் (MPB), எல்லைச் சமூக நலன் (MSB) வளையிகள் மற்றும் சந்தை நிரம்பல் வளையி (S) என்பன பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.



இச்சந்தையில் அரசாங்கத்தின் தலையீடு காணப்படாதபோது வளங்கள் உரிய முறையில் ஒதுக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஏனெனில்,
(1) தாராள சந்தை விலையானது மிகவும் கூடுதலாக உள்ளது.
(2) H-J அளவில் பொருள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது.
(3) தாராள சந்தை வெளியீடானது மிகவும் கூடுதலாக உள்ளது.
(4) H-J அளவில் பொருள் குறைவாக நுகரப்படுகின்றது.
(5) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படுகின்றது. (……)

38. இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானமும் அரசாங்கச் செலவினமும் அண்மைய ஆண்டுகளில் அண்ணளவாகப் பின்வருமாறு காணப்பட்டன.

	வருமானம்/மொ.உ.உ. விகிதம் (%)	செலவினம்/மொ.உ.உ. விகிதம் (%)
(1)	15 - 16	25 - 26
(2)	12 - 13	24 - 25
(3)	13 - 14	20 - 21
(4)	10 - 11	15 - 16
(5)	15 - 16	18 - 19

(……)

39. இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைச் செலவினத்தின் பிரதான பிரிவுகள் மொத்தச் செலவினத்தில் அவற்றின் சார்பளவு முக்கியத்துவத்தின்படி வரிசைப்படுத்தப்பட்டால், அவற்றின் ஒழுங்குமுறை
(1) வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்களும் கூலிகளும்
(2) சம்பளங்களும் கூலிகளும், வட்டிக் கொடுப்பனவுகள், வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள்
(3) அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்களும் கூலிகளும்
(4) வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள், சம்பளங்களும் கூலிகளும், வட்டிக் கொடுப்பனவுகள்
(5) வட்டிக் கொடுப்பனவுகள், அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள், வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள் (……)

40. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதில் பரந்தளவில் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டுக் கொடுகடன் கருவியாக இருந்துள்ளது
(1) திறைசேரி உண்டியல்கள்
(2) திறைசேரி முறிகள்
(3) ரூபா பிணையங்கள்
(4) இலங்கை அபிவிருத்தி முறிகள்
(5) மத்திய வங்கியின் முற்பணங்கள் (……)

41. ஜப்பானில் ஓர் அலகு துணியினை உற்பத்திசெய்வதற்கு 50 ஊழிய மணித்தியாலங்களும் ஓர் அலகு அரிசியை உற்பத்திசெய்வதற்கு 100 ஊழிய மணித்தியாலங்களும் செலவாகின்றன. தாய்லாந்தில் ஓர் அலகு துணியினை உற்பத்திசெய்வதற்கு 200 ஊழிய மணித்தியாலங்களும் ஓர் அலகு அரிசியை உற்பத்திசெய்வதற்கு 200 ஊழிய மணித்தியாலங்களும் செலவாகின்றன. இந்நிலைமைக்குப் பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது ?

(1) அரிசி உற்பத்தியில் ஜப்பான் ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(2) அரிசி உற்பத்தியில் தாய்லாந்து முழு நன்மையினைக் கொண்டுள்ளது.
(3) துணி உற்பத்தியில் ஜப்பான் ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(4) துணி உற்பத்தியில் தாய்லாந்து ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(5) இரு நாடுகளும் துணியை உற்பத்திசெய்ய வேண்டும். (......)

42. சர்வதேச வர்த்தகமானது ஒரு நாட்டினை,

(1) அதன் உற்பத்திச் சாத்திய எல்லைக்கு அப்பால் உற்பத்திசெய்யவும் நுகரவும் அனுமதிக்கின்றது.
(2) அதன் உற்பத்திச் சாத்திய எல்லையினை வெளிப்புறமாக நகர்த்துவதற்கு அனுமதிக்கின்றது.
(3) அது உற்பத்திசெய்யும் அனைத்துப் பொருள்களினதும் ஒவ்வோர் அலகுக்குமான உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கு அனுமதிக்கின்றது.
(4) அதன் நுகர்வுச் சாத்தியங்களை நிலையாகப் பேணிக் கொண்டு அதன் உற்பத்திச் சாத்தியங்களை விரிவாக்குவதற்கு அனுமதிக்கின்றது.
(5) அதன் உற்பத்திச் சாத்திய எல்லைக்கு அப்பால் நுகர்வதற்கு அனுமதிக்கின்றது. (......)

43. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கையும் நிதியியல் கணக்கையும் கூட்டும்போது அதற்குச் சமனாக வருவது

(1) பூச்சியம்
(2) ஒன்று
(3) வர்த்தக நிலுவை
(4) தேறிய மூலதனக் கணக்கு நிலுவை
(5) தேறிய சர்வதேச ஒதுக்குகள் (......)

44. இலங்கை ரூபாவுக்கு எதிராக ஜப்பான் யென்னின் விலை கணிசமான அளவு வீழ்ச்சியடையுமானால்,

(1) ஜப்பானிய நுகர்வோருக்கு இலங்கைப் பொருட்கள் சார்பளவில் மலிவானவையாக இருக்கும்.
(2) இலங்கை நுகர்வோருக்கு ஜப்பானியப் பொருட்கள் சார்பளவில் மலிவானவையாக இருக்கும்.
(3) இலங்கை ரூபாவுக்கான கேள்வி ஜப்பானில் அதிகரிக்கும்.
(4) இது அதிகளவான ஜப்பானிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஊக்கமளிக்கும்.
(5) இது அதிகளவான இலங்கை உல்லாசப் பயணிகள் ஜப்பானுக்குச் செல்வதை ஊக்கமிழக்கச் செய்யும். (......)

45. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கொள்வனவுச் சக்தி சமமதிப்பு அடிப்படையிலான ஒரு பொருளாதாரத்தின் மொத்த தேசிய வருமான (GNI) தலா வருமானமானது அதிகரித்துள்ள போதிலும் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணினால் அளவிடப்படும் அதன் அபிவிருத்தியானது மாற்றமடையாமல் இருந்தது. இவ்வேறுபாட்டினை எவ்வாறு விளக்கலாம் ?

(1) குழந்தைகளுக்கான பாடசாலைக் கல்வியின் எதிர்பார்க்கப்படும் வருடங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு
(2) பிறப்பில் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி
(3) வயதுவந்தோர் எழுத்தறிவு வீதத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி
(4) பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு
(5) சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு (......)

46. ஒரு பொருளாதாரத்தில் வீட்டுத்துறை வருமானப் பங்கீட்டினை எடுத்துக்காட்டும் லோரன்ஸ் வளையி பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



இப்பொருளாதாரத்தின் வருமானப் பங்கீட்டிலுள்ள சமமின்மையைக் காட்டும் கினிக் குணகம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது ?

(1) (பகுதி A இன் பரப்பளவு + பகுதி B இன் பரப்பளவு) ÷ பகுதி C இன் பரப்பளவு
(2) பகுதி B இன் பரப்பளவு ÷ பகுதி C இன் பரப்பளவு
(3) பகுதி A இன் பரப்பளவு ÷ (பகுதி B இன் பரப்பளவு + பகுதி C இன் பரப்பளவு
(4) பகுதி B இன் பரப்பளவு ÷ (பகுதி B இன் பரப்பளவு + பகுதி C இன் பரப்பளவு)
(5) பகுதி C இன் பரப்பளவு ÷ (பகுதி A இன் பரப்பளவு + பகுதி B இன் பரப்பளவு) (......)

47. கற்பனைரீதியான பொருளாதாரமொன்றின் ஊழியர் சந்தை தொடர்பான சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தொழில்புரியும் வயது சனத்தொகை (மில்லியன்)	வேலையற்றோர் சனத்தொகை (மில்லியன்	வேலையின்மை வீதம் (%)
25	3	80

இப்பொருளாதாரத்தின் ஊழியப்படை பங்குபற்றல் வீதம்

(1) 20% (2) 30% (3) 40% (4) 50% (5) 60% (……)

48. 2012/13 வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவினக் கருத்தாய்வின்படி இலங்கையில் கூடிய தலைக்குரிய வறுமை விகிதத்தினைக் கொண்ட மூன்று மாவட்டங்கள்

(1) முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார் (2) மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி
(3) மன்னார், முல்லைத்தீவு, பதுளை (4) மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி
(5) முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மொனராகலை (……)

49. இலங்கையில் முழு வறுமை மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளபோதிலும் குறிப்பிடத்தக்களவு வருமான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் நிலவுகின்றன. மொத்த வீட்டுத்துறை வருமானத்தில் 10% செல்வந்த வீட்டுத்துறையினர் கொண்டுள்ள வீதத்தினால் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. மொத்த வீட்டுத்துறை வருமானத்தில் 10% ஆன செல்வந்தர்கள் கொண்டுள்ள வீதம்

(1) 10.9% (2) 14.9% (3) 28.6%
(4) 38.0% (5) 57.5% (……)

50. பின்வருவனவற்றில் எது இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்வதில் பிரதான இடையூறாக **அமையாதது** ?

(1) உறுதியற்ற பேரினப் பொருளாதார நிலைமைகள்
(2) ஊழியச் சந்தை தொடர்பான இறுக்க நிலைமைகள்
(3) கொள்கைகளின் நிச்சயமற்ற தன்மை
(4) ஊழலும் பலவீனமான ஒழுங்குவிதிமுறைகளும்
(5) ஏற்றுமதித் துறையில் பன்முகப்படுத்தல் போதாமலிருப்பது (……)

* * *

2.1.3 வினாப்பத்திரம் I இற்கான விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
01.	4	26.	5
02.	5	27.	1
03.	4	28.	1
04.	1	29.	3
05.	1	30.	1
06.	5	31.	3
07.	2	32.	1
08.	2	33.	4
09.	5	34.	1
10.	5	35.	2
11.	5	36.	3
12.	1	37.	4
13.	4	38.	3
14.	4	39.	2
15.	1	40.	2
16.	3	41.	3
17.	1	42.	5
18.	2	43.	4
19.	5	44.	2
20.	4	45.	2
21.	4	46.	4
22.	1	47.	5
23.	5	48.	1
24.	3	49.	4
25.	2	50.	5

அட்டவணை 5

சரியான ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் ஆகும்.

2.1.4 வினாத்தாள் I இற்கு விடையளித்துள்ள விதம் பற்றிய அவதானிப்பு



வரைபு - 05

மேற்குறித்த வரைபின்படி வினாப்பத்திரம் **I** இல் 9 ஆவது வினா இலகுதன்மை மிகவும் குறைந்த வினாவாகும். அதன் இலகுதன்மை 10% ஆகும். அதேபோல் இலகுதன்மை கூடிய வினா 2 ஆவது வினா ஆவதுடன் அதன் இலகுதன்மை 97% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் கூடுதலான சதவீதத்தினர் 2 ஆவது வினாவுக்கு சரியாக விடையளித்துள்ளனர்.

2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவிற்குமான விடைகளை தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் சதவீதமாக.

வினா இலக்கம்	சரியான விடைகள	ஒவ்வொரு தெரிவையும் தெரிவுசெய்த பரீட்சார்த்திகளின் சதவீதம்					
		1	2	3	4	5	விடையைத் தெரிவு செய்யாதோர்
1	4	5.0%	1.1%	0.8%	92.1%	1.0%	0.0%
2	5	0.6%	0.8%	1.0%	0.9%	96.6%	0.0%
3	4	3.9%	1.5%	6.5%	86.3%	1.7%	0.0%
4	1	48.4%	12.2%	5.6%	22.6%	11.0%	0.2%
5	1	77.4%	8.7%	5.0%	4.2%	4.4%	0.3%
6	5	12.3%	10.4%	4.4%	7.0%	65.7%	0.2%
7	2	19.9%	57.1%	5.2%	9.6%	8.1%	0.2%
8	2	9.1%	59.2%	10.9%	15.4%	4.8%	0.5%
9	5	7.0%	36.3%	34.3%	11.8%	10.2%	0.4%
10	5	31.2%	12.1%	8.0%	14.6%	33.3%	0.8%
11	5	5.9%	17.4%	6.5%	14.1%	55.3%	0.7%
12	1	93.5%	2.2%	0.9%	1.9%	1.5%	0.1%
13	4	1.4%	11.9%	8.6%	74.6%	3.4%	0.1%
14	4	7.6%	11.6%	21.6%	52.0%	6.7%	0.5%
15	1	62.5%	12.4%	7.2%	9.3%	8.3%	0.3%
16	3	3.1%	2.4%	74.5%	12.2%	7.4%	0.5%
17	1	61.2%	4.9%	22.3%	4.2%	7.2%	0.3%
18	2	18.2%	31.1%	39.5%	6.0%	5.1%	0.1%
19	5	17.7%	6.7%	16.6%	2.8%	55.8%	0.4%
20	4	10.2%	26.1%	21.1%	12.9%	29.2%	0.5%
21	4	5.5%	12.1%	7.4%	66.9%	7.8%	0.3%
22	1	29.9%	18.4%	17.0%	10.6%	23.7%	0.5%
23	5	18.9%	5.7%	26.5%	11.6%	35.9%	1.4%
24	3	6.2%	10.3%	45.8%	9.5%	27.8%	0.4%
25	2	9.4%	69.8%	8.6%	7.4%	4.3%	0.4%
26	5	21.0%	17.4%	15.1%	15.8%	29.7%	0.9%
27	1	76.9%	8.1%	6.8%	4.8%	3.0%	0.5%
28	1	76.7%	9.6%	2.6%	4.0%	7.0%	0.1%
29	3	11.9%	15.7%	44.7%	11.3%	16.0%	0.4%
30	1	38.4%	12.4%	18.2%	11.6%	18.8%	0.6%
31	3	23.2%	12.6%	53.5%	4.7%	5.7%	0.2%
32	1	52.7%	9.0%	22.1%	13.3%	2.6%	0.3%
33	4	6.8%	16.1%	9.3%	48.3%	19.0%	0.6%
34	1	23.8%	23.5%	13.3%	16.0%	22.6%	0.8%
35	2	9.8%	48.4%	15.6%	10.6%	15.2%	0.4%
36	3	3.4%	10.9%	71.5%	4.2%	9.6%	0.4%
37	4	9.2%	15.6%	7.4%	48.6%	18.5%	0.7%
38	3	19.6%	19.6%	38.3%	10.9%	10.7%	1.0%
39	2	10.4%	55.9%	6.4%	18.6	8.3%	0.4%
40	2	13.7%	55.5%	9.4%	12.2%	8.8%	0.4%
41	3	15.5%	9.3%	61.0%	9.1%	4.8%	0.3%
42	5	20.0%	8.9%	4.3%	13.1%	53.4%	0.3%
43	4	9.2%	8.3%	30.6%	38.1%	13.2%	0.5%
44	2	21.5%	50.9%	8.8%	11.5%	7.0%	0.3%
45	2	11.4%	27.1%	11.8%	26.5%	22.5%	0.7%
46	4	9.1%	17.2%	25.0%	42.2%	5.9%	0.6%
47	5	30.3%	15.6%	15.8%	7.0%	30.4%	0.9%
48	1	34.1%	7.7%	6.9%	24.6%	26.2%	0.5%
49	4	11.0%	17.1%	25.9%	21.7%	23.1%	1.1%
50	5	7.8%	20.2%	8.4%	25.7%	37.5%	0.5%

அட்டவணை 06

- ★ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.
- ★ வினாவிற்கு விடையைத் தெரிவை செய்யாத அல்லது ஒரு தெரிவை விட அதிக தெரிவை தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதம் விடைகளைத் தெரிவு செய்யாதோர் எனக் காட்டப்பட்டுள்ளது.

2.1.6 வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

★ பரீட்சார்த்திகளில் 97% சதவீதமானோர் 2ஆம் வினாவுக்கு சரியாக விடையளித்துள்ளனர்.
,,

★ பரீட்சார்த்திகளில் 10% சதவீதத்திற்கு குறைவான சதவீதத்தினர் 9ஆம் வினாவிற்கு சரியாக விடையளித்துள்ளனர்.

★ முழுமையாக நோக்கும் போது 1, 2, 3, 5, 6, 12, 13, 15, 16, 17, 21, 25, 27, 28, 36, 41 ஆகிய வினாக்களுக்கு 60% அல்லது 60% இற்கு அதிகமான சதவீதத்தினர் சரியாக விடையளித்துள்ளனர்.

★ 9, 10, 18, 20, 22, 23, 26, 30, 34, 38, 43, 45, 47, 48, 49, 50 ஆகிய வினாக்களுக்கு பரீட்சார்த்திகளில் 40% இற்குக் குறைவானவர்கள் சரியாக விடையளித்துள்ளனர்.

★ 9ஆம் வினாவுக்கு குறைந்தளவான பரீட்சார்த்திகள் (10.2%) சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். அதற்கு காரணம் பரீட்சார்த்திகளுக்கு கேள்வி விதி தொடர்பான சரியான விளக்கமின்மையாகும். “A பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும் போது B பண்டத்தில் கேள்வி அதிகரித்துள்ளது” என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை. இவ் இரண்டு பண்டங்களும் நிரப்புப் பண்டங்கள் என்பது அவற்றிற்கிடையில் எதிர்த்தொடர்பு காணப்படுகின்றமையால் தெளிவாகத் தெரிகின்றது. எனினும் A பண்டத்திற்கான துலங்கல் பொதுவான முறையில் காட்டப்பட்டு B பண்டத்தில் கேள்வி அதிகரிப்பதன் மூலம் அது ஒரு சாதாரண பண்டம் என்பதைக் காட்டுகின்றது. எனினும் A பண்டத்தின் விலை வீழ்ச்சியடைந்தாலும் அதன்மீது கேள்வித்தொகை ஏற்படுத்தும் துலங்கல் தொடர்பாக விளக்கமின்மையால் அது சாதாரண பண்டம் எனக் கூறமுடியாது. எனினும் மேல்வாரியான நிலைமையை மட்டும் கவனத்தில் கொள்வதன் மூலம் சரியான விடையை தெரிவு செய்ய முயற்சித்தமையின் காரணமாக அதிகமானோர் 2ஆம் 3ஆம் தெரிவுகளை தெரிவு செய்துள்ளனர்.

★ 10ஆம் வினா குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி தொடர்பான வினாவாகும். சரியான விடையைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகள் 33.3% சதவீதத்தினர் ஆகும். எனினும் பிழையான விடையான முதலாவது தெரிவை தெரிவு செய்த பரீட்சார்த்திகள் 31.2% ஆவர். இதற்கு காரணம் கணிப்பிடுவதில் ஏற்பட்ட பிரச்சினைகளாகும்.

குறுக்குக் கோள்வி நெகிழ்ச்சி

$$\frac{\Delta Q_x\%}{\Delta P_y\%} = 3 = \frac{30\%}{\Delta P\%}$$

$$= \Delta P\% = \frac{30\%}{3}$$

$$= \Delta P\% = 10\%$$

இதன்படி விலை 10% இனால் அதிகரிக்க வேண்டும். அவ்வதிகரிப்பைச் சார்புரீதியாகக் கருதி ரூ.80 இலிருந்து ரூ.90 வரை என்பதனை பெரும்பாலான மாணவர்கள் தெரிவு செய்துள்ளனர். எனினும் ரூ.80 இன் 10% ஆவது ரூ.8 ஆகும். இதன்படி ரூ.80 இலிருந்து ரூ.88 வரை விலை மாற்றமடைய வேண்டும்.

★ 18 ஆவது வினா நிறை போட்டிச் சந்தையின் பண்புகள் தொடர்பானதாகும். சரியான விடையை 31.1% தெரிவு செய்துள்ளனர். எனினும் பிழையான 3ஆவது தெரிவினை 39.5% தெரிவு செய்துள்ளனர். இதற்கான முக்கிய காரணம் சந்தையையும் நிறுவனத்தையும் சரியான முறையில் விளங்கிக்கொள்ளாமையாகும். நிறுவனத்தின் கேள்வி வளையி பூரண நெகிழ்ச்சியுடையதாகக் காணப்பட்ட போதிலும் சந்தைக் கேள்வி வளையி இடமிருந்து வலமாக சாயும். அதேபோல பிழையான விடையான போதிலும் பெரும்பாலான மாணவர்கள் அது ஒரு நீண்ட விடையாகக் காணப்படாமையினால் அதனைத் தெரிவு செய்திருக்கலாம்.





- ★ வினா இலக்கம் 20 இற்கு 13% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். இது உற்பத்தி செலவு மற்றும் வருமானம் தொடர்பான இலாபம் தொடர்பான வினாவாகும். தரப்பட்ட தரவுகளின் படி பின்வரும் தகவல்கள் கிடைக்கும்.

வெளியீடு	விலை	மொத்த வருமானம்	மொத்தச் செலவு	மொத்த மாறும் செலவு
500	6	3000 (500 × 6)	5000	4000 (5000 - 1000)

இத்தரவுகளின் படி வெளியீடு 500 ஆக இருக்கும் போது எல்லை வருமானமும் எல்லைச் செலவும் (ரூ.6) சமமாகும் என்பது தெளிவாகிறது. எனவே அது இலாபம் உழைக்கும் வெளியீடாகும். எனினும் அச்சந்தர்ப்பத்தில் மொத்த வருமானம் மொத்த மாறும் செலவையேனும் ஈடு செய்வதற்கு போதுமானதாக இல்லை என்பது மேற்குறித்த தரவுகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இதனால் நிறுவனம் உற்பத்தியினைத் தவிர்க்க வேண்டும்.

- ★ 22ஆம் வினாவிற்கு 29.9% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அது மொத்த தேசிய நிலையான மூலதன உருவாக்கம் தொடர்பான பிரச்சினையாகும். மொத்த தேசிய மூலதன உருவாக்கத்தில் உள்ளடங்குவனவற்றை சரியாக இனங்காணாமையே இதற்கு காரணமாகும். புதிய வீடுகளின் நிர்மாணம நுகர்வில் உள்ளடக்கப்பட்டாலும் அது தேசிய கணக்குகளில் நிலையான மூலதன பண்டமாகவே உள்ளடக்கப்படுகின்றது.

- ★ 23ஆம் வினாவிற்குக் 35.9% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். இதற்கான காரணம் தேறிய வெளியீட்டையும் விலை மட்ட மாற்றத்தையும் சரியாக விளங்கிக் கொள்ளாமையாகும். நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8% இனால் அதிகரித்துள்ளது. அதேவேளை தேறிய வெளியட்டில் 2% வீழ்ச்சியும் காணப்படுகின்றது. இதன் மூலம் வெளியீடு 2% குறைவடைந்தமையால் 8% இனால் விலை மட்டம் அதிகரித்துள்ளமையினால் வெயியீட்டின் பெயரையும் பெறுமதி அதிகரித்துள்ளமை தெளிவாகின்றது. இதன்படி பொதுவிலை மட்டம் 10% இனால் அதிகரிக்க வேண்டும்.

- ★ 26ஆவது வினாவிற்கு 29.7% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். இது பேரினப் பொருளாதார சமநிலை தொடர்பான பிரச்சினையாகும். செலவுக் குணகம் , வரிக் குணகம் ஆகியவற்றின் காரணமாக வெளியீடு மாற்றமுறும் விதம் தொடர்பான விளக்கமின்மை இங்கு காணப்படுகின்றது. இவ் வினாவின்படி பூரண வேலை வாய்ப்பு மட்டம் வரை வருமானம் அதிகரிக்க வேண்டிய அளவு 1000(ΔY) பில்லியன் ரூபா ஆகும்.

M PS= 0.2 ஆகக் காணப்படுவதால் செலவுக் குணகம் $= \frac{1}{1 - MPC}$ ஆவதுடன் வரிக் குணகம் $= \frac{MPC}{1 - MPC}$ ஆகும்.

அதன்படி செலவுக் குணகம் $\frac{1}{0.2} = 5$ ஆகும்.

வரிக் குணகம் $\frac{0.8}{0.2} = 4$ ஆகும்.

$\Delta Y = K \times \Delta E$ என்பதால்,

$1000 = 5 \times \Delta E = 200$ ஆகும். அதாவது நிறை தொழில் வருமான மட்டத்தை அண்மிப்பதற்கு அரச செலவு 200 ஆக அதிகரிக்க வேண்டும்.

$\Delta Y = K_T \times \Delta T$ என்பதால்,

$1000 = 4 \times \Delta T = -250$ ஆகும். அதாவது நிறை தொழில் மட்டத்தை அண்மிப்பதற்கு வரியானது 250 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட வேண்டும்.

மேற்குறித்த வினாவில் தரப்பட்டுள்ள விடைகளுக்கமைய சரியான விடையாக அமைவது வரியானது 250 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட வேண்டும் என்ற ⑤ ஆவது விடையாகும்.

- ★ 30 ஆம் வினாவிற்கு 38.4% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். வட் வரியினால் கேள்வி, செலவு ஆகியவற்றினால் பணவீக்கத்திற்கு ஏற்படும் தாக்கம் இவ் வினாவில் வினவப்பட்டுள்ளது. இங்கு வரி அறவிடப்படுவதன் மூலம் பண்டங்களின் விலை அதிகரிப்பதனால் கேள்வி குறைவடைந்தமையும் இதனால் கேள்வித் தூண்டல் பணவீக்கம் குறைவதனையும் பரீட்சார்த்திகள் தெரிந்துகொள்ள வேண்டும். அதேபோன்று வரியின் காரணமாக செலவுகள் அதிகரித்து வழங்கல் குறைவடைதல் பணவீக்கம் ஏற்படுவதற்கு காரணமாக அமைவதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

- ★ 34 ஆம் வினாவிற்கு 23.8% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். புதிய நிதிக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிவு இற்றைப்படுத்தப்படாமையே இதற்குக் காரணமாகும். மத்திய வங்கி அறிக்கையை பரிசீலனை செய்வது போன்றவற்றின் மூலம் அறிவை இற்றைபடுத்திக் கொள்ள முடியும்.

- ★ 38 ஆவது வினாவிற்கு 38.3% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். மத்திய வங்கி அறிக்கை போன்ற மூலாதாரங்களை பரிசீலனை செய்வதன் மூலம் அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும். இலங்கையின் அரச வருமானம், அரச செலவுகள், அடிப்படைப் பொருளாதாரத் தரவுகள் பற்றிய விளக்கம் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

- ★ 43 ஆம் வினாவிற்கு 38.1% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். சென்மதி நிலுவை அட்டவணை மாதிரி, இரட்டைப்பதிவுக் கோட்பாடு ஆகியன பற்றிய சரியான விளக்கம் காணப்படாமை இதற்குக் காரணமாகும். இரட்டைப்பதிவுக் கோட்பாட்டின் அடிப்படையில் சென்மதி நிலுவை அட்டவணையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதில் பயிற்சி பெறத்தக்கவாறு கற்றல் கற்பித்தற் செயன்முறையை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும்.

- ★ 45 ஆம் வினாவின் மூலம் மானிட அபிவிருத்தியில் அடங்கியுள்ள கூறுகள் பற்றிய விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. எனினும் அதனை சரியாக விளங்கிக்கொள்ளாமை காரணமாக இவ் வினாவின் இலகுதன்மை 27.1% ஆகும். இதன் உள்ளடக்கங்களை பற்றி விளங்கக்கொள்ள கூடிய வகையில் கற்றல் கற்பித்தற் செயன்முறையை ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

- ★ 47 ஆவது வினா பொருளாதாரமொன்றில் ஊழியப்படை பங்குபற்றல் விகிதாசாரத்தை கணிப்பிடுவது தொடர்பான வினாவாகும். இதற்கு 30.4% பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விடையளித்துள்ளனர். இதனைக் கணிப்பீடு செய்யும் முறைபற்றி மாணவர்கள் அறிந்திருக்காமை இதற்கான முக்கியமான காரணமாவதுடன் நிறை தொழில் விகிதாசாரரீதியாகவே தரப்பட்டுள்ளது. அது நிறை தொழில் குடித்தொகையாக மாற்றக்கொள்ள வேண்டும்.

குறை தொழில் குடித்தொகை = 3 மில்லியன்

நிறை தொழில் குடித்தொகை = $\frac{3}{20} \times 80$

$= 12$

ஊழியப்படையின் பங்குபற்றல் வீதம் = $\dfrac{\text{குறை தொழில் குடித்தொகை} \times \text{நிறை தொழில் குடித்தொகை}}{\text{வேலை செய்யும் வயதிலுள்ள சனத்தொகை}} \times 100$

$= \frac{3 + 12}{25} \times 100$

$= \frac{\not{15}}{\not{25}} \quad \frac{3}{5} = 0.6 \times 100$

$= \underline{60\%}$

- ★ 48 ஆம் வினாவிற்கு 34.1% பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். அறிவை இற்றைப்படுத்திக்கொள்ளக் கூடிய பல்வேறு மூலாதாரங்களை பரிசீலனை செய்வதற்கு ஊக்ககுவிக்கப்பட வேண்டும். விசேடமாக மத்திய வங்கி அறிக்கை மற்றும் சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களத் தகவல்களை இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் முக்கியமாகும்.

- ★ 49 ஆம் வினாவிற்கு 21.7% பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். ஒப்பீட்டு வருமானப் பரம்பலுக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பை அடிப்படையாகக் கொண்டு தர்க்கரீதியாக தீர்மானம் எடுக்கும் ஆற்றல் விருத்தி செய்யக்கூடிய விதத்தில் கற்றல் கற்பித்தற் கற்பித்தற் செயன்முறையை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- ★ 50 ஆம் வினாவிற்கு 37.5% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். தர்க்கரீதியாக விடைகளை ஒப்பிடுவதன் மூலம் சரியான விடைகயைத் தெரிவு செய்யும் ஆற்றல் விருத்தி செய்தல் வேண்டும். இலங்கையின் சமகாலப் பிரச்சினைகள், சவால்கள் என்பன பற்றிய சரியான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2 வினாத்தாள் II உம் விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும்

2.2.1 வினாத்தாள் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள் ஆகும்.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

உப பிரிவு 'அ' - அமைப்புக் கட்டுரை வினாக்கள் 05.

உப பிரிவு 'ஆ' - அமைப்புக் கட்டுரை வினாக்கள் 05.

குறைந்தது ஒரு பகுதியிலிருந்து 02 வினாக்களையேனும் தெரிவு செய்து 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

இறுதிப் புள்ளிக் கணிப்பிடல்.

வினாத்தாள் I இற்கு = 100 புள்ளிகள்

வினாத்தாள் II இற்கு = 100 புள்ளிகள்

இறுதிப்புள்ளிகள் 200 ÷ 2 = 100 புள்ளிகள்

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்.

★ **வினாத்தாள் II இற்கான விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள் வரைபு 2, 3, 4.1, 4.2 ஆகிய வரைபுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. .**

உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) பின்வரும் வரைபடமானது குடிசார் (civil) மற்றும் இராணுவப் பொருட்களை மட்டும் உற்பத்திசெய்யும் பொருளாதாரம் ஒன்றிற்கான ஓர் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகின்றது. இப்பொருளாதாரம் தற்போது புள்ளி K இல் உற்பத்தி செய்வதாகக் கருதுக.



(அ) இப்பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியானது அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவுகளைக் காட்டுகின்றதா ? விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரமானது யுத்தம் ஒன்றிற்குச் செல்ல வேண்டியேற்பட்டால், உற்பத்திப்புள்ளி K இலிருந்து பெரும்பாலும் எப்புள்ளியை நோக்கி நகரக் கூடும் ? விளக்குக. (02 புள்ளிகள்)

(இ) பொருளாதாரமானது ஒரு மந்த நிலையினை அடைந்தால், உற்பத்திப்புள்ளி K இலிருந்து எப்புள்ளியை நோக்கி நகரக் கூடும் ? விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) தொழிற்பிரிப்பானது ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டத்தினை ஏன் அதிகரிக்கின்றது என்பதனை விளக்கும் **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் உதவியுடன் அருமை என்னும் எண்ணக்கருவினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகள் எவ்வாறான தொழிற்பாடுகளைப் புரிகின்றன ? (03 புள்ளிகள்)

(v) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(i) (அ)

– ஆம் **(01 புள்ளி)**

இப்பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியானது உற்பத்தித் தானத்திற்குக் குழிவானது (வெளிநோக்கி குவிவானது), ஆகவே குடிசார் பொருளின் ஒவ்வொரு மேலதிக அலகு உற்பத்தி செய்யப்படும் போது இராணுவப் பொருட்களைப் பொறுத்தவரையில் உற்பத்திக்கான சந்தர்ப்பச் செலவானது (அமையச் செலவானது) (கோட்டின் சரிவினால் குறிப்பிடப்படும்) அதிகரிக்கின்றது. அதேபோல் அதிகளவான இராணுவப் பொருட்கள் உற்பத்தி செய்யவதற்கான குடிசார் பொருட்களின் அடிப்படையில் சந்தர்ப்பச் செலவு அதிகரிக்கின்றது. **(01 புள்ளி)**

(i) (ஆ)

– புள்ளி T **(01 புள்ளி)**

இந்நாடு யுத்தம் புரிவதற்காக அதிக (ஆனால் ஒட்டு மொத்தமாக அல்ல) இராணுவப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய வகையில் ஒருவினைத்திறனான புள்ளியைத் தெரிவு செய்யும். புள்ளி M ஒரு தெரிவாக இருப்பதற்கான சாத்தியம் இல்லை ஏனெனில் அப்புள்ளியில் எவ்வித குடிசார் பொருட்களின் உற்பத்தியும் இடம்பெறமாட்டாது. ஒரு குறைந்தளவான வாழ்க்கைத் தரத்தினைப் பேணுவதற்கு ஓரளவுக்கேனும் குடிசார் பொருட்களின் உற்பத்தி இடம்பெற வேண்டும். **(01 புள்ளி)**

(i) (இ) - புள்ளி U. **(01 புள்ளி)**

ஒரு மந்தநிலை என்பது மொத்தக்கேள்வியில் ஏற்படும்ஒரு குறைவு காரணமாக பொருளாதாரமானது ஆகக்குறைந்தது ஆறு மாதத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடையும் நிலைமையாகும். இது ஒரு குறுங்கால விடயம் என்பதுடன் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவினைப் (சாத்திய வெளியீடு) பாதிக்கமாட்டாது. ஆனால் மந்தமானது பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவின் குறைப்பயன்பாட்டிற்கு வழிவகுக்கும். இதன்விளைவாக ஒரு மந்தமானது உற்பத்தி சாத்திய வளைகோட்டிற்கு கீழே உள்ள ஒரு புள்ளியினால் குறித்துக்காட்டப்படும். **(01 புள்ளி)**

(ii) தொழிற்பிரிப்பானது ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டத்தினை ஏன் அதிகரிக்கின்றது என்பதனை விளக்கும் **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

- ஒரு குறிப்பிட்ட சிறிய தொழிலில் அடையும் சிறப்புத்தேர்ச்சியானது தொழிலாளர்களை அவர்கள் அனுகூலங்களைக் கொண்டிருக்கும் உற்பத்திச் செயன்முறையின் பகுதிகளில் கவனம் செலுத்துவதற்கு அனுமதிக்கும். மக்கள் வேறுபட்ட நுட்பத்தேர்ச்சிகள், திறமைகள், மற்றும் விருப்பங்களைக் கொண்டிருப்பதனால் அவர்கள் ஏனைய தொழில்களை விடவும் சில தொழில்கள்களில் சிறப்பாகத் தொழிற்படுவர். மக்கள் சிலவற்றில் சிறப்பாகவும் சிலவற்றில் சிறப்பாகத் தொழிற்பட முடியாத நிலைமை-யயும் கொண்ட சேர்க்கைகளை உற்பத்தி செய்வதை விடவும் தாம் சிறப்பாகத் தொழிற்படும் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடைந்தால் அவர்கள் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்தவர்களாக இருப்பர்.

- குறிப்பிட்ட தொழில்களில் சிறப்புத்தேர்ச்சியினைக் கொண்ட தொழிலாளர்கள் விரைவாகவும் உயர்தரமாகவும் உற்பத்தி செய்வதற்கு பெரும்பாலும் கற்றுக் கொள்வர். உண்மையில், சிறப்புத்தேர்ச்சியடைந்த தொழிலாளர்கள் அவர்களது வேலையினை விரைவாகவும் சிறப்பாகவும் செய்வதற்கான புத்தாக்க வழிகளை பரிந்துரைப்பதற்கு ஏதுவாக பெரும்பாலும் தமது தொழில்களைப் பற்றி போதியளவிற்கு அறிந்து கொள்வர்.

- சிறப்புத்தேர்ச்சியானது அளவுத்திட்ட சிக்கன அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வியாபாரங்களை அனுமதிக்கின்றது. இதன் கருத்து யாதெனில் பல பொருட்களைப் பொறுத்தவரையில் உற்பத்தி மட்டம் அதிகரிக்கும் போது ஒவ்வொரு தனி அலகினையும் உற்பத்தி செய்வதற்கான சராசரிச் செலவு வீழ்ச்சியடைகின்றது என்பதாகும்.

- இயந்திரங்களின் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது: ஒரு பொருளின் உற்பத்தியினை சிறிய தொழிற்பாடுகளாகப் பரிப்பதன் மூலம் தொழிற்பிரிப்பானது இயந்திரப்பயன்பாட்டினையும் அதன் அறிமுகத்தினையும் ஊக்குவிக்கின்றது.

  ஒரு தொழிலிருந்து மற்றைய தொழிலுக்கு நகர்வதில் நேரம் விரயமாக்கப்படாத காரணத்தினால் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனானது அதிகரிக்கின்றது.

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது மூன்று காரணங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)

(iii) ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் உதவியுடன் அருமை என்னும் எண்ணக்கருவினை விளக்குக. (04 புள்ளிகள்)

- விருப்பங்கள் அவற்றினைப் திருப்திப்படுத்தும் வரையறுக்கப்ட்ட வளங்களை விடவும் எப்போதும் கூடுதலாகக் காணப்படுவதனை அருமை என்பதன் மூலம் விளங்கப்படுத்த முடியும். மனித விருப்பங்கள் வரையறையற்றவை. ஆனால் ஒரு நாடு வரையறையற்ற மனித விருப்பங்களைத் திருப்திப்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளது. **(02 புள்ளிகள்)**



- அருமை என்பது பொருட்கள் சேவைகளின் அடையப்படமுடியாத சேர்க்கைகளினால் உற்பத்திச் சாத்திய எல்லைக்கு அப்பால் காட்டப்படும். உற்பத்திச் சாத்திய எல்லையானது b, c, d போன்ற சேர்க்கைகளை a போன்ற அடையப்படமுடியாத சேர்க்கைகளிலிருந்து பிரிக்கின்றது.

(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி. விளக்கத்திற்கு 01 புள்ளி. மொத்தம் 02 புள்ளிகள்)

(iv) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகள் எவ்வாறான தொழிற்பாடுகளைப் புரிகின்றன ? (03 புள்ளிகள்)

(அ) தகவல் வழங்குதல் / **சமிக்ஞை செய்யும் தொழிற்பாடு**
(ஆ) **தூண்டுதல் /ஊக்குவிப்புத் தொழிற்பாடு**
(இ) பங்கீட்டு / ஒதுக்கீட்டுத் தொழிற்பாடு

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)

(v) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- சமூகத் தேவைகள் புறக்கணிக்கப்படலாம்.

- நுகர்வோர் இறைமையோ தெரிவு செய்வதற்கான இறைமையோ காணப்படாது. சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

- வளங்களினதும் சொத்துக்களினதும் தனியார் சொத்துடைமை காணப்படாதபோது பொருளாதார முறைமையானது மக்கள் கடினமாக வேலை செய்வதற்கான ஊக்குவிப்புக்களை வழங்க மாட்டாதுஃ அதிகாரிகள் ஊக்குவிப்புக்களைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும்.

- போதியளவு ஊக்குவிப்பு இன்மையால் புத்தாக்க அபிவிருத்திகள் தடைப்படலாம்.

- போட்டித்தன்மை வழங்கப்படமாட்டாது.

- கறுப்புச் சந்தைகள் பாரியளவில் உருவாகக்கூடும்.
- ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவப் பிரச்சினைகள் காணப்படும்.
- பணிக்குழு ஆட்சி
- போட்டித்தன்மை காணப்படாது.
- அரச தனியுரிமை
- மெதுவான பொருளாதார வளர்ச்சி

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது நான்கு காரணங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும்



01 ஆம் வினாவிற்கு சுமார் 96.38% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 10% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 18% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 33% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 39% உம்
புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.



இவ் வினா 05 பகுதிகளைக் கொண்டுள்ளது. இலகுதன்மை குறைந்த பகுதி (i)ஆ ஆகக் காணப்படுவதுடன், அதன் இலகுதன்மை 51% ஆகும். அதேபோல் பகுதி (iv) இலகுதன்மை கூடிய பகுதியாகும். அதன் இலகுதன்மை 82% ஆகும்.

முதலாம் வினாவை 96.38% பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். இங்கு முதலாம் பகுதியின் 'அ' பகுதியின் இலகுதன்மை 76% ஆகும். அதிகரிக்கும் சந்தர்ப்பச் செலவு எண்ணக்கரு பற்றி பெரும்பாலானோர் விளக்கம் பெற்றிருந்தமை தெளிவாகின்றது.

எனினும் 'ஆ' பகுதியின் இலகுதன்மை 51% ஆகும். இவ் வினாவின் மூலம் யுத்தமொன்று ஏற்பட்டால் உற்பத்திப் புள்ளி K புள்ளியில் இருந்து எந்தப் புள்ளியை நோக்கி நகரக்கூடும் என வினவப்பட்டிருந்தது. இங்கு K புள்ளி வளையியின் மீது அமைந்துள்ளது. அது உற்பத்தியின் வினைத்திறனின் நிலவும் புள்ளியாகக் காணப்படுவதுடன் குடிசார் பொருட்களின் உற்பத்திக்கு கூடுதலான வளப்பங்கீடு இடம்பெற்றுள்ளது. எனினும் யுத்தமொன்று ஆரம்பிக்கும்போது கூடிய வளப்பங்கீடு செய்ய வேண்டி ஏற்படுவது இராணுவப் பொருட்களுக்காகும். எனவே K இல் இருந்து T வரை புள்ளி நகரும்.

இங்கு II, III, IV ஆகிய உபபகுதிகளுக்கான விடை தொடர்பில் குறைந்தளவான பிரச்சினையே காணப்பட்டது. இலகுதன்மை முறையே 71%, 74%, 82% ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சிறந்த முறையில் விடையளித்திருந்தமை தெளிவாகின்றது.

எனினும் உபபகுதி V இன் இலகுதன்மை 54% ஆகும். இதன் மூலம் கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலம் வினவப்பட்டுள்ளது. எனினும் விடை போதுமானதன்று.

- போட்டியின்மையினால் வினைத்திறனற்ற உற்பத்தி உருவாதல்.
- போதியளவு மானியங்கள் வழங்கப்படாமையால் புத்தாக்க உற்பத்தி இடம்பெறாமை அரச தனியுரிமை, அதிகாரவாதம், மந்தமான பொருளாதார வளர்ச்சி, கட்டுப்பாட்டு விலையால் கறுப்புச்சந்தை உருவாதல், நுகர்வோர் தனித்துவம் தெரிவுச் சுதந்திரமும் இல்லாதிருத்தல் என்பன வெற்றிகரமாக விடையில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

02 ஆம் வினா

2. (i) ஒரு பொருளுக்கான கேள்வி மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய அப்பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கேள்வி மாற்றத்தினையும் கேள்வித் தொகை மாற்றத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) 'நிரம்பல் விதியினை' வரைவிலக்கணப்படுத்தி, நிரம்பல் விதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு பொருளுக்கு வழங்கப்படும் உற்பத்தி மானியமானது உற்பத்தியாளர்கள் அனுபவிக்கும் மிகையினை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதனை ஒரு கேள்வி, நிரம்பல் வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(v) ஓர் அத்தியாவசிய நுகர்வுப் பொருள் மீது அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையினை விதிப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை ? (05 புள்ளிகள்)

2. (i) ஒரு பொருளுக்கான கேள்வி மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய அப்பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

- தொடர்புடைய பிரதியீட்டு மற்றும் இணைப்புப் பொருட்களின் விலை
- நுகர்வோரின் வருமானமும் செல்வமும்
- நுகர்வோரின் சுவையும் விருப்பங்களும்
- எதிர்கால விலைகள் பற்றிய எதிர்பார்ப்புக்கள்
- விளம்பரங்கள்
- வரிவிதிப்பு மட்டம்
- சனத்தொகை / கொள்வனவாளர்களின் எண்ணிக்கை
- காலநிலை போன்ற மனிதனால் கட்டுப்படுத்தப்படமுடியாத காரணிகள்

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது மூன்று காரணங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)

(ii) கேள்வி மாற்றத்தினையும் கேள்வித் தொகை மாற்றத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

- ஒட்டு மொத்த கேள்வி வளையியிலும் ஏற்படும் ஒரு நகர்வினையே கேள்வி மாற்றம் என்பது குறிக்கின்றது. அதாவது ஒவ்வொரு விலையிலும் கொள்வனவு செய்யப்படக்கூடிய தொகையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். **(02 புள்ளிகள்)**
- ஒரு கேள்வி வளையி மீதான எந்தவொரு புள்ளியும் ஒரு குறித்துரைக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் குறிக்கின்றது. ஆகவே இது ஒரு குறிப்பிட்ட கேள்வித் தொகையினைக் குறிக்கின்றது. ஒரு கேள்விக்கோட்டின் வழியேயான ஒரு நகர்வே கேள்வித் தொகை மாற்றம் எனக் குறிப்பிடப்படுகின்றது. **(02 புள்ளிகள்)**

(iii) 'நிரம்பல் விதியினை' வரைவிலக்கணப்படுத்தி, நிரம்பல் விதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

- ஏனையவை மாற்றமடையாமல் இருக்கும் போது ஒரு பொருளுக்கான விலை உயர்வாக இருக்கும் போது நிரம்பல் செய்யப்படும் தொகை அதிகமாக இருக்கும் என்பதனையும் விலை குறைவாக இருக்கும் போது நிரம்பல் செய்யப்படும் தொகையும் குறைவாக இருக்கும் என்பதனையும் நிரம்பல் விதி விளக்குகின்றது.

- **மாற்று விடை:**

ஏனையவை மாற்றமடையாமல் இருக்கும் போது சந்தை விலையும் நிரம்பல் தொகையும் ஒன்றுக்கொன்று நேர்க்கணிய தொடர்பினைக் கொண்டிருக்கும். **(02 புள்ளிகள்)**

- எல்லைச் செலவு அதிகரிப்பதனால் இது ஏற்படுகின்றது. எந்தவொரு பொருளினதும் உற்பத்தி செய்யப்படும் தொகை அதிகரிக்கும் போது அப்பொருளை உற்பத்தி செய்வதற்கான எல்லைச் செலவும் அதிகரிக்கின்றது. ஒரு பொருளுக்குக் கிடைக்கும் விலையினை விட அப்பொருள் உற்பத்திக்கான எல்லைச் செலவானது அதிகமாகக் காணப்பட்டால் அப்பொருளை உற்பத்தி செய்வது பெறுமதியானதாக இருக்கமாட்டாது. ஆகவே ஏனையவை மாறாத போது, ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது உற்பத்தியாளர்கள் கூடிய எல்லைச் செலவினை தாங்குவதற்கு விருப்பமுடையவர்களாக இருப்பதுடன் அப்பொருளின் உற்பத்தியினையையும் அதிகரிக்கின்றனர். **(02 புள்ளிகள்)**

(iv) ஒரு பொருளுக்கு வழங்கப்படும் உற்பத்தி மானியமானது உற்பத்தியாளர்கள் அனுபவிக்கும் மிகையினை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதனை ஒரு கேள்வி, நிரம்பல் வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)



(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

மானியத்திற்கு முன்னரான உற்பத்தியாளர் மிகை	மானியத்திற்கு பின்னரான உற்பத்தியாளர் மிகை	உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம்
C + D	**B + C + D + E**	**B + E ஆல் அதிகரித்தல்** **(02 புள்ளிகள்)**

(v) ஓர் அத்தியாவசிய நுகர்வுப் பொருள் மீது அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையினை விதிப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை ? (05 புள்ளிகள்)

- பற்றாக்குறை (மிகைக் கேள்வி): உற்பத்திப் பொருட்கள் உயர் விலைக்கு விற்கப்படும் கறுப்புச் சந்தைஃ பாதாளச் சந்தை உருவாக்கத்திற்கு வழிவகுக்கும்

- விலையல்லாத பங்கீட்டு முறைமை: நீண்ட வரிசை அல்லது முன்பதிவு செய்தல் நுகர்வோருக்கு பொருட்கள் வழங்கப்படும் கட்டளைகளை தீர்மானிக்கலாம்.

- தேடுல் செலவுகள் : நேரம் மற்றும் பண விரயம்

- நலன்புரி விளைவுகள் : உற்பத்தியாளர் மிகை குறைவடைதல், நுகர்வோர் மிகை அதிகரித்தல்

- வினைத்திறனற்ற வள ஒதுக்கீடுகள்: உற்பத்தியில் ஒதுக்கீட்டு வினைத்திறனின்மை

- பொருள் நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமானது. உயர்ந்தபட்ச விலை இல்லாவிட்டால் சிலர் அப்பொருளைக் கொள்வனவு செய்வதற்கு இயலாமல் போகலாம். விலையினைக் குறைப்பதன் மூலம் சார்பளவு வறுமை குறைக்கப்படக்கூடும். இது வறிய மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்களின் நலனை பாதுகாப்பதுடன் மேம்படுத்தவும் செய்யும்.

- உற்பத்தியாளர்கள்குறைவான விற்பனை விலையையும் வருமான வீழ்ச்சியையும் எதிர்நோக்குவர்.

- அரசாங்கம் விளைவுகளைத் தீர்த்து வைப்பதற்கான செலவினத்தை அதிகரிக்க வேண்டியிருக்கும் – மானியம் வழங்கல் அல்லது நேரடியாக பொருளை வழங்குதல் நிரம்பல் வளையியினை வலது பக்கம் நகர்த்தும். இந்நடவடிக்கை ஏனைய துறைகள் மீதான அரச செலவினத்தை குறைக்கக் கூடும் என்பதால் இது ஒரு சந்தர்ப்பச் செலவினையும் கொண்டிருக்கும்.

(தலா 01 புள்ளி வீதம ஏதாவது ஐந்து காரணங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)

2 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



02 ஆம் வினாவிற்கு சுமார் 98% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 27% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 27% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 27% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 19% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றுள் இலகுதன்மை கூடிய பகுதி (i) ஆகும். அதன் இலகுதன்மை 89% ஆகும். பகுதி (iv) இலகுதன்மை குறைந்த பகுதியாகும். அதன் இலகுதன்மை 31% ஆகும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 53% ஆகும். கேள்வி மாற்றம், கேள்வித் தொகை மாற்றம் என்பவை இரு வேறு எண்ணக்கருக்கள் என்பதனை சரியாக விளங்கிக் கொள்ளாமையால் இலகுதன்மை நடுத்தர மட்டத்தில் காணப்படுகிறது.

கேள்வி மாற்றம் என்பது விலை தவிர ஏனைய காரணிகளின் மாற்றம் காரணமாக கேள்வி வளையி முழுமையாக வலது பக்கம் அல்லது இடது பக்கமாக நகருதலாகும். கேள்வித்தொகை மாற்றம் என்பது ஏனைய காரணிகளின் மாறாத நிலையில் குறித்த பண்டத்தின் விலை மாற்றமடைவதால் ஒரே கேள்விக் கோட்டின் வழியே ஒரு புள்ளியில் இருந்து வேறொரு புள்ளிக்கு பயனிப்பதை குறிக்கும். எனவே கேள்வி வளையியின் பல்வேறு புள்ளிகளின் மூலம் காட்டப்படுவது கேள்வித் தொகை மாற்றமாகும்.

பகுதி (iv) இன் இலகுதன்மை 31% ஆகும். இங்கு உற்பத்தி மானியம் வழங்கப்படும் போது உற்பத்தி மிகையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை கேள்வி நிரம்பல் வரைபடத்தின் மூலம் காட்டப்படுமாறு கேட்கப்பட்டுள்ளது. எனினும் நிரம்பல் வளையி S_1 ஆக வலதுபுறம் நகர்வடைந்த பின்னர் புதிய சமநிலைப் புள்ளியில் இருந்து பழைய நிரம்பல் கோடு வரை நிலைக்குத்துக் கோடொன்றை வரைந்து அது விலைப் புள்ளியில் தொடர்புபடும் P_2 விலை உற்பத்தியாளருக்கு கிடைப்பதால் P_0P_2U மிகை உற்பத்தியாளருக்குக் கிடைக்குமென்பதைத் தெளிவுபடுத்தல் வேண்டும்.



உபபகுதி (v) இன் இலகுதன்மை 40% என்பதால் அது மாணவர்களுக்கு அவ்வளவு இலகுவான வினாவல்ல என்பது தெளிவாகின்றது. அது இலகுவானதொரு வினாவாக இருந்தபோதிலும் மாணவர்களுக்கு விடையளிக்க முடியாது போயுள்ளது.

பண்டங்களைத் தேடித்திரியவேண்டியேற்படுதல், காலம், செலவு ஏற்படல், வரிசைகளில் நிற்கவேண்டி ஏற்படல், மிகைக் கேள்வி காரணமாக கறுப்புச் சந்தை விலை உருவாதல் ஆகியவற்றுடன் சமூக நலன்கள் கிடைக்காமல் போகின்றமையும் தெளிவுபடுத்தப்படுதல் வேண்டும்.

03 **ஆம் வினா**

3. (i) ஒரு நிறுவனத்தின் குறுங்கால செலவு வளையிகளின் வடிவத்துடன் குறைந்து செல்லும் விளைவு விதி எவ்வாறு தொடர்புபடுகின்றது ? (04 புள்ளிகள்)

(ii) குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி மொத்தச் செலவிற்கும் சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு என்ன நடக்கின்றது ? விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வருவன எவ்வாறு சராசரி மொத்தச் செலவினையும் சராசரி மாறும் செலவினையும் பாதிக்கின்றன ?

(அ) மின்சாரக் கட்டணத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(ஆ) கூலி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(இ) பிரதான நிறைவேற்று அதிகாரியின் சம்பளத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(ஈ) ஒரு நிறுவனத்தின் கட்டடங்களுக்கான வாடகைச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டிச் சந்தைக் கட்டமைப்பிற்கும் சிலருரிமைச் சந்தைக் கட்டமைப்பிற்கும் இடையிலான **இரண்டு** வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) சாதாரண இலாபத்தையும் அசாதாரண இலாபத்தையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

3. (i) ஒரு நிறுவனத்தின் குறுங்கால செலவு வளையிகளின் வடிவத்துடன் குறைந்து செல்லும் விளைவு விதி எவ்வாறு தொடர்புபடுகின்றது ? (04 புள்ளிகள்)

- ஒரு நிறுவனமானது நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும் போது மாறும் உள்ளீட்டின் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் படிப்படியாக வீழ்ச்சியடைகின்றன என்பதை குறைந்து செல்லும் விளைவு விதியானது குறிக்கின்றது.

(02 புள்ளிகள்)

- செலவுத் தொழிற்பாடும் உற்பத்தித் தொழிற்பாடும் ஒன்றுடன் ஒன்று பொருந்திக் காணப்படுகின்றன. செலவுத் தொழிற்பாடானது உற்பத்தித் தொழிற்பாட்டிலிருந்து தருவிக்கப்படலாம்.

- **MC** மற்றும் **AVC** வளையிகள் **U** வடிவத்தில் காணப்படும் அதேவேளை **MP** மற்றும் **AP** வளையிகள் தலைகீழ்ப்படுத்தப்பட்ட **U** வடிவத்தில் காணப்படுகின்றன. **AP** அதன் உச்சத்தில் காணப்படும் போது **AP** யானது **MP** இக்குச் சமனாகக் காணப்படும். எனினும் **AVC** அதன் இழிவில் காணப்படும் போது **AVC** யானது **MC** இற்குச் சமனாகக் காணப்படும்.

- **MP** அதன் உச்சத்தில் காணப்படும் போது **MC** அதன் அதி தாழ்ந்த புள்ளியில் காணப்படும்.

- மாறும் உள்ளீடு மேலும் அதிகரிக்கையில் **MP** வீழ்ச்சியடைவதுடன் **MC** அதிகரிக்கின்றது. ஆனால் **AP** தொடர்ந்தும் அதிகரிப்பதுடன் **AVC** தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது. **AP** உச்சநிலைக்கு அதிகரித்து அதன்பின்பு வீழ்ச்சியடைகின்றது. **AVC** ஆனது அதி தாழ்ந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் அதிகரிக்கின்றது.

- **MP** அதிகரித்து பின்னர் வீழ்ச்சியடைகின்றது. **MP** யானது **AP** யின் உச்சப்புள்ளியில் அதனை ஊடறுத்துச் செல்வதுடன் **AP** யினை விடவும் வேகமாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது. **MC** வீழ்ச்சியடைந்து பின்னர் அதிகரிக்கின்றது. **MC** யானது **AVC** யின் அதி தாழ்ந்த புள்ளியில் அதனை ஊடறுத்துச் செல்வதுடன் **AVC** யினை விடவும் வேகமாக தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது.

(ஏதாவது இரண்டு தொடர்புகளுக்கு தலா 01 புள்ளி)

(ii) குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி மொத்தச் செலவிற்கும் சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு என்ன நடக்கின்றது ? விளக்குக. (04 புள்ளிகள்)

- ஒரு நிறுவனமானது குறுங்காலத்தில் தனது வெளியீட்டினை அதிகரிக்கும் போது சராசரி மாறும் செலவு வளையியும் சராசரி மொத்தச் செலவு வளையியும் ஒன்றையொன்று நெருங்கிச் செல்லும்.

(01 புள்ளி)

- சராசரி மொத்தச் செலவிற்கும் சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான வேறுபாடு சராசரி நிலையான செலவாகும்.

- அதிகமாக உற்பத்தி செய்யும் போது சராசரி நிலையான செலவானது முக்கியமல்லாததாக ஆகுவதால் (குறைவடைந்து செல்வதால்) சராசரி மொத்தச் செலவானது சராசரி மாறும் செலவினை நெருங்கிச் செல்லும்.

- பெரும்பாலானசெலவுகள்மாறும்செலவுகளாகஆகுவதால்நிலையானசெலவானதுபுறக்கணிக்கத்தக்கதாக ஆகின்றது.

- அங்கே எப்போதும் ஒரு இடைவெளி காணப்படும். ஆனால் ஒவ்வொரு மேலதிக அலகும் உற்பத்தி செய்யப்படும் போது இடைவெளியானது பெருமளவிற்கு சுருங்கிச் செல்லும்.

(03 புள்ளிகள்)

(iii) பின்வருவன எவ்வாறு சராசரி மொத்தச் செலவினையும் சராசரி மாறும் செலவினையும் பாதிக்கின்றன ?

(அ) மின்சாரக் கட்டணத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(ஆ) கூலி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(இ) பிரதான நிறைவேற்று அதிகாரியின் சம்பளத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(ஈ) ஒரு நிறுவனத்தின் கட்டடங்களுக்கான வாடகைச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (04 புள்ளிகள்)

(அ) சராசரி மொத்தச் செலவு (ATC) வீழ்ச்சியடைகின்றது சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடைகின்றது (AVC).

(ஆ) சராசரி மொத்தச் செலவு (ATC) வீழ்ச்சியடைகின்றது சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடைகின்றது(AVC).

(இ) சராசரி மொத்தச் செலவு (ATC) அதிகரிக்கின்றது சராசரி மாறும் செலவில் (AVC) மாற்றமில்லை.

(ஈ) சராசரி மொத்தச் செலவு (ATC) அதிகரிக்கின்றது சராசரி மாறும் செலவில் மாற்றமில்லை(AVC).

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டிச் சந்தைக் கட்டமைப்பிற்கும் சிலருரிமைச் சந்தைக் கட்டமைப்பிற்கும் இடையிலான **இரண்டு** வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

நிறைபோட்டிச் சந்தை	சிலருரிமைச் சந்தை
- அதிக எண்ணிக்கையிலான விற்பனையாளர்கள்	- சிறிய எண்ணிக்கையிலான விற்பனையாளர்கள்
- ஓரினமாக (ஒரே தன்மையான) பொருட்கள்	- ஓரினமாக (ஒரே வகையான) அல்லது வேறு படுத்தப்பட்ட பொருட்கள்
- உள்வருதற்கும் வெளியேறுவதற்குமான சுதந்திரம்	- பிரவேசத் தடை
- ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலைமை காணப்படாமை.	- ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலைமை காணப்படல்.
- நிறுவனம் ஒரு விலை ஏற்போன்	- நிறுவனம் ஒரு விலை அமைப்போன் (உருவாக்குவோன்)
- சந்தை பற்றிய பூரண அறிவு	- சந்தை பற்றிய தகவல்கள் இரகசியமானவை.
- விளம்பரம் இல்லை.	- விளம்பரம் மற்றும் விற்பனைச் செலவுகள் அதிகமாகக் காணப்படும்.

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது இரண்டு சேர்க்கைகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

(v) சாதாரண இலாபத்தையும் அசாதாரண இலாபத்தையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

- சாதாரண இலாபம் என்பது நிகழ்காலப்பாவனையில் தனது சேவை கிடைக்கத்தக்கதாக இருப்பதற்கு முயற்சியாளர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் குறைந்தபட்சக் கொடுப்பனவாகும்.

- இது நிறுவனத்தில் முயற்சியாண்மைச் செயற்பாடுகளை ஆற்றுவதற்காகச் செய்யப்படும் கொடுப்பனவாக இருப்பதால் சாதாரண இலாபம் என்பது நிறுவனத்தினுடைய ஓர் உள்ளார்ந்த செலவாகக் காணப்படும்.

- முயற்சியாளரால் இக்கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்படாதவிடத்து தொழிலிருந்து அவர் வெளியேறக்கூடும்.

(02 புள்ளிகள்)

- அசாதாரண (Abnormal) இலாபம் அல்லது அருநிலையான (supernormal) இலாபம் என்பன உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாக உருவாகும் சாதாரண இலாபத்திற்கு மேலதிகமாக முயற்சியாளரால் உழைக்கப்படும் இலாபங்களாகும்.

- இது நிறுவனத்தின் மொத்த வருமானத்திலிருந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட அனைத்து வளங்களினதும் மொத்த அமையச் (சந்தர்ப்பச்) செலவினைக் கழித்த பின்னர் காணப்படும் ஒரு மிகையாகும்.

- அசாதாரண இலாபங்கள் வியாபாரத்தில் இடரபாயங்களையும் நிச்சியமற்றதன்மையினையையும் தாங்குவதனால் உருவாகின்றன. இவை தனியுரிமை அனுகூலங்கள் மற்றும் வாய்ப்புக் காரணிகளாலும் ஏற்படுகின்றன. **(02 புள்ளிகள்)**

மாற்று விடை:

- மொத்த வருமானம் (TR) மொத்தச் செலவிற்கு (TC) சமனாக இருக்கும் போது கூட ஒரு நிறுவனம் சாதாரண இலாபத்தினை உழைக்கக்கூடும். ஆனால் மொத்த வருமானம் மொத்தச் செலவை விடக் கூடுதலாகக் காணப்படும் போது மட்டுந்தான் ஒரு நிறுவனம் அசாதாரண இலாபத்தினை உழைக்க முடியும்.

(02 புள்ளிகள்)

3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



03 ஆம் வினாவிற்கு சுமார் 59.91% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 22% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 32% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 30% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 16% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 05 பகுதிகளைக் கொண்டுள்ளது. அதிகுறைந்த இலகுதன்மையைக் கொண்ட பகுதி (ii) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 25% ஆகும். இலகுதன்மை கூடிய பகுதி (iv) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 81% ஆகும்.

மூன்றாம் வினாவினைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகள் 59.91% ஆவர். இது 5 உபபகுதிகளைக் கொண்டது.

உபபகுதி II இன் இலகுதன்மை 25% ஆகும். 3ஆம் வினாவின் ஆகக்குறைந்த இலகுதன்மை இப்பிரிவில் காணப்படுகின்றது. சராசரி மொத்த செலவு (ATC) ஆனது, சராசரி மாறும் செலவு (AVC), சராசரி நிலையான செலவு (AFC) என்பனவற்றின் கூட்டுத்தொகைக்கும் அதே போன்று வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவு படிப்படியாக வீழ்ச்சியடைவதனையும் வெளியீடு அதிகரிக்கும் போது AVC, ATC ஆகிய இரு வளையிகளுக்கிடையிலான இடைவெளி குறைவடைவதனையும் சரியாக விளங்கிக்கொள்ளாமையே இதற்கான காரணமாகும். புள்ளிவிபரரீதியான உதாரணங்களையும் வரைபுபொன்றையும் பயன்படுத்தி இத் தொடர்பை விளக்குதல் வேண்டும்.

உபபகுதி III ஆனது அ, ஆ, இ, ஈ என மேலும் 4 உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் இலகுதன்மை முறையே 54%, 60%, 40%, 45% ஆகும். நிலையான செலவு, மாறும் செலவு என்பவற்றை வேறுபடுத்தி இனங்காணாமை இலகுதன்மை நடுநிலையில் இருக்கக் காரணமாகும். மாறும் செலவு, நிலையான செலவுகளை வேறுபடுத்தி இனங்காணக்கூடிய வகையில் பல்வேறு உதாரணங்களைப் பயிற்சிகளைச் செய்விப்பதன் மூலம் தேர்ச்சிகளை விருத்தியடையச் செய்தல் வேண்டும்.

04 ஆம் வினா

4. (i) வருமான வட்டப் பாய்ச்சலிலிருந்தான 'உட்பாய்ச்சல்கள்' மற்றும் 'வெளிப்பாய்ச்சல்கள்' என்பவற்றினால் கருதப்படுவது யாது என்பதனை விளக்கி, அரசாங்க நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவில் ஏற்படும் வெளிப்பாய்ச்சல்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

(ii) மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் பிரதான கூறுகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை விளக்கி, சந்தை விலைகளில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எவ்வாறு தேறிய தேசிய வருமானத்திலிருந்து வேறுபடுகின்றது என்பதனைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு வர்த்தக சகட ஓட்ட விரிவாக்கமானது பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்டிருக்கும் என நாம் ஏன் கருதுகின்றோம் ? (04 புள்ளிகள்)

(v) ஒரு பொருளாதாரத்திற்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்படுகின்றன. (அனைத்துத் தொகைகளும் ரூபா பில்லியன்களில் உள்ளன.)

வகை	பெறுமதி
மொத்த முதலீடு (I)	200
வரிகள் (T)	550
ஏற்றுமதிகள் (X)	375
நுகர்வுச் செலவு (C)	700
மாற்றல் கொடுப்பனவுகள் (T_R)	300
இறக்குமதிகள் (M)	325
அரசாங்கக் கொள்வனவுகள் (G)	300

(அ) இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தின் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் யாது ? (02 புள்ளிகள்)

4. (i) வருமான வட்டப் பாய்ச்சலிலிருந்தான 'உட்பாய்ச்சல்கள்' மற்றும் 'வெளிப்பாய்ச்சல்கள்' என்பவற்றினால் கருதப்படுவது யாது என்பதனை விளக்கி, அரசாங்க நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவில் ஏற்படும் வெளிப்பாய்ச்சல்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

- ஏனைய குழுவின் செலவினத்திலிருந்து உருவாகாத நிறுவனங்களினால் அல்லது வீட்டுத் துறையினரால் பெற்றுக் கொள்ளப்படும் கொடுப்பனவுகளையே உட்பாய்ச்சல்கள் குறிக்கின்றன.

- உட்பாய்ச்சல்கள் தன்னிச்சையான மொத்த செலவினத்தை அதிகரிக்கின்றன. இவை வருமானத்தின் ஒரு பல்விரிவாக்க உருவாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியவை.

- உட்பாய்ச்சல் என்பது வீட்டுத்துறை செலவினத்தினால் ஏற்படாத ஒரு வருமானப் பெறுகையாகும்.

- உட்பாய்ச்சல்கள் முதலீடு (I) , அரசாங்கக் கொள்வனவுகள் (G), மற்றும் ஏற்றுமதிகள் (X) போன்ற தன்னிச்சையான செலவினங்களை உள்ளடக்குகின்றன. **(02 புள்ளிகள்)**

- வெளிப்பாய்ச்சல்கள் நிறுவனங்கள் அல்லது வீட்டுத்துறையினர் பெற்றுக்கொள்ளும் கொடுப்பனவுகளைக் குறிக்கின்றன. வெளிப்பாய்ச்சல்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு மீது நிறுவனங்கள் அல்லது வீட்டுத்துறையினர் செலவிடப்படாதவையாகும்.

- ஒரு வெளிப்பாய்ச்சல் என்பது வருமான– செலவின ஒழுக்கிலிருந்தான சாத்தியமான செலவினத்தின் திரும்பப் பெறுதலை அல்லது போக்கு மாற்றத்தினை குறிக்கின்றது. **(01 புள்ளி)**

- ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்த செலவினத்தின் வெளிப்பாய்ச்சல்கள் பின்வருமாறு:
  சேமிப்பு (S) + வரிகள் (T) + இறக்குமதிகள் (M) **(01 புள்ளி)**

(ii) மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் பிரதான கூறுகள் யாவை ? (04 புள்ளிகள்)

- கட்டிடங்களும் கட்டிடம் சார் அமைப்புக்களும் (குடியிருப்புக் கட்டிடங்கள், குடியிருப்பு அல்லா கட்டிடங்கள் மற்றும் ஏனையவை)

- இயந்திரமும் சாதனமும் (கருவியும்)

- போக்குவரத்துச் சாதனங்கள்

- நில மேம்பாடும் பெருந்தோட்ட அபிவிருத்தியும்

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)

மாற்று விடை

- வதிவிடங்கள் / குடியிருப்புக்கள்

- ஏனைய கட்டிடங்களும் கட்டிடம் சார் அமைப்புக்களும்
  வதிவிடம் அல்லாத கட்டிடங்கள்
  இயந்திரமும் சாதனமும் (கருவியும்)
  போக்குவரத்துச் சாதனங்கள்
  ஆயுத முறைமைகள்

- பயிரிடப்பட்ட உயிரியல் சொத்துக்கள்: இனப்பெருக்கத்திற்கான கால்நடை, பண்ணை, இழுவை மாடுகள், திராட்சைத் தோட்டம், பழத்தோட்டம், மீள் உற்பத்திப் பொருட்களைத் தரக்கூடிய ஏனைய தாவரங்களும் மரங்களும்

- புலமைச் சொத்துப் பொருட்கள் (கனிய வள ஆய்வும் மதிப்பீடும், கணனி மென்பொருளும் தரவுத் தளமும், களியாட்டம், கலை இலக்கியங்கள்)

- உற்பத்தி செய்யப்படாத நாணயமல்லாச் சொத்துக்கள் (இயற்கை வளங்கள், ஒப்பந்தங்கள், குத்தகைகள், அனுமதிப்பத்திரங்கள் நன்மதிப்பு, தொழிற்குறிப் (Brand) பெயர்கள்)

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை விளக்கி, சந்தை விலைகளில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எவ்வாறு தேறிய தேசிய வருமானத்திலிருந்து வேறுபடுகின்றது என்பதனைக் காட்டுக. (04 புள்ளிகள்)

- மொத்த உள்ளநாட்டு உற்பத்தி (GDP) என்பது ஒரு நாட்டில் ஒருவருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதிப் பொருட்கள் மற்றும் சேவைகளினது மொத்த சந்தைப் பெறுமதியாகும்.

- இப்பெறுமதியினைக் கணிப்பதற்கு மூன்று அணுகுமுறைகள் காணப்படுகின்றன: உற்பத்தி அணுகுமுறை, வருமான அணுகுமுறை, மற்றும் செலவீட்டு அணுகுமுறை.

- உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒரு கணக்கீட்டுக் காலப்பகுதியில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளினதும் கூட்டிய பெறுமதிகளின் மொத்தத் தொகையுடன் பொருட்கள் மற்றும் உற்பத்தி மீதான வரிகளைக் கூட்டி மானியத்தினைக் கழித்து கணிக்கப்படுகின்றது.

- வருமான முறையானது உற்பத்திச் செயன்முறையினால் உருவாக்கப்பட்ட அனைத்துக் காரணி வருமானங்களின் கூட்டுத் தொகையாக சந்தை விலைகளில் மொத்த வெளியீட்டின் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின்) பெறுமதியினை கணிக்கின்றது. இது கூலிகள், வட்டி, இலாபங்கள மற்றும் வாடகைகள் என்பவற்றின் கூட்டுத்தொகையுடன் தேறிய நேரில் வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பற்றின் பணமல்லாக் கட்டணங்களையும் சேர்க்கவருவதாகும். **(01 புள்ளி)**

- செலவீட்டு அணுகுமுறையிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பதற்கு நாம் பொருளாதாரத்தின் அனைத்து இறுதி வெளியீட்டினையும் கொள்வனவு செய்வதற்குத்தேவையான செலவினங்களைக் கூட்ட வேண்டும். இதனால், செலவீட்டு முறையின் கீழ் மொத்த வெளியீட்டின் பெறுமதியானது நுகர்வு (C), முதலீடு (I), அரசாங்கக் கொள்வனவுகள் (G), மற்றும் தேறிய ஏற்றுமதிகள் (NX) என்பவற்றினைக் கூட்ட வரும் மொத்தத் தொகையாகக் காணப்படும். **(01 புள்ளி)**

- சந்தை விலைகளில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது
  அ) பெறுமானத்தேய்வு (நிலையான மூலதன நுகர்வு) மற்றும்
  (ஆ) வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் தேறிய காரணி முதன்மை வருமானம் என்பவற்றின் காரணமாக தேறிய தேசிய வருமானத்திலிருந்து வேறுபடுகின்றது.

- தேறிய தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி – பெறுமானத்தேய்வு + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் தேறிய காரணி வருமானம். **(01 புள்ளி)**

(iv) ஒரு வர்த்தக சகட ஓட்ட விரிவாக்கமானது பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்டிருக்கும் என நாம் ஏன் கருதுகின்றோம் ? (04 புள்ளிகள்)

- மந்தத்திலிருந்து (தாழ்வு மட்டத்திலிருந்து) பொருளாதாரம் மீட்சியடைவதே விரிவாக்கம் என அழைக்கப்படுகின்றது. வர்த்தக சகட ஓட்டக் காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கை அதிகரிக்கின்றது வெளியீடு அதிகரிப்பதுடன் வேலையின்மை வீழ்ச்சியடைகின்றது. உற்பத்தியானது சார்பளவில் இலகுவாக தற்போது காணப்படும் பயன்படுத்தப்படாத இயலளவினையையும் வேலையற்ற ஊழியர்களையும் மீளப்பயன்படுத்துவதன் மூலம் விரிவாக்கப்படுகின்றது.

.

- விரிவாக்கல் செயன்முறைக் காலப்பகுதியில் தற்போது காணப்படும் இயலளவின் பயன்பாட்டு வீதம் பிரதானமாக பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பின் காரணமாக மேம்பாடடைகின்றது. **(02 புள்ளிகள்)**

- பொருளாதார வளர்ச்சியானது ஒரு நீண்டகால நிகழ்வாகக் காணப்படுவதுடன் உற்பத்திச் சாத்திய எல்லையில் வலது பக்க நகர்வினையும் கொண்டிருக்கும். இதன் கருத்து யாதெனில் பொருளாதாரத்தின் சாத்திய வெளியீடானது காலப்போக்கில் விரிவாக்கமடைகின்றது என்பதாகும்.

- பொருளாதார வளர்ச்சிக்கான இரண்டு பிரதான மூலங்கள் காணப்படுகின்றன: (அ) நாட்டின் உற்பத்தித்திறன் வாய்ந்த வளங்களில் ஏற்படும் அதிகரிப்பு. இது பெரும்பாலும் மூலதனத்திரட்சி (புதிய மூலதன இருப்பு மீதான முதலீடு) வடிவத்தில் காணப்படும். (ஆ) தொழில்நுட்ப முன்னேற்றம். **(02 புள்ளிகள்)**

(v) ஒரு பொருளாதாரத்திற்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்படுகின்றன. (அனைத்துத் தொகைகளும் ரூபா பில்லியன்களில் உள்ளன.)

வகை	பெறுமதி
மொத்த முதலீடு (I)	200
வரிகள் (T)	550
ஏற்றுமதிகள் (X)	375
நுகர்வுச் செலவு (C)	700
மாற்றல் கொடுப்பனவுகள் (T_R)	300
இறக்குமதிகள் (M)	325
அரசாங்கக் கொள்வனவுகள் (G)	300

(அ) இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தின் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் யாது ? (02 புள்ளிகள்)

- GDP = C + I + G + X - M
  GDP = 700 + 200 + 300 + 375 - 325 **(01 புள்ளி)**
  GDP = 1250 (ரூபா. பில்லியன்) **(01 புள்ளி)**

- **தனிநபர் செலவிடத்தக்க வருமானம்** (Y_d):
  Yd = GDP – Taxes (T) + Transfers (Tr) **(01 புள்ளி)**
  Yd = 1250 - 550 + 300 = 1000 (Rs. billion) **(01 புள்ளி)**

4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



04 ஆம் வினாவிற்கு 17.23% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 38% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 35% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 23% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 04% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 05 பகுதிகள் உள்ளன. இலகுதன்மை குறைந்த பகுதி (ii) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 11% ஆகும். இலகுதன்மை கூடிய பகுதி (v) (அ) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 72%ஆகும்.

04ஆம் வினாவை தெரிவுசெய்த பரீட்சார்த்திகள் 17.23% ஆகும். முழு வினாத்தாளையும் நோக்குமிடத்து மிகக் குறைந்தளவானோரால் தெரிவு செய்யப்பட்ட வினா இதுவாகும். இது ஐந்து உபபகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

உபபிரவு (i) இன் இலகுதன்மை 54% ஆகும். இவ்வினாவின் உபபிரிவுகளாக வரையறுக்கப்படாவிட்டாலும் வினாவில் இரு பிரிவுகளாக விடை எதிர்பார்க்கப்படுகின்றது. இரு பிரிவுகளுக்கும் புள்ளிகள் பிரிக்கப்பட்டு வழங்கப்படும் என்பதில் கவனம் செலுத்தப்படாமையினால் மொத்தப்புள்ளியும் கிடைக்கவில்லை. எனவே வினாவை சரியாக வாசித்து கேட்கப்பட்டவற்றை சரியாக விளங்கிக்கொள்ளும் திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபிரவு (ii) இன் இலகுதன்மை 11% ஆகும். இது 4ஆம் வினாவில் அதிகுறைந்த இலகுதன்மையைக் கொண்ட பிரிவாகும். மொத்த நிலையான மூலதன வழங்கலின் உள்ளடக்கத்தை பெரும்பாலான பரீட்சார்த்திகள் எடுத்துக்காட்ட தவறியுள்ளனர். எனவே அது தொடர்பான சரியான உள்ளடக்கம் தொடர்பாக கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தற் செயன்முறையை மேற்கொள்ள வேண்டும்.

உபபிரவு (iii) இன் இலகுதன்மை 39% ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பீடு செய்யும்போது மூன்று வழிமுறைகளையும் பின்பற்றி விடையளிக்க வேண்டியிருந்தாலும், பொரும்பாலான பரீட்சார்த்திகள் ஒரு வழிமுறையில் மாத்திரம் விடையளித்துள்ளனர். எனவே விடையளிக்கும்போது மூன்று வழிமுறைகளையும் உள்ளடக்கி விடைகளை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். அதே போன்று தேசிய கணககீட்டு எண்ணக்கருக்கள் தெளிவாக உறுதிப்படுத்தப்படும் விதத்தில் பயிற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும்.

உபபிரவு (iv) இன் இலகுதன்மை 31% ஆகும். வணிகச்சுற்றோட்டத்தின் வளர்ச்சிக் கட்டமும் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட எண்ணக்கருக்கள் என்பன சரியாக இனங்காணப்படவில்லை. வணிகச்சுற்றோட்டத்திற்கு உற்பத்திச் சாத்திய வளையி என்பவற்றைப் பயன்படுத்தி மேற்குறித்த எண்ணக்கருக்கள் விளங்கும் விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறை இடம்பெற வேண்டும்.

உபபிரவு (v) ஆனது 'அ', 'ஆ' என இரு உபபிரிவுகளைக் கொண்டது. அவற்றின் இலகுதன்மை முறையே 72%, 37% ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுவது தொடர்பான திறன் பரீட்சார்த்திகளிடம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் தனிநபர் செலவிடத்தக்க வருமானத்தை கணிப்பிடுவதில் அதிக கடினத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளனர். மொத்த தேசிய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யும் எண்ணக்கருக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும்.

05 ஆம் வினா

5. (i) எளிய பொருளாதாரம் ஒன்றிற்கான மொத்த நுகர்வுச் சார்பானது $C = 100 + 0.8Y$ எனவும் முதலீடு $I = 200$ எனவும் தரப்படுவதாகக் கருதுக.

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம் யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) சமநிலையில் சேமிப்பு மட்டம் யாது ? (02 புள்ளிகள்)

(இ) சில காரணங்களினால் பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டு மட்டமானது 1 700 ஆகக் காணப்பட்டால் தன்விருப்பற்ற (involuntary) இருப்பின் திரட்சி மட்டமானது எந்தளவாக இருக்கும் ? (02 புள்ளிகள்)

(ii) அரசாங்கக் கொள்வனவுகளில் (G) ஏற்படும் ரூபா 500 மில்லியன் குறைப்பானது வரியில் (T) ஏற்படும் ரூபா 500 மில்லியன் அதிகரிப்பை விட ஏன் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக வீழ்ச்சியினை உருவாக்கும் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (Y) ரூபா 6 000 மில்லியன் எனவும் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் ரூபா 5 100 மில்லியன் எனவும் அரசாங்க வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 200 மில்லியன் எனவும் நுகர்வுச் செலவினம் ரூபா 3 800 மில்லியன் எனவும் வர்த்தகப் பற்றாக்குறை ரூபா 100 மில்லியன் எனவும் கருதுக.

(அ) சேமிப்பு (S) யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டின் (I) அளவு யாது ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்கச் செலவினம் (G) யாது ? (02 புள்ளிகள்)

(iv) "தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமானது தேசிய வருமானத்தின் நிறைதொழில் மட்டத்திற்குச் சமமாக இருக்க வேண்டிய **அவசியமில்லை.**" இக்கூற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(அ)

- **சமனிலை வருமான மட்டம்:** $Y = C + I$

$Y = 100 + 0.8Y + 200$

$Y = 300 + 0.8Y$

$Y - 0.8Y = 300$

$0.2Y = 300; \quad Y = 1500$

(ஆ)

- **சமனிலையில் சேமிப்பு மட்டம்:** $S = Y - C$

$S = Y - \{(100 + 0.8\,(1500)\}$

$S = 1500 - (100 + 1200)$

$S = 1500 - 1300 = 200$

(இ)

தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி மட்டம்:

சமனிலை வருமான மட்டமானது மொத்த வெளியீடு மீதான மொத்தச் செலவினத்தைப் பிரதிபலிக்கின்றது. மொத்த வெளியீட்டின் பெறுமதி மொத்தச் செலவினத்தைவிடக் கூடுதலாகக் காணப்படும் போது அங்கு தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி காணப்படும். இது மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கும் வெளியீடு மீதான மொத்தச் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாட்டிற்குச் சமனாகக் காணப்படும்.

$1700 - 1500 = 200$ (தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி)

(02 புள்ளிகள்)

(இ)

தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி மட்டம்:

சமனிலை வருமான மட்டமானது மொத்த வெளியீடு மீதான மொத்தச் செலவினத்தைப் பிரதிபலிக்கின்றது. மொத்த வெளியீட்டின் பெறுமதி மொத்தச் செலவினத்தைவிடக் கூடுதலாகக் காணப்படும் போது அங்கு தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி காணப்படும். இது மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கும் வெளியீடு மீதான மொத்தச் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாட்டிற்குச் சமனாகக் காணப்படும்.

1700 – 1500 = 200 (தன்விருப்பற்ற இருப்பின் திரட்சி)

(02 புள்ளிகள்)

(ii) அரசாங்கக் கொள்வனவுகளில் (G) ஏற்படும் ரூபா 500 மில்லியன் குறைப்பானது வரியில் (T) ஏற்படும் ரூபா 500 மில்லியன் அதிகரிப்பை விட ஏன் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக வீழ்ச்சியினை உருவாக்கும் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

- ரூபா 500 மில்லியனினால் அரசாங்கக் கொள்வனவில் ஏற்படும் ஒரு குறைப்பு மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீது ஒரு பாரிய சுருக்க பெருக்கி விளைவினைக் கொண்டிருக்கும். ஏனெனில் இது அரசாங்கச் செலவினத்தில் செய்யப்பட்ட ஆரம்பக் குறைப்புக்கு சமனான தொகையினால் நேரடியாகவே மொத்தக் கேள்வியினைக் குறைக்கின்றது. **(02 புள்ளிகள்)**

- மறுபக்கத்தில் வரிவிதிப்பில் ஏற்படும் ரூபா 500 மில்லியன் அதிகரிப்பு வரியில் ஏற்பட்ட ஆரம்ப அதிகரிப்புக்கு சமமான தொகையினால் ஆரம்ப மொத்தக் கேள்வியைக் குறைக்கவில்லை. ஏனெனில் வரியில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்தக் கேள்வியினை நேரடியாகப் பாதிக்கவில்லை

- வரிகளில் ஏற்படும் அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தின் மீதே ஆரம்பத்தில் உணரப்படுகின்றது. அதன்பின்னர் செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒரு பகுதி நுகர்வின் மீது செலவிடப்படுவதனால் ஒரு சுருக்க பெருக்கி விளைவினை ஏற்படுத்துகின்றது.

(02 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (Y) ரூபா 6 000 மில்லியன் எனவும் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் ரூபா 5 100 மில்லியன் எனவும் அரசாங்க வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 200 மில்லியன் எனவும் நுகர்வுச் செலவினம் ரூபா 3 800 மில்லியன் எனவும் வர்த்தகப் பற்றாக்குறை ரூபா 100 மில்லியன் எனவும் கருதுக.

(அ) சேமிப்பு (S) யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டின் (I) அளவு யாது ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்கச் செலவினம் (G) யாது ? (02 புள்ளிகள்)

(அ) சேமிப்புத் தொகை (S) : Yd – C **(01 புள்ளி)**

S = 5100 – 3800 = 1300 **(01 புள்ளி)**

(ஆ) முதலீட்டின் அளவு (I):

S + T + M = I + G + X

S + T = I + G + (X - M)

1300 + 900 = I + 1100 + (- 100) **(01 புள்ளி)**

I = 2200 – 1000

= 1200 **(01 புள்ளி)**

(இ) அரசாங்கச் செலவினம் (G):

T = Y – Yd = 6000 – 5100 = 900 **(01 புள்ளி)**

BD = T – G = - 200; G = T + 200

G = 900 + 200 = 1100 **(01 புள்ளி)**

(iv) "தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமானது தேசிய வருமானத்தின் நிறைதொழில் மட்டத்திற்குச் சமமாக இருக்க வேண்டிய **அவசியமில்லை.**" இக்கூற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

- தேசிய வருமானம் ஒன்றில் அதிகரிப்பதற்கு அல்லது குறைவடைவதற்கு ஏதுவான போக்கு காணப்படாதவிடத்து சமனிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சமனிலை உருவாக்கப்படுவதற்கான தேவைப்பாடு இரண்டு மாற்று வடிவங்களை எடுக்கின்றது: (அ) திட்டமிடப்பட்ட செலவினம் உண்மையான வெளியீட்டுக்கு சமனாகக் காணப்படும், Y=E (வருமானம்- செலவீட்டு முறை) (ஆ) வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களுக்கு சமனாகக் காணப்படும், W=J (வெளிப்பாய்ச்சல்கள்- உட்பாய்ச்சல்கள் முறை).

(02 புள்ளிகள்)

- சமனிலை தேசிய வருமானமானது நிறை தொழில் மட்ட தேசிய வருமானத்திற்கு சமமானதல்ல என்பதனை ஞாபகத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். நிறை தொழில் மட்ட தேசிய வருமானம் என்பது அனைத்து வளங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு பொருளாதாரம் உற்பத்தி செய்யும் தேசிய வருமானமாகும். எனினும் நிறைதொழில் மட்டத்தில் சமனிலைத் தேசிய வருமானம் காணப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. பொருளாதாரமானது நிறைதொழில் மட்டத்திற்குக் குறைந்த ஒரு வெளியீட்டு மட்டத்தில் அல்லது நிறைதொழில் மட்டத்திற்கு மேலான ஒரு வெளியீட்டு மட்டத்தில் சமனிலையில் காணப்படலாம். சமனிலைக்கான தேவைப்பாடு யாதெனில் Y = E அல்லது W = J.

(02 புள்ளிகள்)

5 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



05 ஆம் வினாவிற்கு சுமார் 28.54% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 29% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 31% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 25% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 15% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 4 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன், (i), (iii) ஆம் பகுதிகள் 'அ', 'ஆ', 'இ' என மூன்று உபபகுதிகளைக் கொண்டுள்ளன. இவ்வினாவில் கூடிய இலகுதன்மை கொண்ட பகுதி (i) (அ) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 94% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி (iv) ஆவதுடன் அதன் இலகுதன்மை 26% ஆகும்.

05ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகள் 28.54% ஆகும். இது 4 உபபகுதிகளைக் கொண்டது.

உபபகுதி (i) ஆனது 'அ', 'ஆ', 'இ' என மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் இலகுதன்மை முறையே 94%, 76%, 51% ஆகும். 'அ', 'ஆ' பிரிவுகள் உயர்ந்த இலகுதன்மையைக் கொண்டுள்ள போதிலும் 'இ' பிரிவு நடுத்தர இலகுதன்மையைக் காட்டுவதற்கான காரணம் கலைச்சொற்கள் தொடர்பான தெளிவின்மையும் மிகை இருப்பை கணிப்பிடத் தெரியாமையுமாகும். உரிய கலைச்சொற்களை கையாண்டு குறித்த கணிப்பிடுதலை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (ii)இன் இலகுதன்மை 33% ஆகும். வரியும் அரச வருவாயும் இருமுறைகளில் மொத்த கேள்வியில் செல்வாக்கு செலுத்தும் என்பதை அறிந்திராமை இலகுதன்மை குறையக்காரணமாகும். அரசின் கொள்வனவு நேரடியாக மொத்த செலவில் தாக்கம் செலுத்துவதனையும் வரி செலவிடத்தக்க வருமானத்தில் தாக்கம் செலுத்தி அதன் பின் மொத்தக் கேள்வியில் தாக்கம் செலுத்துவதனையும் கவனத்திற் கொண்டு தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (iii) ஆனது அ, ஆ, இ என மூன்று உபபிரிவுகளைக் கொண்டது. அவற்றின் இலகுதன்மை 57%, 31%, 36% ஆகும். பரீட்சார்த்திகள் தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் மாற்றுமுறைகளைப் பயன்படுத்தி தேவையான கணிப்பீடு மேற்கொள்ளத் தவறியுள்ளனர். இவ்வாறானதொரு வினாவுக்கு விடையளிக்கும்போது எண்ணக்கருக்களை விளக்கவும் மாற்றுமுறைகளைப் பயன்படுத்தி புள்ளிவிபரரீதியான கணிப்பீடுகளில் ஈடுபடுவதற்கு பரீட்சார்த்திகளைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

உபபகுதி (iv) இன் இலகுதன்மை 26% ஆகும். சமநிலை தேசிய வருமானமட்டம், நிறைதொழில் மட்ட தேசிய வருமான மட்டம் ஆகியன தொடர்பான தெளிவான விளக்கமின்மை இலகுதன்மை குறைவடைய காரணமாகும். சமநிலைத் தேசிய வருமான மட்டம் ஏற்படுவதற்கு நிறைதொழில் மட்டம் கட்டாயமான நிபந்தனை அல்ல என்பதனையும் Y=E ,W=J ஆகவுள்ள எந்தவொரு நிலைமையிலும் பொருளாதாரம் சமநிலை அடையலாம் என்பதனையும் உறுதிப்படுத்தத்தக்க விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறை ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும்.

06 ஆம் வினா

உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) முதன்மைப் பணவீக்கத்தினையும் மையப் பணவீக்கத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) மொத்தச் செலவினத்தின் கூறுகளை இனங்கண்டு, ஒரு பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஏற்படும் அதிகரிப்பானது எவ்வாறு பணவீக்கத்திற்கு வழிவகுக்கக் கூடும் என்பதனை ஒரு வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகை கீழே தரப்படுகின்றது.

பொறுப்புக்கள்	பெறுமதி (ரூபா மில்லியன்)	சொத்துக்கள்	பெறுமதி (ரூபா மில்லியன்)
வைப்புக்கள்	180 000	ஒதுக்குகள்	100 000
		திறைசேரி முறிகள்	40 000
		கடன்கள்	40 000
மொத்த பொறுப்புக்கள்	**180 000**	**மொத்தச் சொத்துக்கள்**	**180 000**

(அ) சட்டரீதியான நியதி ஒதுக்கு வீதம் 10% எனில் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வங்கியிலிருந்து ரூபா 10 000 மில்லியன் வைப்புக்கள் மீளப் பெறப்பட்டால் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவிலான தொகை யாது ? (02 புள்ளிகள்)

(iv) உயர் வலுப் பணம் என்பதனால் நீர் கருதுவது யாது ? பொருளாதாரத்தில் மத்திய வங்கியானது உயர் வலுப் பண இருப்பின் மீது ஒரு பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்குமா ? காரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

(v) இலங்கை மத்திய வங்கியால் தற்போது பின்பற்றப்படுகின்ற பணக் கொள்கை வரைச்சட்டத்தின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

6. (i) முதன்மைப் பணவீக்கத்தினையும் மையப் பணவீக்கத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

- முதன்மைப் பணவீக்கம் என்பது நுகர்வோர் விலைச்சுட்டெண் (CPI) ஊடாக வெளியிடப்படும் மூல (Original) பணவீக்க இலக்கமாகும். முதன்மைப் பணவீக்கமானது ஒரு பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் எந்தளவிற்கு அனைத்துப் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் அதிகரித்துள்ளன என்பதனைப் பிரதிபலிக்கின்றது.

- முதன்மைப்பணவீக்க வீதம் என்பது ஒரு பிரதேசத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதைக் காட்டும் ஒரு வீத அளவீடாகும். முதன்மைப் பணவீக்கமானது வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதால் சாதாரண குடும்பத்திற்கு அதிகம் பயனுடையதாகும்.

- மிக அதிக ஏற்ற இறக்கங்களைப் பண்பாகக் கொண்ட உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகளை கவனத்தில் கொள்வதால் முதன்மைப்பணவீக்கம் அடிப்படையான பணவீக்க வீதத்தினை மிகச் சரியாகப் பிரிதிநிதித்துவப்படுத்த மாட்டாது. **(02 புள்ளிகள்)**

- உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களால் உருவாகும் பணவீக்கமானது அதிக ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாக இருப்பதுடன் நாணயக் கொள்கையினை அமுல்படுத்தும் அதிகாரசபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வானிலை மாற்றங்கள் அல்லது வெளியக அதிர்ச்சிகள் மற்றும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் விலையில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது வரிக் கொள்கைகள் என்பவற்றினால் பெரும்பாலும் உந்தப்படும் நிரம்பல் அதிர்ச்சிகளால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கும் உள்ளாகக்கூடியது.

- உலகம் முழுவதும் நாணயக் கொள்கையினை அமுல்படுத்தும் அதிகாரசபைகள் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உள்ள விலை ஏற்ற இறக்கங்களுக்குக் காரணமான கூறுகளை நீக்குவதனால் பெறப்படும் பணவீக்கத்தின் அடிப்படையான போக்கினை மூலாதாரமாகக் கொண்டே அவற்றின் பணக்கொள்கைத் தீர்மானங்களை எடுக்கின்றன. பணவீக்கத்தின் அடிப்படையான போக்கே மையப்பணவீக்கம் என அறியப்படுகின்றது. **(02 புள்ளிகள்)**

(ii) மொத்தச் செலவினத்தின் கூறுகளை இனங்கண்டு, ஒரு பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஏற்படும் அதிகரிப்பானது எவ்வாறு பணவீக்கத்திற்கு வழிவகுக்கக் கூடும் என்பதனை ஒரு வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

- நுகர்வுச் செலவினம் (C)
  முதலீட்டுச் செலவினம் (I)
  அரசாங்கக் கொள்வனவுகள் (G)
  தேறிய ஏற்றுமதிகள் (NX) **(02 புள்ளிகள்)**

- ஒரு பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வியானது மொத்த நிரம்பலை விடவும் அதிகரித்துக் காணப்படும்போது கேள்வித் தூண்டல் பணவீக்கம் நிகழுகின்றது. மொத்தச் செலவினம் அதிகரிக்கும் போது மொத்தக்கேள்வி வளையியானது வலப்பக்கமாக நகருகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுபோன்று AD வளையியானது AD1 இலிருந்து AD2 ஆக நகருகின்றது. இந்நகர்வின் ஆரம்ப விளைவு யாதெனில் சமனிலை வருமானம் Y2 இற்கு அதிகரிப்பதுடன் விலைமட்டமானது P2 இற்கு அதிகரிப்பதாகும்.



(விளக்கத்திற்கு 01 புள்ளி மற்றும் சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)

(iii) வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகை கீழே தரப்படுகின்றது.

பொறுப்புக்கள்	பெறுமதி (ரூபா மில்லியன்)	சொத்துக்கள்	பெறுமதி (ரூபா மில்லியன்)
வைப்புக்கள்	180 000	ஒதுக்குகள்	100 000
		திறைசேரி முறிகள்	40 000
		கடன்கள்	40 000
மொத்த பொறுப்புக்கள்	**180 000**	**மொத்தச் சொத்துக்கள்**	**180 000**

(அ) சட்டரீதியான நியதி ஒதுக்கு வீதம் 10% எனில் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வங்கியிலிருந்து ரூபா 10 000 மில்லியன் வைப்புக்கள் மீளப் பெறப்பட்டால் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவிலான தொகை யாது ? (02 புள்ளிகள்)

(அ)

இவ்வங்கி வழங்கக் கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை மிகை ஒதுக்குகளின் தொகைக்கு சமனாக இருக்கும்:

தற்போதுள்ள ஒதுக்குகள்	=	100,000
180, 000 வைப்புக்களுக்கான தேவைப்படும் ஒதுக்கு	=	180000 x 0.10 = 18,000
மிகை ஒதுக்குகள் = 100,000 – 18,000	=	82,000

(02 புள்ளிகள்)

(ஆ)

10,000 மில்லியன் வைப்புக்கள் மீளப்பெறப்பட்டதன் பின்னர் இவ்வங்கியானது வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவிலான தொகையானது மிகை ஓதுக்குகளின் தொகைக்குச் சமனாகக் காணப்படும்:

10,000 வைப்புக்கள் மீளப்பெறப்படும் போது ஒதுக்குகள் மற்றும் வைப்புக்கள் ஆகிய இரண்டும் 10, 000 இனால் குறைவடையும்.

தற்போதுள்ள ஒதுக்குகள்	=	100,000 – 10,000	=	90,000
170,000 வைப்புக்களுக்கான தேவைப்படும் ஒதுக்கு	=	170,000 x 0.10	=	17,000
மிகை ஒதுக்குகள்	=	90,000 – 17,000	=	73,000

(02 புள்ளிகள்)

(iv) உயர் வலுப் பணம் என்பதனால் நீர் கருதுவது யாது ? பொருளாதாரத்தில் மத்திய வங்கியானது உயர் வலுப் பண இருப்பின் மீது ஒரு பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்குமா ? காரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

- ஒதுக்கு அல்லது தளப்பணம் எனவும் அழைக்கப்படும் உயர்வலுப்பணமானது பணத்திரட்டுக்களின் மிகப் பாரியளவிலான இருப்பு உருவாக்கப்படுகின்ற பண அடித்தளமாகும். இது நாட்டின் பண நிரம்பலினைத் தீர்மானிக்கின்ற பிரதான காரணிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

- உயர்வலுப்பணமானது (அ) பொதுமக்கள் மற்றும் வணிக வங்கிகள் வைத்திருக்கும் நாணயத்தாள்கள் மற்றும் (ஆ) வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைத்துள்ள வைப்புக்கள் என்பவற்றினை உள்ளடக்கியிருக்கும். **(02 புள்ளிகள்)**

- மத்தியவங்கியிலிருந்து பொருளாதாரத்திற்கு உயர்வலுப்பணத்தினை விடுவிக்கும் இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன. ஒன்று அரசாங்கத்திற்கும் வணிக வங்கிகளுக்கும் கடன் வழங்குவதன் ஊடாக உள்நாட்டுச் சொத்துக்களைப் பெறுதல். மற்றயை வழிமுறை அரசாங்கம் மற்றும் வணிக வங்கிகளிடமிருந்து அன்னியச் செலாவணியை மத்திய வங்கி கொள்வனவு செய்வதாகும். **(01 புள்ளி)**

- இச்சூழ்நிலைகளின் கீழ் மத்திய வங்கியானது பொருளாதாரத்தில் உயர்வலுப்பண இருப்பின் மீது ஒரு பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கமாட்டாது. அரசாங்கத்தின் வங்கியாளராக, மத்திய வங்கியானது கடன் வழங்கல் ஊடாக அரசாங்கத்தின் நிதித்தேவைப்பாடுகளுக்கு இணங்கிச்செல்லவேண்டியிருக்கும்.

- அதேபோல, மத்தியவங்கியானது அன்னியச் செலாவணியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைத் தடுப்பதற்காக அன்னியச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டியிருக்கும்.

(01 புள்ளி)

(v) இலங்கை மத்திய வங்கியால் தற்போது பின்பற்றப்படுகின்ற பணக் கொள்கை வரைச்சட்டத்தின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

- இலங்கையின் மத்திய வங்கியானது அதன் பணக்கொள்கையினை நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்ச்சியுடைய பணவீக்க இலக்கிடல் ஆகிய இரண்டு சிறப்பமிசங்களுடன் கூடியதாக மேம்பட்ட பணக்கொள்கை வரைச்சட்டத்தினுள் நடைமுறைப்படுத்துகின்றது.

- இம்மேம்பட்ட பணக்கொள்கை வரைச்சட்டத்தின் கீழ், மத்திய வங்கியானது வளர்ச்சிக் குறிக்கோள்கள் மற்றும் அன்னியச் செலாவணி முகாமைத்துவத்தில் நெகிழ்ச்சித்தன்மை என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை நடுத்தர காலப்பகுதியில் நடு ஒற்றையிலக்கப் பணவீக்கத்தினை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

- ஒதுக்குப்பணமானது இனிமேலும் செயற்படு இலக்காக இல்லாதபோதும், விரிந்த பண நிரம்பலானது பணக்கொள்கையினை நெறிப்படுத்தும் சுட்டிக்காட்டு இடைநிலை மாறியாக தொடர்ந்தும் இருக்கின்றது.

- ஒதுக்குப்பணத்திற்குப் பதிலாக, மத்திய வங்கியானது தற்போது அதன் செயற்படு இலக்காக சராசரி நிறையளிக்கப்பட்ட அழைப்பு பண வீதத்தினைப் (Average Weighted Call Money Rate -AWCMR) பயன்படுத்துவதுடன் கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் திறந்த சந்தை நடவடிக்கைகள் ஆகிய அதன் சந்தை அடிப்படையிலன கொள்கைக் கருவிகளில் அதிகரித்தளவில் தங்கியுள்ளது.

(தலா 02 புள்ளி வீதம் ஏதாவது இரண்டு காரணங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

6 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



06 ஆம் வினாவிற்கு சுமார் 53.89% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 42% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 32% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 21% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 5% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 05 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் (iii) ஆம் பகுதி 'அ' மற்றும் 'ஆ' என இரு உப பகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவின் இலகுதன்மை கூடிய பகுதி (iii) (அ) ஆகும். அதன் இலகுதன்மை 61% ஆகும். பகுதி (v) இலகுதன்மை குறைந்த பகுதியாவதுடன் அதன் இலகுதன்மை 17% ஆகும்.

06 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகள் 53.89% ஆகும். இது 5 உபபகுதிகளைக் கொண்டது.

உபபகுதி (i) இன் இலகுதன்மை 38% ஆகும். முதன்மை பணவீக்கம், மையப் பணவீக்கம் ஆகியவற்றுக்கிடையிலான எண்ணக்கருரீதியான வேறுபாட்டை வித்தியாசத்தை சரியாக இனங்காணாமை இலகுதன்மை குறையக் காரணமாகும். இவ் இரு எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டிற்கு ஏதுவான பாடவிடயங்கள் பற்றிய அறிவு விளக்கத்தை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 48% ஆகும். மொத்தக் கேள்வியின் கூறுகளை சரியாக பெயரிட முடியுமாக இருந்தாலும் கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை சரியாக வரைவிலக்கணப்படுத்துவதற்கும் அதனை சரியாக வரைபடத்திற் காட்டவும் தவறியமை காரணமாக நடுத்தர இலகுதன்மை காணப்படுகின்றது. வரைபடம் மூலம் பணவீக்கத்தை தெளிவுபடுத்தும் தேர்ச்சியை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (iii) 'அ', 'ஆ' என இரு பிரிவுகளைக் கொண்டது. 'அ' பிரிவின் இலகுதன்மை 61% உம் 'ஆ' பிரிவின் இலகுதன்மை 33% உம் ஆகும். வங்கி முறைமையும் முறைமையில் தனியொரு வங்கியின் தொழிற்பாடுகளையும் விளங்கிக்கொள்ள முடியாமையினால் சில பரீட்சார்த்திகள் சிறப்பாக விடையளிக்கத் தவறியுள்ளனர். 'ஆ' பிரிவில் வைப்புக்களை மீளப்பெறும் போது அத்தொகையை வைப்பிலிருந்தும் இருப்பிலிருந்தும் நீக்குவது தொடர்பாக பரீட்சார்த்திகளுக்கு போதுமான விளக்கம் இருக்கவில்லை. புதிய வைப்பொன்றைத் தொடங்கும்போதும், வைப்பொன்றை மீளப்பெறும் போதும் , ஐந்தொகையில் பொறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்களை முறையாக விளங்கிக்கொள்ளத்தக்க விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறை இடம்பெற வேண்டும்.

உபபகுதி (iv) இன் இலகுதன்மை 33% ஆகும். உயர்வலுப் பணத்தின் கூறுகளை தெளிவாக இனங்கண்டு கொள்ளாமை, உயர்வலுப் பணத்தை பொருளாதாரத்திற்குத் விடுவிக்கும் பொறிமுறை தொடர்பான விளக்கமின்மை ஆகியன காரணமாக இலகுதன்மை குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது. எனவே உயர்வலுப் பணத்தை நாணயத்தை பொருளாதாரத்திற்கு விடுவிக்கும் பொறிமுறைகள் உறுதிப்படுத்தப்படும் விதத்தின் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (v) இவ் வினாவின் இலகுதன்மை குறைந்த பகுதியாகும். அதன் இலகுதன்மை 17% ஆகும். இலங்கை மத்திய வங்கி தற்காலத்தில் பின்பற்றப்படுகின்ற நிதிக்கொள்கைச் சட்டத்தின் பிரதான நோக்கங்கள் வினவப்பட்டுள்ள வினாவாகும். இலங்கை மத்திய வங்கியால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள இந் நோக்கங்கள் பற்றி அறிந்திருக்காமையின் மூலம் பரீட்சார்த்திகளின் அறிவு இற்றைப்படுத்தவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே மத்திய வங்கி அறிக்கைகள், வேறு மூலாதாரங்கள் ஆகியவற்றின் மூலம் அறிவை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

07 ஆம் வினா

7. (i) தூய பொதுப் பொருள் என்றால் என்ன ? இது எவ்வாறு ஓர் அரைப் பொதுப் பொருளிலிருந்து வேறுபடுகின்றது ? (04 புள்ளிகள்)

(ii) ஒரு தாராள சந்தையானது ஏன் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்கின்றது ? பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் கலால் வரி (excise taxes) வருமானத்தின் பிரதான மூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(iv) "இலங்கையில் அரச நிதி நிலைமைகள் அபாயகரமான நிலைமையில் காணப்படுகின்றன" (கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவகம்). இலங்கையின் தற்போதைய அரச நிதி நிலைமைகளில் காணப்படும் பிரதான பலவீனங்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

(v) அரச நிதிகள் தொடர்பாகக் காணப்படும் மிகத் தீவிர பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக இலங்கை அரசாங்கத்தினால் அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

7. (i) தூய பொதுப் பொருள் என்றால் என்ன ? இது எவ்வாறு ஓர் அரைப் பொதுப் பொருளிலிருந்து வேறுபடுகின்றது ? (04 புள்ளிகள்)

- நுகர்வில் விலக்கவோ அல்லது போட்டித்தன்மையோ இல்லாத பொருட்களே தூய பொதுப்பொருட்கள் என அழைக்கப்படுகின்றன. **(02 புள்ளிகள்)**

- தூய பொதுப்பொருட்கள் அரைப் பொதுப்பொருளிலிருந்து வேறுபடுகின்றன. அரைப் பொதுப்பொருள் நுகர்விலிருந்து ஒருவரை விலக்க முடிவதுடன் நுகர்வு இயலளவு மட்டத்தினை அடையும வரை நுகர்வில் போட்டித்தன்மையும் இருக்கமாட்டாது. **(02 புள்ளிகள்)**

(ii) ஒரு தாராள சந்தையானது ஏன் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்கின்றது ? பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

- உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது சமூகச் செலவு தனியார் செலவினை விட அதிகரித்துக் காணப்படும். இதன்விளைவாக தாராள சந்தைச் சமனிலையில் சந்தை வெளியீடானது (Q) சமூகரீதியில் உத்தம வெளியீட்டினை $(Q1)$ விட அதிகரித்துக் காணப்படும். பொருளானது Q-$Q1$ அளவினால் அளவுக்கதிகமாக உற்பத்திசெய்யப்படும். **(02 புள்ளிகள்)**

- இந்நிலைமையானது கீழேயுள்ள எளிய வரைபடத்தின் மூலம் மேலதிகமாக விளக்கப்படுகின்றது :



(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

மாற்று விடை:

நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது தனியார் நன்மைகள் (MPB) சமூக நன்மைகளை (MSB) விடவும் அதிகரித்துக் காணப்படும். சந்தை வெளியீடானது (Qm) சமூகரீதியில் உத்தம வெளியீட்டினை (Qs) விடவும் அதிகரித்துக் காணப்படும். பொருளானது (Qm – Qs)அளவினால் அளவுக்கதிகமாக உற்பத்திசெய்யப்படும். **(02 புள்ளிகள்)**

- இந்நிலைமையானது கீழேயுள்ள வரைபடத்தின் மூலம் மேலதிகமாக விளக்கப்படுகின்றது:



(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(iii) இலங்கையில் கலால் வரி (excise taxes) வருமானத்தின் பிரதான மூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

கலால் வரி வருமானத்தின் பிரதான மூலங்கள்:

- சிகரெட்
- மதுபானம்
- பெற்றோலியம்
- மோட்டார் வாகனங்கள்

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) "இலங்கையில் அரச நிதி நிலைமைகள் அபாயகரமான நிலைமையில் காணப்படுகின்றன" (கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவகம்). இலங்கையின் தற்போதைய அரச நிதி நிலைமைகளில் காணப்படும் பிரதான பலவீனங்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

- அதிகரிக்கும் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் அதிகப்படியான பொதுப்படுகடன் திரட்சி என்பன படுகடன் சேவை சுமை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளன.

- 2016 ஆம்ஆண்டில், தற்போதைய படுகடன் இருப்பு மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அரச மொத்த வருமானத்தின் 32.2 வீதத்தினை உறிஞ்சிவிட்டதுடன் படுகடன் முதல் கொடுப்பனவுக் கடப்பாடுகள் மேலும் வருமானத்தின் 44 வீதத்தினை உள்ளீர்த்தன. எனவே, மொத்த அரச வருமானத்தின் 80.2 வீதத்தினை மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் உறிஞ்சிவிட்டன.

- இலங்கையின் வரி வருமானத்தின் பெரும்பகுதி நேரில் வரிகளிலிருந்து கிடைக்கும் அதேவேளை நேர் வரிகளின் பங்கானது நீண்டகாலமாக பெருமளவிற்கு மாற்றமடையாமலேயே உள்ளது.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக வருமானமானது 2000 ஆம் ஆண்டில் 17 வீதமாக இருந்து 2014 ஆண்டு வரலாற்றிலேயே மிகக்குறைவான 11.5 வீதமாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

- இலங்கை தற்போது வெவ்வேறான சட்டக் கட்டமைப்புக்களின் கீழ் 245 அரச நிறுவனங்களைக் கொண்டுள்ளது. பல நட்டத்தில் இயங்கும் மற்றும் தொழிற்படமுடியாத அரச நிறுவனங்கள் மீண்டெழும் செலவினங்களுக்காக பாரியளவில் அரசாங்க வரவுசெலவுத்திட்டம் மீது தங்கியுள்ளன. அரசாங்கமானது 55 அரச நிறுவனங்களை தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவமானவை என அடையாளங்கண்டுள்ளது. இவற்றில் 11 அரசநிறுவனங்கள் பாரிய நட்டத்தினை அடைந்துள்ளன– விசேடமாக வலு, விமானப்பயணம், பயணிகள் போக்குவரத்து மற்றும் பெருந்தோட்டத்துறைகளின் வர்த்தகரீதியான செயற்பாடுகள்.

- செலவினத்தின் அதிகரித்தளவிலான இறுக்கத்தன்மைகள்: அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தின் 86 வீதமானது அரசாங்கம் இலகுவில் குறைக்க முடியாத செலவினத்தின் மீதானதாகக் காணப்படுகின்றது: வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள், மற்றும் வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள்.

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது நான்கு காரணங்களுக்கு மொத்தம 04 புள்ளிகள்)

(v) அரச நிதிகள் தொடர்பாகக் காணப்படும் மிகத் தீவிர பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக இலங்கை அரசாங்கத்தினால் அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- வரவுசெலவுத்திட்ட இலக்குகளுடன் இசைந்து செல்லும் வகையில் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வருமானம் திரட்டலை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வரித்தளத்தினை விரிவாக்கி வரி நிர்வாகத்தினை மேம்படுத்தும் அதேவேளை வரிக்கட்டமைப்பினை இலகுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அரசாங்க வருமானம் அதிகரித்தமையின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை 5.9 வீதமாக குறைத்ததன் மூலம் அரசாங்கம் 2016 ஆம் ஆண்டில் பிரதான இறை இலக்குகளை அடைந்து கொண்டது. 2015 ஆம் ஆண்டு நவம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2015 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக பதிவுசெய்யப்பட்ட 7.6 வீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 5.9 வீதத்திற்கு குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

- இதன்படி, கடந்த சில வருடங்களாக (அ) நடுத்தர காலத்தில் வரி வருமானத்தினை மொ.உ.உ. வீதமாக 15–16 ஆக இருப்பதனை உறுதிப்படுத்தி வரித்தளத்தினை விரிவாக்குதல், (ஆ) வரி விலக்குகள், வரி விடுதலைகள் மற்றும் நியாயமானதும் செயற்றிறனானதுமான வரி நிர்வாகத்திற்குத் தீங்கினை ஏற்படுத்தும் விசேட வரி வீதங்கள் என்பவற்றினைக் குறைக்கும் அதேவேளை வரி முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்துதல் ஆகிய விடயங்கள்மீது கவனம் செலுத்தி வரிக்கொள்கைகளை மறுசீரமைத்து வரி நிர்வாகத்தினை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- வரித்தளத்தினை விரிவுபடுத்தி வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கான வரி (NBT) என்பவற்றில் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- தெரிவு செய்யப்பட்ட வகையினங்கள் மீது சுங்கத்தீர்வை வீதங்கள் அதிகரிக்கப்பட்ட அதேவேளை மூன்று தட தீர்வைக்கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சுங்கத்தீர்வைக் கட்டமைப்பு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது.

- வரி நிர்வாகத்தினை மேம்படுத்தவதற்காகவும் வருமான சேகரிப்பினை அதிகரிப்பதற்காகவும் வருமானம் சேகரிக்கும் முகவரகங்களை தன்னியக்கப்படுத்தும் செயன்முறைகளை விரைவுபடுத்துதல் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) 2016 ஆம் ஆண்டில் தனது செயற்பாட்டினை ஆரம்பித்தது. இதனால் வரி செலுத்துபவர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தைக் கட்டியேழுப்புவதற்கான வரி, நிறுத்தி வைத்தல் வரி (Withholding tax) மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரிகள் என்பன தொடர்பில் வரி செலுத்துகை மற்றும் வரி விபரத்திரட்டினை நிகழ்நிலை (online) முறைமையூடாக பதிவுசெய்வதற்கும் வழிவகுத்துள்ளது.

- நாட்டின் உட்டகட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளைக் கவரும்நோக்கில அரச தனியார் பங்குடைமை மீது அதிக வலியுறுத்தல்கள் கொடுக்கப்பட்டன.

(தலா 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு நடைமுறைகளுக்கு மொத்தம் நான்கு புள்ளிகள்)

7 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



07 ஆம் வினாவிற்கு சுமார் 64.98% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 38% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 42% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 18% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 02% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் பகுத (i) மிக இலகுவாகதாய் அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 72% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி (iii) ஆவதுடன் அதன் இலகுதன்மை 8% ஆகும். (ii), (iv), (v) ஆகிய பகுதிகளின் இலகுதன்மை முறையே 46%, 28%, 20% ஆகும்.

07 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகள் 64.98% ஆகும். இது 5 உபபகுதிகளைக் கொண்டுள்ளது.

உபபகுதி (i) இன் இலகுதன்மை 72% ஆகும். ஏழாம் வினாவில் கூடிய இலகுதன்மையைக் கொண்ட பகுதி இதுவாகும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 46% ஆகும். எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளால் சந்தைச் சமநிலை வெளியீட்டு மட்டம் சமூகரீதியில் உயர்ந்த வெளியீட்டு மட்டத்தைக் கடந்துசெல்கின்றமையும் அதனால் மிகை உற்பத்தி நிகழ்வுகளையும் இனங்காண்பதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர். இவ் வினைத்திறனின்மை ஏற்படும் விதத்தை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்கமளிக்கத்தக்க விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறை ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

ஏழாம் ஆம் வினாவில் குறைந்த இலகுதன்மை கொண்ட பிரிவு (iii) ஆகும். அதன் இலகுதன்மை 8% ஆகும். பரீட்சார்த்திகள் இவ் வினாவை விளங்கிக்கொள்வதில் காணப்பட்ட சிக்கல் தன்மைகள் இலகுதன்மை குறைவதற்கு காரணமாகும்.

உபபகுதி (iv) இன் இலகுதன்மை 28% ஆகும். இது தற்கால அறிவைப் பரீட்சிக்கும் வினாவாகும். பரீட்சார்த்திகளின் அறவு இற்றைப்படுத்தப்படாமை காரணமாக இலகுதன்மை குறைந்துள்ளது. மத்திய வங்கி அறிக்கை, ஏனைய மூலாதாரங்களைப் பயன்படுத்த ஊக்குவத்தல் வேண்டும்.

உபபகுதி (v) இன் இலகுதன்மை 20% ஆகும். இதுவும் தற்கால அறிவைப் பரீட்சிக்கும் ஒரு வினாவாகும். அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள ஊக்குவித்தல் வேண்டும்.

08 **ஆம் வினா**

8. (i) பின்வரும் வரைபடமானது, செல்லிடத்தொலைபேசிகளையும் துவிச்சக்கர வண்டிகளையும் உற்பத்தி செய்யும் A, B ஆகிய நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகளைக் காட்டுகின்றது.



(அ) ஒவ்வொரு நாட்டிலும் ஒரு துவிச்சக்கர வண்டியை உற்பத்திசெய்யும்போது ஏற்படும் சந்தர்ப்பச் செலவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) செல்லிடத்தொலைபேசிகளை உற்பத்திசெய்வதில் எந்த நாடு ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது ? (02 புள்ளிகள்)

(இ) இரண்டு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையளிக்கும் வண்ணம் வர்த்தகம் இடம்பெறுவதற்கு செல்லிடத்தொலைபேசிகளுக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கும் இடையிலான பரிமாற்று வீதம் என்னவாக இருக்க வேண்டும் ? (02 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(அ) நாடு A: 3 செல்லிடத்தொலைபேசிகள் (400 து.வண்டி : 1200 செ.தொ ; 1:3) **(01 புள்ளி)**
நாடு B: 1 செல்லிடத்தொலைபேசி (600 து.வண்டி : 600 செ.தொ; 1:1) **(01 புள்ளி)**

(ஆ) நாடு A: செ.தொ. உற்பத்தி செய்வதற்கான சந்தர்ப்பச்செலவு : $400/1200 = 0.33$ து.வண்டி
நாடு B: செ.தொ. உற்பத்தி செய்வதற்கான சந்தர்ப்பச்செலவு: $600/600 = 1.0$ து.வண்டி
(சந்தர்ப்பச் செலவினைக் கணிப்பதற்கு 01 புள்ளி)

நாடு A செல்லிடத்தொலைபேசிகளை உற்பத்தி செயவதில் ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(01 புள்ளி)

(இ) நாடு A: 1 து.வண்டி : 3 செ.தொ (உள்நாட்டு பரிமாற்று வீதம்)
நாடு B: 1 து.வண்டி : 1 செ.தொ (உள்நாட்டு பரிமாற்று வீதம்)
பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய பரிமாற்று வீதம்:
1 து.வண்டி : 1–3 செ.தொ
(1 ஐ விடக்கூடுதலானது 3ஐ விடக் குறைவானது செ.தொ)
1 செ.தொ: $1/3$ – 1 து.வண்டி
($1/3$ ஐ விடக்கூடுதலானது 1ஐ விடக் குறைவானது து.வண்டிகள்)

(ஏதாவது ஒரு பரிமாற்ற வீதத்திற்கு 02 புள்ளிகள்)

(ii) "கடந்த இரண்டு தசாப்தங்களாக பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் ஏற்றுமதித்துறையின் செயலாற்றமானது குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது." இலங்கையின் ஏற்றுமதித்துறையின் மந்தமான செயலாற்றத்திற்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

- ஏற்றுமதிப்பொருட்களின் மிகக்குறைந்தளவிலான பன்முகப்படுத்தல்: ஏற்றுமதிகளின் கவனம் தொடர்ச்சியாக ஏற்றுமதிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்கினைக் கொண்டுள்ள ஆடைகள் மற்றும் தேயிலை ஆகிய இரண்டு பாரம்பரிய பொருட்கள் மீதே குவிந்துள்ளது.

- ஏற்றுமதிச் சந்தைகளின் மிகக்குறைந்தளவிலான பன்முகப்படுத்தல்: ஐரோப்பாவும் அமெரிக்காவும் தொடர்ச்சியாக மொத்த ஏற்றுமதிகளில் அண்ணளவாக மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்டுள்ளன. மேலும், அண்ணளவாக 70% மான தேயிலை ஏற்றுமதிகள் மத்திய கிழக்கிற்கும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்திற்குமானதாக உள்ளன.

- ஏற்றுமதிகளை மையப்படுத்திய கைத்தொழில்கள் மீதான மிகக்குறைந்தளவு முதலீடு:
ஏற்றுமதிகளை மையப்படுத்திய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) கிழக்காசியாவின் புதிதாகக் கைத்தொழில் மயமாகிய நாடுகளில் ஆற்றல்வாய்ந்த, விரைவாக வளர்ச்சியடையும் ஏற்றுமதித்துறை உருவாக்கத்தில் ஒரு மிக முக்கிய பங்கினை வகித்தன. ஆனால் இலங்கை இவ் உயிர்நாடியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதில் வெற்றிபெற முடியவில்லை. இலங்கைக்கான ஒட்டுமொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. இலங்கைக்கான அண்மைக்கால வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலானது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மையப்படுத்தியதாகவே உள்ளது.

- தேயிலை ஏற்றுமதித்துறையில் காணப்படும் உயர் செலவும் குறைவான உற்பத்திதிறனும்:
உள்ளீட்டுச் செலவுகள் மற்றும் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் (ஊழியச்செறிவான) மற்றும் நிலத்தின் குறைவான உற்பத்தித்திறன் (பழைய பெருந்தோட்டங்கள் குறைந்த விளைச்சலைக் கொண்டுள்ளன) என்பன ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையில் உற்பத்திச் செலவுகள் உயர்வாக உள்ளன என்பதைக் குறிக்கின்றது.

- வீழ்ச்சியடையும் ஊழியப்படையும் அதிகரிக்கும் ஊழியச் செலவும்:
தேயிலை பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களை தக்கவைத்துக் கொள்வது என்பது ஒரு சவாலாக ஆகியுள்ளது. இது வேலைக்கான குறைவான சமூக அந்தஸ்து,இளஞ்சமுதாயத்தினரிடையே எற்பட்டுள்ள கல்வி மேம்பாடு, மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு வெளியே கிடைக்கும் கௌரவமான, அதிகம் சம்பளம் தரக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் போன்ற பல்வேறு கூட்டுக் காரணங்களினால் ஏற்படுகின்றது.

- ஏற்றுமதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்யும் உயர் அரச நிறுவனம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையாகும் (EDB). ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கடந்தகால முக்கியமான பலவீனங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கியிருந்தன: ஏற்றுமதி மேம்பாட்டுக்கான தந்திரோபாயத் தூரநோக்கு போதாமல் இருந்தமை, ஏற்றுமதி மேம்பாட்டுக்கான வளங்கள் போதாமல் இருந்தமை, ஏற்றுமதி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் மீதான பலவீனமான கண்காணிப்பு மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பயனாளிகள் சிறப்பாக இலக்கிடப்படாமை.

(தலா 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு காரணங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது அந்நாட்டின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கினை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

- பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்றுமதிகளின் உள்நாட்டு விலையினை அதிகரிக்கும். மூல (Original) நாணமாற்று வீதத்தில், வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்றுமதி விலை அதிகரிக்க வேண்டும் என்பதுடன் ஏற்றுமதிகளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுடையது எனக்கருதினால் குறைந்தளவான ஏற்றுமதிப் பொருட்களே விற்கப்படும். விலை அதிகரிப்பில் ஏற்படும் வீதாசார மாற்றத்தினை விடவும் ஏற்றுமதித்தொகை வீழ்ச்சியில் ஏற்படும் வீதாசார மாற்றம் அதிகமாகக் காணப்பட்டால் அது ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் வீழ்ச்சியடைவதற்கும் நடைமுறைக் கணக்கின் மீது பாதகமான தாக்கத்திற்கும் வழிவகுக்கும். **(02 புள்ளிகள்)**

- வர்த்தகம் செய்யப்படாத மற்றும் ஏற்றுமதி செய்யப்படக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிக்கையில் இறக்குமதிப் பொருட்களின் உள்நாட்டு விலைகள் மாற்றமடையாமல் இருந்தால்கூட இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் முன்பிருந்ததைக் காட்டிலும் தற்போது சார்பளவில் மலிவானவையாக இருக்கும். இதனால் இறக்குமதிகள் அதிகரித்து இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பதுடன் நடைமுறைக் கணக்கிலும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும். **(02 புள்ளிகள்)**

- உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்படும் ஒரு குறிப்பிடத்தக்க பணவீக்கமானது கொடுக்கபட்ட நாணயமாற்றுவீதத்தில் இறக்குமதிகளின் தொகையினை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிகளின் தொகையையும் குறைக்கும். இதன் கருத்து யாதெனில், அதிகரித்த இறக்குமதிச் செலவினை ஈடுசெய்வதற்காக வெளிநாட்டு நாணயத்தினைக் கொள்வனவு செய்வதற்கு மூலாதாரமான நாணயமாற்று வீதத்தில் அதிக உள்நாட்டு நாணயம் நிரம்பல் செய்யப்படும் அதேவேளை ஏற்றுமதிச் செலவினை ஈடுசெய்வதற்காக குறைந்தளவு உள்நாட்டு நாணயத்திற்கே கேள்வி இருக்கும். ஒரு வெளியக விளைவாக, உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வடையும். மார்சல் – லேணர் (Marshall-Learner) நிலைமையைப் பொறுத்து, நாணயத்தின் பெறுமானத்தேய்வானது நீண்டகாலத்தில் நடைமுறைக்கணக்கின் மீது ஒரு சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடும். **(02 புள்ளிகள்)**

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்: மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) "வெளிநாட்டு உறுதிப்பாடு (external stability)" என்பதனாற் கருதப்படுவது யாதென்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

- வெளிநாட்டு (வெளியக) உறுதிப்பாடு என்பது வெளியகக் கணக்குகள் மீதான நிலைத்திருக்கும் தன்மையினை மேம்படுத்தும் முயற்சியில் அரசாங்கத்தின் ஒரு மிக முக்கிய குறிக்கோளாகும்.

- இறக்குமதிச் செலவினத்தை ஈடுசெய்வதற்கு போதுமான அளவிற்கு ஏற்றுமதி வருமானம் காணப்படும்போது வெளியக உறுதிப்பாடானது அடையப்படலாம். அவ்வாறாயின், நாடு நடுத்தர காலம் தொடங்கி நீண்டகாலம் வரையில் வெளிநாட்டுப் படுகடன் சேவைப் பொறுப்புக்களை செய்ய முடிவதுடன் நாணயமாற்றுவீத தளம்பல்களையும் தவிர்க்க முடியும்.

- இதன்விளைவாக வெளியக உறுதிப்பாடானது நாட்டின் ஒட்டுமொத்த வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் அலுவல்சார்ந்த நிதியீட்டமின்றி சமநிலையில் இருப்பதனை வேண்டிநிற்கின்றது.

- வெளியக உறுதிபாட்டிற்கான நேரடி அளவீடு எதுவுமில்லை. ஆனால் வெளிநாட்டுத் துறையின் நிலையினை தீர்மானிக்கக்கூடிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் நாணயமாற்று வீதத்தின் நிலைமை போன்ற குறிகாட்டிகள் காணப்படுகின்றன.

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)

(v) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு ஜி. எஸ். பி. பிளஸ் (GSP+) தீர்வைச் சலுகைகள் மீள வழங்கப்பட்டமையினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- இலங்கைக்கு அதன் GSP -Plus முன்முயற்சியின் கீழ் மேலதிக வர்த்தக சலுகைகளை வழங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தின் மூலம் அண்மைக்காலமாக துவண்டு கொண்டிருக்கும் இலங்கையின் ஏற்றுமதிகள் அவசியம் தேவைப்பட்ட சில நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டன. இச்சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியதன் மூலம், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கையிலிருந்து வரும் ஆடைகள், சிறிய இயந்திரங்கள் மற்றும் மீனுணவுகள் போன்ற இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 66 மூ தீர்வை வரிசைகள் (அண்ணளவாக 1200 இலங்கைப் பொருட்கள்) முழுமையாக நீக்கப்பட்டமையினால் இலங்கை தற்போது நன்மையினைப் பெறவுள்ளது.

- 2010- 2015 காலப்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் வெறுமனே 1.02 வீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மிகப்பெரிய நேரடித் தாக்கம் யாதெனில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கையிலிருந்து வரும் இறக்குமதிகள் மீது தீர்வைகள் மீள விதிக்கப்பட்டமையாகும். இதனால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பங்களாதேஸ், இந்தியா மற்றும் வியட்னாம் போன்ற ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து வரும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதே ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் போட்டித்தன்மையற்றவையாக மாறின. ஏற்றுமதிக் கட்டமைப்பினை பன்முகப்படுத்துவதற்கு பெரிய நிறுவனங்களுடன் ஒப்பிடுமிடத்து நடுத்தர பருமனுடைய ஆடை உற்பத்தியாளர்கள் தொழில்நுட்ப மற்றும் நிதிவளங்களைக் கொண்டிராத காரணத்தினால் அவர்கள் மீதான தாக்கம் குறிப்பிடத்தக்களவிற்கு தீவிர மானதாகும். இதன்விளைவாக, ஒரேமாதிரியான பொருட்களை உற்பத்தி செய்யும் பங்களாதேஸ் மற்றும் வியட்னாம் போன்ற பிராந்திய போட்டியாளர்கள் அதிகளவிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் இந்நாடுகளில் மீள அமைத்துள்ளமையினால் ஐரோப்பிய சந்தைகளில் சலுகைகளைபெற முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

- இது விசேடமாக அண்மைக்காலமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் பிராந்திய போட்டியாளர்களிடமிருந்து கூடிக்கொண்டிருக்கும் அழுத்தங்களை எதிர்நோக்கிய ஆடை மற்றும் மீன்பிடித்துறைகளுக்கு ஒரு வரமாக இருக்கும். அத்துடன் சிறிய தயாரிப்பு மற்றும் விசேடமாக யுத்தத்திற்கு பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தில் தோற்றம் பெற்ற ஏனைய ஏற்றுமதித் துறைகளும் ஐரோப்பிய சந்தையினுள் ஊடுருவுதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்ளும்.

- ஜிஎஸ்பி பிளஸ் சலுகைகள் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு மிகவும் பயன்பாடுடையனவாகும். இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களை இலகுவாக ஏற்றுமதி செய்வதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் வரி நிவாரணங்களையும் பெற்றுக் கொள்வதனால் அவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் ஊக்குவிப்புக்களாக இருக்கும்.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் : மொத்தம் 04 புள்ளிகள்)

8 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



08 ஆம் வினாவிற்கு சுமார் 53.65% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 44% உம்

புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 36% உம்

புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 16% உம்

புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 04% உம்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் (i)(அ) பகுதி இலகுதன்மை மிகக் கூடியதாகும். அதன் இலகுதன்மை 71% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதிகள் (iii), (iv) உம் ஆகும். அவை ஒவ்வொன்றினதும் இலகுதன்மை 17% ஆகும்.

08 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகள் 53.65% ஆகும். இது 5 உபபகுதிகளைக் கொண்டது.

உபபகுதி (i) 'அ', 'ஆ', 'இ' என மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் இலகுதன்மை முறையே 71%, 62%, 42% ஆகும்.

(அ) வரைபுகளை விளங்கிக்கொள்ளும் திறனை விருத்தி செய்வதன் மூலம் 'அ' பிரிவின் இலகுதன்மையை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

(ஆ) சந்தர்ப்ப செலவை அடிப்படையாகக்கொண்டு ஒப்பீட்த்தன்மையை இனங்கான முடியாமையால் 'ஆ' பிரிவின் இலகுதன்மை நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றது. எனவே தர்க்கரீதியாக அனுகூலமான செலவினை பகுப்பாய்வு செய்யும் ஆற்றலை விருத்தி செய்யக்கூடிய பயிற்சிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

(இ) இது முதலாம் பகுதியின் குறைந்த இலகுதன்மையைக் உபபிரிவாகும். ஒப்பீட்டு நன்மையை அடிப்படையாகக் கொண்டு பரிமாற்றுவீதங்களை தீர்மானிக்கும் ஆற்றல் காணப்படாமை இலகுதன்மை குறையக் காரணமாகும். உள்நாட்டு வெளிநாட்டு பரிமாற்று வீதங்களைக் தெளிவாக கணிப்பீடு செய்யக்கூடிய விதத்தில் பொருத்தமான கற்றல் கற்பித்தற் செயன்முறையை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 25% ஆகும். இலங்கையின் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான தற்கால தகவல்கள் பற்றிய அறிவு போதியளவில் காணப்படாமை இலகுதன்மை குறைவதற்கான காரணம். அதனால் குறித்த பாடவிடயம் தொடர்பான அறிவை விருத்தி செய்யக்கூடிய விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறையை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

உபபகுதி (iii) இன் இலகுதன்மை 17% ஆகும். இதுவும் சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு, விலை மட்டம் போன்ற எண்ணக்கருக்களைத் தொடர்புபடுத்தி கேட்கப்பட்ட வினாவாகும். இவ் எண்ணக்கருக்கள், எண்ணக்கருக்களுக்கிடையிலான தொடர்புகள் பற்றிய தெளிவின்மை காரணமாக இலகுதன்மை மிக்க மிகக் குறைந்துள்ளது. பொதுவிலை மட்டமாற்றம் ஏற்றுமதி, இறக்குமதியின் மூலம் வர்த்தகத்திலும் அதன் மூலம் நடைமுறைக் கணக்கிலும் ஏற்படும் தாக்கங்களை தெளிவுபடுத்தும் விதத்தில் கற்றல் கற்பித்தற் செயறன்முறையை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

உபபகுதி (iv) இன் இலகுதன்மை 17% ஆகும். வெளிநாட்டு உறுதிப்பாடு என்ற எண்ணக்கரு, அதனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் என்பன தொடர்பாக மாணவர்களின் அறிவு குறைவாகக் காணப்பட்டமை இலகுதன்மை குறைவதற்கான காரணமாகும். இத்தொடர்புகள் உறுதிப்படுத்தப்படும் விதத்தில் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (v) இன் இலகுதன்மை 38% ஆகும். GSP+ போன்ற தற்காலத் தகவல்கள் தொடர்பில் மாணவர்கள் கவனம் செலுத்தாமை இலகுதன்மை குறையக் காரணமாகும். பொருளாதாரத்தில் இடம்பெறும் அண்மைக்கால் மாற்றங்கள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

09 ஆம் வினா

9. (i) ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை மதிப்பிடுவதற்கான ஓர் அளவீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியினை பயன்படுத்துவதிலுள்ள வரையறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) 'உற்பத்தி இயலளவு' என்னும் எண்ணக்கருவை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வறுமை எவ்வாறு அளவிடப்படுகின்றது ? (05 புள்ளிகள்)

(v) சனத்தொகை மூப்படைவதனால் இலங்கை எதிர்நோக்கும் பிரதான பொருளாதாரச் சவால்கள் யாவை ? (05 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

9. (i) ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை மதிப்பிடுவதற்கான ஓர் அளவீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியினை பயன்படுத்துவதிலுள்ள வரையறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பௌதீகத் தொகையின் அளவீடாகும். இது மக்களின் வாழ்க்கைத் தரங்களுக்குப் பொருத்தமுடைய சமூகத்திலுள்ள பண்புரீதியான மாற்றங்களை (அமைதியான சூழல், சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடல், நல்லாட்சி, தெரிவு செய்வதற்கான சுதந்திரம் போன்றன) உள்ளடக்க மாட்டாது.

- தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பொருட்கள் சேவைகளின் உண்மையான பௌதீக உற்பத்தியினைக் கூட மிகச்சரியாக அளவிட மாட்டாது ஏனெனில் பல நாடுகளில் முறைசாரா பொருளாதார நடவடிக்கைகள் காணப்படுவதனாலாகும். முறைசாராத் துறை பற்றிய சரியான தகவல்கள் காணப்படாத காரணத்தினால் மதிப்பிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவு பெறுமதி குறைக்கப்பட்ட எண்களைக் கொண்டதாக இருக்கக்கூடும்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது வருமானப் பங்கீட்டினை புறக்கணிக்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தி புள்ளிவிபரமானது நாடுகளில் காணப்படும் வருமான சமமின்மையை மறைத்து விடுகின்றது.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதனுடன் தொடர்புடைய எண்ணக்கருக்களும் (மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலா மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றன) நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மதிப்பிடுவதற்கு ஒரு பூரணமற்ற அளவீடுகளாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத பல உற்பத்தித்திறன்வாய்த்த நடவடிக்கைகள் காணப்படுகின்றன.
  உதாரணமாக, வர்ணம் பூசுதல், வீட்டு வேலை மற்றும் தோட்டம் செய்தல் போன்ற தாமாகவே செய்யும் வீட்டு உற்பத்தி நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை.

- அவதானிக்கப்படாத பொருளாதாரம் (உதாரணமாக சட்டரீதியற்ற போதைப்பொருட்களின் உற்பத்தி) பற்றிய சரியான தரவுகள் கிடைக்காத காரணத்தினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை.

- வெளியீடு எவ்வாறு மக்களின் வாழ்க்கைத்தரத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பது பற்றி மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கருத்திற் கொள்வதில்லை. ஒரு நாடு எவ்வளவு வெளியீட்டினை உற்பத்தி செய்கின்றது என்பது பற்றி மட்டுமே மிக இலகுவாக அது மதிப்பிடுகின்றது. உதாரணமாக, நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் நகரப்புறப் பிரச்சினைளை எதிர்கொள்வதற்கு உதவும் பொருட்கள் மீது தமது வருமானத்தின் ஒரு பகுதியினைச் செலவிடுகின்றனர். உதாரணமாக, நகர்ப்புற மக்கள் அவர்களின் வீட்டுக்காக அதிக அலாரமடிக்கும் முறைமைகள், கார்கள், சுயபாதுகாப்புக் கண்ணாடிகள் மற்றும் அழுத்தத்தனைக் குறைக்கும் தியானம் போன்றவற்றினைக் கொள்வனவு செய்கின்றனர்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது சூழலின் தரத்தினை அளவிடுவதில்லை. ஒரு நாடு அதன் மாசடைதல் தொடர்பான ஒழுங்குவிதிகளை தளர்த்துவதன் மூலம் அதனது வெளியிட்டினை (மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி) அதிகரிக்கக்கூடும். ஆகவே, காற்று, நீர் மற்றும் ஏனைய வளங்கள் மாசடைந்திருக்கையில் உயர் தலாவருமான மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கொண்டிருப்பதனால் மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தினைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது அர்த்தமல்ல.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஓய்வு எவ்வாறு வாழ்க்கைத்தரத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பது பற்றி கவனத்திற் கொள்வதில்லை. ஒரு நாடு அதன் மக்கள் ஒருநாளைக்கு 12 மணித்தியாலங்கள அல்லது வாரத்தில் ஏழு நாட்கள் வேலை செய்தாலோ அதன் வெளியீட்டினை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கக்கூடும். எனினும், அதிக உற்பத்திப் பொருட்களைக் கொண்டிருப்பது அவற்றினை அனுபவிப்பதற்கு மக்களுக்கு நேரம் இல்லாவிட்டால் மக்கள் சிறப்பாக வாழ்கின்றார்கள் என்று அர்த்தமல்ல.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது “நல்லவற்றுடன்” “கெட்டவற்றையும்” கணக்கில் கொள்ளும். பூகம்பம் ஏற்பட்டு கட்டிடங்கள் மீளக்கட்டப்படும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கின்றது. சிலர் நோய்வாய்ப்பட்டு அவர்களைக் கவனிப்பதற்கு பணம் செலவிடப்படும் போது அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்படுகின்றது. ஆனால் அழிவை ஏற்படுத்திய பூகம்பத்தாலும் மக்கள் நோய்வாய்ப்படுவதாலும் நாங்கள் நன்மையடைந்தோம் என எவரும் வாதிடுவதில்லை.

- மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரங்கள் தொழில்நுட்பம் மூலம் கிடைக்கும் நன்மைகளை கவனத்தில் கொள்வதற்கு முற்றிலும் தவறிவிடுகின்றது. நீங்கள் போக்குவரத்து நெரிசல் மற்றும் திசைகள், வானிலை, தொடர்பான தகவல்கள் போன்றவற்றினை உடனடியாகப் பெறுவதற்கு உங்கள் தொலைபேசியில் ஒரு இலவச படிக்கேற்றம் (app) இருப்பதாகக் கருதுங்கள். ஏனெனில் அது இலவசமானது. எவ்வளவு பெறுமதி என்பதனை மதிப்பிடுவதற்கு விலைகளை – ஒரு பொருளுக்கு விலை செலுத்துவதற்கான எங்கள் விருப்பம்– பயன்படுத்துவதற்கான வழிகள் ஏதுமில்லை.

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி : மொத்தம் 04 புள்ளிகள்)

(ii) ‘உற்பத்தி இயலளவு’ என்னும் எண்ணக்கருவை விளக்குக. (02 புள்ளிகள்)

- உற்பத்தி இயலளவு என்பது ஒரு நிலைபேறானவகையில் (பணவீக்கத்தினை ஏற்படுத்தாது) பொருட்கள் சேவைகளை நிரம்பல் செய்யும் ஒரு பொருளாதாரத்தின் மொத்த இயலளவினைக் குறிக்கின்றது. இது மூலதனம் மற்றும் ஊழிய வினைத்திறன் ஆகிய இரண்டினதும் முழுப்பயன்பாடு காணப்படும் போது ஒரு பொருளாதாரமானது உற்பத்தி செய்யக்கூடிய வெளியீட்டு மட்டமாகும். இதற்கான மற்றுமொரு சொற்பிரயோகம் சாத்திய வெளியீடு அல்லது மொத்த நிரம்பலாகும்.

(02 புள்ளிகள்)

மாற்று விடை:

- இது அனைத்து நிலையான மூலதனமும் – தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள்– செயற்றிறனாகப் பயன்படுத்தப்படும் போதும் வேலையின்மை அதன் இயற்கை வீதத்தில் (அதாவது ஒரு உறுதியான கூலிக–ளின் மாற்ற வீதத்துடன் ஒத்தும் போகும் மட்டம்) காணப்படும் போது உற்பத்தி செய்யப்படக்கூடிய வெளியீட்டு மட்டமாகும். **(02 புள்ளிகள்)**

(iii) ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

- பௌதீக மூலதனம்
- மனித மூலதனம்
- இயற்கை மூலதனம்
- சமூக மூலதனம்
- தொழில்நுட்பம்
- உற்பத்தித்திறன்

(ஏதாவது நான்கு காரணங்களுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வறுமை எவ்வாறு அளவிடப்படுகின்றது ? (05 புள்ளிகள்)

- இலங்கையில் வறுமை மட்டம் குறிப்பது யாதெனில் குடும்ப தலா நுகர்வினை உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டிற்குக் கீழ் கொண்டுள்ள தனிநபர்களின் பங்காகும். இத் தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணானது வறுமை நிழ்வுக்கான (விழுப்பாட்டிற்கான) நியம அளவீடாகும்.

(02 புள்ளிகள்)

- தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணானது வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவீட்டுட் கருத்தாய்வில் சேகரிக்கப்படும் அனைத்து உணவு மற்றும் உணவு அல்லாத செலவினங்களை கவனத்திற் கொள்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. மாவட்டங்களுக்கிடையே காணப்படும் வாழ்க்கைச் செலவு வேறுபாடுகள் மற்றும் குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை ஆகியவையும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

(01 புள்ளி)

- இத் தலாவருமான குடும்ப நுகர்வானது தேசிய வறுமைக்கோட்டுடன் பின்னர் ஒப்பிடப்படுகின்றது. இக்கோடானது அடிப்படைத் தேவைகள் அணுகுமுறைக்கான செலவு அடிப்படையில் ஒருநபர் ஒருநாளைக்கு எடுக்கவேண்டிய 2,030 கலோரிக்கான செலவினமாக வரையறுக்கப்பட்டது. வறுமைக்கோடானது 2012/13 இல் ரூபா 3,624 என நிர்ணயிக்கப்பட்டது. **(01 புள்ளி)**

- வறுமை நிலை என்பது தீர்மானிக்கப்பட்ட உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டுடன் மாதாந்த மெய் தலா செலவினத்தை ஒப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. மாதாந்த மெய் தலா செலவினமானது உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டுப் பெறுமதியை விட குறைவாகக் காணப்பட்டால் அத்தனிநபர் வறுமையில் இருப்பதாகக் கருதப்படுவார். **(01 புள்ளி)**

(மொத்தப்புள்ளி 05)

(v) சனத்தொகை மூப்படைவதனால் இலங்கை எதிர்நோக்கும் பிரதான பொருளாதாரச் சவால்கள் யாவை ? (05 புள்ளிகள்)

- இலங்கையில் பத்தில் ஒரு வயோதிப சனத்தொகை மட்டும் அவர்களின் பிரதான வருமான மூலமாக ஓய்வூதியம் பெறுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்விளைவாக, அடுத்துவரும் சில தசாப்தங்களுக்கும் வயோதிபர்களுக்கான குடும்ப ஆதரவு தொடர்ந்தும் முக்கியமானதாக இருக்கும். எனினும், சிறிய குடுமபத்திற்கு சாதகமான நகரமயமாக்கம் வேகமாக இடம்பெறுவதால் வயோதிபர்களுக்கான குடும்ப ஆதரவு இலங்கையில் வீழ்ச்சியடையும் போக்கு காணப்படுகின்றது. ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிப்புடன் இணைநத்தாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கிராம-நகர குடிப்பெயர்வு கிராமப்புறங்களில் கூட வயோதிபர்களுக்கான ஆதரவினை மேலும் பாதிப்பிற்குள்ளாக்குகின்றது.

- அதிகரிக்கும் ஓய்வூதியம் மற்றும் சுகாதார செலவினங்கள் படிப்படியாக அரசாங்க வரவுசெலவுத்திட்டம் மீது தவிர்க்கமுடியாத அழுத்தங்களை பிரயோகிப்பதுடன் இந்நிலைமைகளால் ஏற்படும் மிகைவழித்தாக்க விளைவுகள் தொடர்ந்தும் கரிசனைக்குரியவையாகவே காணப்படுகின்றன.

- காணப்படும் போக்கு யாதெனில் வயோதிபத் தனிநபர்கள் சாதாரண தொழில்புரியும் தனிநபருடன் ஒப்பிடுமிடத்து கூடுதலாக சேமிப்பினை மீளப்பெற்று செலவு செய்தால் அது மூலதன உருவாக்கத்தின் மீது குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்ககங்களை கொண்டிருக்கும்.

- சனத்தொகை மூப்படைவதன் காரணமாக தொழில்புரியும் சனத்தொகையின் பங்கில் ஏற்படும் வீழ்ச்சி ஊழியப்டை சுருக்கமடைவதற்கு வழிவகுக்கக்கூடும். அது பொருளாதர வளர்ச்சிக்கு தடைகளை ஏற்படுத்தும். அது வருமான வரித்தளத்தினையும் வீட்டுத்துறை வருமானத்தினையும் சுருக்கமடையச் செய்வதுடன் அரசாங்கத்தின் வரி வருமானத்திலும் குறைவினை ஏற்படுத்தும்.

- இலங்கை நிர்மாணம், விவசாயம், சுகாதாரம், உல்லாச விடுதி / உல்லாசப்பயணம் உள்ளடங்கலான சில துறைகளில் ஏற்கனவே தொழிலாளர் பற்றாக்குறையினை எதிர்நோக்குகின்றது. ஊழிய புலம்பெயர்விற்கு நிகராக மூப்படையும் சனத்தொகையும் ஊழியப்பற்றாக்குறைக்கு பகுதியளவில் காரணமாக இருக்கின்றது. அடுத்து வரும் சில தசாப்தங்களில் இப்போக்கானது அதிகளவில் கண்ணுக்குத் தெரியக்கூடியதாக இருக்கும்.

- கல்வி மற்றும் வருமான மட்டங்கள் உயர்வுடன் சார்பளவில் உயர் சம்பளம் மற்றும் அங்கீகாரம் என்பவற்றின் காரணமாக உள்நாட்டு இளைஞர்கள் வெள்ளை கழுத்துப்பட்டி வேலைகளை தேடும்போக்கு தொடரும். இதன்காரணமாக, வெளிநாட்டுப் புலம்பெயர் தொழிலாளர்கள் குறிப்பிட்ட விவசாய நடவடிக்கைகளிலும் நிர்மாணத்துறையிலும் ஈடுபடுவதனை காணக்கூடியதாக உள்ளது.

- குடித்தொகை மாற்றம், புதிய தலைமுறையின் அபிலாசைகள், ஊழிய புலம்பெயர்வு, இறை விளைவுகள் மற்றும் உள்நாட்டுத் தேவை என்பவற்றினைக் கவனத்திற் கொண்டு சர்வாம்சரீதியான ஊழிய சந்தைக் கொள்கை வரையப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டிய தேவை உள்ளது.

- ஆண்களின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தினை விடவும் பெண்களின் ஆயுட்காலம் கூடுதலாகக் காணப்படுவதால் இலங்கையில் மூப்படையும் சனத்தொகையானது அதிகரித்தளவில் பெண்ணியம் சார்ந்ததாக ஆகிக்கொண்டிருக்கின்றது. பெண் வயோதிபர்களில் பெரும்பான்மையானோர் தம்மோடொத்த ஆண்களைப்போலன்றி தொழில் புரியும்ஆற்றல் அற்றவர்களாக உள்ளனர். இதன்படி,
இவ் எளிதில் பாதிப்படையக்கூடிய மற்றும் மற்றவரில் தங்கியிருக்கும் பெண் வயோதிபர்கள் மீது கவனம் செலுத்தும் செயற்றிறன்வாய்ந்த கொள்கைச் செயற்பாடு அவசியமாகும்.

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது ஐந்து சவால்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)

9 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



09 ஆம் வினாவிற்கு சுமார் 25.17% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 69% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 23% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 06% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் சுமார் 02% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் (v) ஆம் பகுதி மிக இலகுவானதாய் அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 31% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி (i) ஆவதுடன் அதன் இலகுதன்மை 2% ஆகும். (iv) ஆம் பகுதியும் இலகுதன்மை குறைந்தபகுதியாவதுடன் அதன் இலகுதன்மை 06% ஆகும்.

9ஆவது வினாவை தெரிவு செய்தவர்கள் 25.17% ஆகும். இவ் வினா உபபகுதிகள் 5ஐக் கொண்டுள்ளது.

இங்கு உபபகுதி (i) குறைந்த இலகுதன்மையைக் காட்டும் பகுதியாகும். அதன் இலகுதன்மை 2% ஆகும். தேசிய கணக்கீடு, பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஆகிய இரு அலகுகளினதும் பாட உள்ளடக்கங்களை விளங்கிக் கொள்ளாமையால் இங்கு இலகுதன்மை குறைந்துள்ளது. இந்தப்பாட உள்ளடக்கங்களை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

உபபகுதி (ii) இன் பகுதியின் இலகுதன்மை 10% ஆகும். உற்பத்தி இயலளவு, சாத்தியமான வெளியீடு என்பன எண்ணக்கருக்கள் ஒனறுக்கொன்று சமமாகும் என்பதை அறிந்திராமை காரணமாக இலகுதன்மை வெகுவாகக் குறைந்துள்ளது. ஒரே எண்ணக்கருக்களுக்குரிய பல்வேறு பெயர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தற் செயன்முறையை விருத்தி செய்தல் வேண்டும்.

உபபகுதி (iii) இன் இலகுதன்மை 18% ஆகும். உற்பத்தி இயலளவைத் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணிகள் தொடர்பாக சரியான அறிவு காணப்படாமை இலகுதன்மை குறையக் காரணமாகும். குறித்த சரியான காரணிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் கற்றல் கற்பித்தற் செயன்முறையை மேற்கொள்ளல் வேண்டும்.

உபபகுதி (iii) இன் இலகுதன்மை 6% இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக் கோடும் அதனை கணிப்பீடு செய்யும் முறையும் தொடர்பில் போதுமான அறிவு காணப்படாமை குறைந்த இலகுதன்மையைக் கொண்டுள்ளது. உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டை கணிப்பீடு செய்யும் போது பயன்படும் வருமானச்செலவும் அளவீட்டு அறிக்கை தொடர்பாகவும் உத்தியோகபூர்வ வறுமைக்கோடு சம்மந்தமாக விளக்கும் வகையில் கற்றல் கற்பித்தற் செயன்முறையை மேற்கொள்ளல் வேண்டும்.

உபபகுதி (iii) இன் இலகுதன்மை 31% ஆகும். இலங்கை எதிர்நோக்கும் பிரதான சவாலான சனத்தொகை வயோதிபமடைதல் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிந்திராமை இலகுதன்மை குறைந்தமைக்கான காரணமாகும் பொருளாதாரம் தொடர்பான அறிவை இற்றைப்படுத்துவதன் மூலம் இவ்வாறான வினாக்களின் இலகுதன்மையை அதிகரித்துக்கொள்ள முடியும்.

10 ஆம் வினா

10. (i) இலங்கையில் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஓர் உபாயமாக அரச-தனியார் பங்குடைமையின் (PPP) அனுகூலங்கள் யாவை ? (05 புள்ளிகள்)

(ii) "வியாபாரத்தை இலகுவாகச் செய்தல் மற்றும் முதலீட்டுக்கான சூழல் என்பன தொடர்பில் இலங்கை தொடர்ச்சியாக மந்தமாகவே தொழிற்படுகின்றது." இலங்கையில் வியாபாரம் செய்வதிலுள்ள மிக முக்கிய பிரச்சினையான காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

(iii) "உல்லாசப் பயணக் கைத்தொழிலானது இலங்கைப் பொருளாதாரத்தில் அதி வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக ஆகியுள்ளது." அன்னிய செலாவணிச் சம்பாத்தியங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பன தொடர்பில் உல்லாசப் பயணக் கைத்தொழிலின் அண்மைக் காலப் பங்களிப்புப் பற்றியும் தற்போது இக்கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் கருத்துரைக்குக. (05 புள்ளிகள்)

(iv) "இலங்கையில் ஏறக்குறைய அரைவாசி கிராமப்புற வறிய சனத்தொகையானது சிற்றளவு விவசாயிகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றது." குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் குறைந்த வருமானங்கள் என்பவற்றுக்குக் காரணமாகவுள்ள உள்நாட்டு விவசாயத்துறையில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை அடையாளங் காண்க. (05 புள்ளிகள்)

10. (i) இலங்கையில் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஓர் உபாயமாக அரச-தனியார் பங்குடைமையின் (PPP) அனுகூலங்கள் யாவை ? (05 புள்ளிகள்)

- முழுமையான அரசதுறை அல்லது முழுமையான தனியார்துறை முன்முயற்சியினை விட சிறந்த உட்கட்டமைப்புத் தீர்மானங்கள். எது சிறப்பாகத் தொழிற்படுகின்றதோ அதனையே ஒவ்வொரு பங்குபற்றுனரும் செய்வார்.

- செயற்றிட்டங்களின் விரைவான பூரணப்படுத்தல்கள். செயலாற்றம் மற்றும் இலாப நடைமுறைகளுக்காக பூரணப்படுத்தல் காலம் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் காணப்படும் தாமதங்கள் குறைப்பு.

- ஒருஅரச தனியார -பங்குடைமையின் முதலீட்டு மீதான வருமானம் மரபுரீதியான முழுமையாக தனியார்துறை அல்லது முழுமையாக அரசதுறை முறைகளை விடவும் அதிகளவாக இருக்கக்கூடும். ஏனெனில் புத்தாக்க வடிவமைப்புக்கள் மற்றும் நிதியீட்ட அணுகுமுறைகள் இரு அமைப்புக்களும் ஒன்றாகத்தொழிற்படும் போது கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

- செயற்றிட்டத்தின் சாத்தியப்பாட்டினை நிர்ணயிப்பதற்காக இடரபாயங்கள் ஆரம்பத்திலேயே முழுமையாக மதிப்பிடப்படுகின்றன. இவ்விடயத்தில், தனியார் பங்குதாரர் அரசாங்கத்தின் நடைமுறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகள் அல்லது எதிர்பார்க்கைகள் மீது ஒரு தடையினை ஏற்படுத்துகின்றார்.

- செயற்பாடு மற்றும் செயற்றிட்ட ஆரம்பம் தொடர்பான இடரபாயங்கள் அரசாங்கத் துறையிடமிருந்து செலவுக்குறைப்பில் வழமையாக அதிக அனுபவமுடைய தனியார் பங்குதாரருக்கு மாற்றப்படுகின்றது.

- அரச தனியார் பங்குடைமையானது வினைத்திறனை மேலும் அதிகரிக்கக்கூடிய வகையில் விரைவாகத் செயற்றிட்டதினை முடிக்கும் வெகுமதியினை உள்டக்கியிருக்கக்கூடும்.

- அரசாங்கத்தின் முதலீட்டின் வினைத்திறனை அதிகரிப்பதால் மிக முக்கியமான சமூக பொருளாதார துறைகளை நோக்கி அரசாங்க நிதிகள் மீளவழிப்படுத்தப்படுவதற்கு இது அனுமதிக்கின்றது.

- அரச தனியார் பங்குடைமையின் வினைத்திறனானது அரசாங்க வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையினை குறைக்கின்றது.

- உயர் தர நியமங்கள் செயற்றிட்டத்தின் வாழ்க்கை வட்டம் ஊடாக சிறப்பாகப் பெறப்படுவதுடன் பேணவும்படுகின்றன.

- செலவுகளைக் குறைக்கும் அரச தனியார் பங்குடைமையானது குறைந்த வரிகளையும் அனுமதிக்கின்றது.

- அரச தனியார் பங்குடைமையானது தனியார்மயப்படுத்லுக்கான பொதுமக்களின் எதிர்ப்பினை தணிப்பதற்கான தீர்வாகும்.

(ii) "வியாபாரத்தை இலகுவாகச் செய்தல் மற்றும் முதலீட்டுக்கான சூழல் என்பன தொடர்பில் இலங்கை தொடர்ச்சியாக மந்தமாகவே தொழிற்படுகின்றது." இலங்கையில் வியாபாரம் செய்வதிலுள்ள மிக முக்கிய பிரச்சினையான காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

- கொள்கை உறுதிப்பாடின்மை
- நிதியீட்டத்திற்கான வழிகள்
- அரச நிர்வாகத்தின் வினைத்திறனின்மை
- வரி வீதங்கள்
- வரி ஒழுங்குவிதிமுறைகள்
- உட்கட்டமைப்பின் நிரம்பல் போதாமை
- பணவீக்கம்
- தேசிய ஊழியப்படையில் காணப்படும் தொழில் ஒழுக்கம் போதாமை
- ஊழல்
- புத்தாக்கத்திற்கான இயலளவு போதாமை
- அரசாங்க உறுதிப்பாடின்மை
- வெளிநாட்டு நாணய ஒழுங்குவிதிமுறைகள்
- போதியளவு கல்வி கற்காத ஊழியப்படை
- இறுக்கமான தொழிலாளர் ஒழுங்குவிதிமுறைகள்
- குற்றங்களும் களவுகளும்

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது ஐந்து காரணங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)

(iii) "உல்லாசப் பயணக் கைத்தொழிலானது இலங்கைப் பொருளாதாரத்தில் அதி வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக ஆகியுள்ளது." அன்னிய செலாவணிச் சம்பாத்தியங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பன தொடர்பில் உல்லாசப் பயணக் கைத்தொழிலின் அண்மைக் காலப் பங்களிப்புப் பற்றியும் தற்போது இக்கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் கருத்துரைக்குக. (05 புள்ளிகள்)

- அன்னியச்செலாவணிச் சம்பாத்தியத்திற்கான பங்களிப்பு:

நாணயம்	2015	2016
இலங்கை ரூபாய்கள் மில்லியன்	405,492	512,294
அமெரிக்க டொலர்	2,981	3,518

(ஏதாவது ஒரு ஆண்டுக்கு ஒரு புள்ளி)

மாற்றுவிடை

- 2015 ஆம்ஆண்டில் அன்னியச்செலாவணிச் சம்பாத்தியத்திற்கான இதன் பங்களிப்பு 12.4 வீதமாகக் காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் அப்பங்களிப்பு 14.2 வீதமாகக் காணப்பட்டது. வெளிநாட்டுப் பணஅனுப்புதல்களுக்கும் (29.2%) துணிகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது பெரிய அன்னியச்செலாவணிச் சம்பாத்தியத்தினைத் பெற்றுத்தரும் துறை. **(01 புள்ளி)**

- உல்லாசப்பயணக்கைத் தொழிலிலுள்ள வேலைவாய்ப்புக்கள்:

நேரடி வேலைவாய்ப்பு	2014	2015	2016
	129,790	135,930	146,115

(ஏதாவது ஒரு வருடத்திற்கு 01 புள்ளி)

மாற்று விடை

- உல்லாசப்பயணத்துறையில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள்(நேரடி மற்றும் மறைமுக) 5.1 % வளர்ச்சியுடன் கூடியதாக 2015 இல் 319,436 இலிருந்து 2016 இல் 335,659 ஆக அதிகரித்தன. (மதிப்பிடப்பட்டது) **(01 புள்ளி)**

- எதிர்பார்க்கப்படும் உல்லாசப்பயணிகளின் வருகையில் காணப்டும் வளர்ச்சிக்கு ஏதுவாக உல்லாச விடுதி அறைகள் போதாமை: 40, 000- 50,000 அறைகள் தேவை என மதிப்பிடப்பிடப்படுகின்றது. ஆடம்பர விடுதிகளிலும் இணைந்த நிறுவனங்களிலும் சேர்த்து 34,000 அறைகளே காணப்படுகின்றன.

- நுட்பத்தேர்ச்சியுடைய ஊழியர்களுக்கான தேவைப்பாடும் ஊழியர் புலம்பெயர்வும்: அதிக எண்ணிக்கையிலான பயிற்றப்பட்ட உல்லாசப்பயணக்கைத்தொழிலிலுள்ள இலங்கையின் தொழிலாளர்கள் உயர் சம்பளங்களுக்காக ஏனைய நாடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். உல்லாசப்பயணக்கைத்தொழிலுக்கு ஒழுங்குமுறையாக நிரம்பல் செய்யப்படும் தொழிலாளர்கள் அக்கைத்தொழிலின் உயர்தேவையினைப் பூர்த்திசெய்யமுடியவில்லை. அரசாங்கம் தனியாக தேவைப்படும் பயிற்சிகளை வழங்க முடியாத காரணத்தினால் உல்லாசப்பயணக்கைத்தொழிலின் நுட்பத்தேர்ச்சிவாய்ந்த ஊழியர்களுக்கான அதிகரிக்கும் தேவைப்பாட்டினை எதிர்கொள்வதற்காக தனியார் துறையுடனான பங்குடைமை தேவைப்படுகின்றது.

- அதிகம் புகழ்வாய்ந்த உல்லாச விடுதி குழுமங்களுக்கு இலங்கை மீதான போதிய விருப்பமின்மை. பல முன்னணி உல்லாசவிடுதிக் குழுமங்கள் இன்னும் தமது வணிக நடவடிக்கைகளை இலங்கைக்கு விஸ்தரிக்கவில்லை. குழசடிநள சஞ்சிகையினால் பெயரிடப்பட்ட முன்னணி 10 சர்வதேச ஆடம்பர உல்லாசவிடுதிக் தொழிற்குறிகளில் 03 மட்டுமே தற்போது இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

- முறைசாராத் துறையினை உள்வாங்குதல்: உல்லாசப்பயணக் கைத்தொழிலின் முறைசார் துறையானது உயர்ந்தளவிற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அக்கைத்தொழிலினுள்ளே குறிப்பிடத்தக்களவு முறைசாராத் துறை செயற்படுகின்றது. இதனால் உரிய ஒழுங்குவிதிமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம் முறைசாராத் துறையினை முறைசார் துறைக்கு உள்வாங்குவதற்கு கவனம் தேவைப்படுகின்றது. முறைசாராத் துறையானது உல்லாசப்பயணம் மீதான பாதுகாப்பு மற்றும் தார்மீக விழுமியங்கள் என்பவற்றினை மேம்படுத்தவேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு செய்யாதவிடத்து அது நாட்டின் நேர்க்கணிய பிம்பம் நலிவடைவதற்கு வழிவகுக்கக்கூடும்.

- பாரியளவில்உல்லாசப்பயணிகள்வரக்கூடியசீனாவிலிருந்துஅதிகரித்தளவில்வரும்உல்லாசப்பயணிகளின் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கான ஆற்றல்: உல்லாசப்பயணக்கைத்தொழிலிலுள்ள தற்போதைய அபிவிருத்தியானது புதிய சவால்களை உருவாக்கியுள்ளது. அதிகரித்தளவில் சீனாவிலிருந்து உல்லாசப்பயணிகள் வரும்போது அவர்களுக்கு சீன மொழி தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் தேவைப்படுவதுடன் சீனமொழி பேசும் உல்லாசப்பயணிகளுக்கான வழிகாட்டிகளும் தேவைப்படுகின்றனர்.

- சராசரியாக தங்கும்காலப்பகுதி, கணிப்பிடப்பட்ட இரவுகளின் எண்ணிக்கை என்பன அண்மைக்காலமாக தேக்கமடைந்துள்ளன. நாளொன்றுக்கு ஒரு உல்லாசப்பயணியிடமிருந்து கிடைக்கும் வருமானம் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளபோதிலும் பிரதானமாக உல்லாசப்பயணிகளுக்கு இலங்கையில் கிடைக்கும் நடவடிக்கைகள் குறைவாக இருப்பதால் சராசரியாக உல்லாசப்பயணிகள் தங்கும் காலப்பகுதி அண்மைய வருடங்களில் கிட்டத்தட்ட 10 விருந்தினர் இரவுகளாகத் தேக்கமடைந்துள்ளன. இதன்விளைவாக, உல்லாசப்பயணிகளுக்கு இலங்கையில் கிடைக்கும் நடவடிக்கைகளை பன்முகப்படுத்துவதற்கு கொள்கை முன்னெடுப்புக்கள் தேவைப்படுகின்றன. இங்கு சராசரி விருந்தினர் இரவுகளை ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு இலக்கிடும் நோக்கில் கடல் மற்றும் படகுப்பயண உல்லாசப்பயணம், ஓய்வு உல்லாசப்பயணம், மற்றும் களியாட்ட உல்லாசப்பயணம் போன்ற உல்லாசப்பயணக்கைத்தொழிலில் பின்னடைந்துள்ள துறைகளை நோக்கி அதிக வலியுறுத்தல்கள் செய்யப்படவேண்டும்.

- புத்தாக்கமான அணுகுமுறையின் தேவை: தகவல்களை மட்டுமன்றி பரந்துபட்ட உல்லாசப்பயணத்துடன் தொடர்புடைய பேரூந்து, தொடரூந்து, மகிழூந்து, ஆடம்பர விடுதி முன்பதிவுகள், செல்லிடத்தொலைபேசி இணைப்புக்கள், அருகலை (Wi-Fi) மற்றும் சுற்றுப்பயண திட்டமிடல்கள் போன்ற பரந்துபட்ட சேவை-களை வழங்கும் நோக்கில் உல்லாசப்பயணிகளைக் கவரும் முக்கிய இடங்களிலும் பிரதான போக்குவரத்துமையங்களிலும் பலநோக்கு உல்லாசப்பயண தகவல் நிலையங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது.

- உல்லாசப்பயணத்துடன் தொடர்புபட்ட அரச நிறுவனங்கள், தனியார் துறையினர் உள்ளிட்ட உல்லாசப்பயணக்கைத்தொழிலில் அக்கறையுடைய அனைவரையும் மேற்பார்வை செய்வதற்கு ஒரு உயர்மட்ட அரசாங்க அமைப்பு தேவைப்படுகின்றது. இதன்மூலம் அனைவரும் இணைந்து உயர்மட்ட தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதனை சாத்தியமாக்க முடியும்.

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது மூன்று சவால்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)

(iv) "இலங்கையில் ஏறக்குறைய அரைவாசி கிராமப்புற வறிய சனத்தொகையானது சிற்றளவு விவசாயிகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றது." குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் குறைந்த வருமானங்கள் என்பவற்றுக்குக் காரணமாகவுள்ள உள்நாட்டு விவசாயத்துறையில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை அடையாளங் காண்க. (05 புள்ளிகள்)

- நீர் வழங்கல் போதாமல் இருப்பது, சிறப்பற்ற நீர் முகாமைத்துவம், கால்வாய்கள், சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் போன்ற குறைபாடுள்ள நீர்ப்பாசன வசதிகள்

- கூடுதலான வெப்பம், கடும் வரட்சி, வெள்ள நிலைமைகள் மற்றும் உவர்த்தன்மை போன்றவற்றின் காரண-மாக விவசாய உற்பத்தித்திறனானது கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளாகலாம்.

- மண் தரம்தாழ்ந்து போவதால் மண்ணின் வளம் வீழ்ச்சியடைகின்றது.

- கொள்கைகளின் செயற்றிறனற்ற அமுலாக்கமும் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்படும் தனிப்படவமைந்த கொள்கைகளும் (2007 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய விவசாயக் கொள்கை, AMA, "விவசாயப்புரட்சி" (Waga Sangramaya), "கமநல அனுசரணை" (Govi Sevana), "நாம் விளைவிப்போம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" (Apiwavamu Rata Nagamu), போன்றன.)

- தொழில்நுட்பம் போதமை, உயர்விளைச்சல் தரும் விதைகள் போதாமல் இருப்பது, பூச்சி பாதிப்புக்களுக்கான சிறந்த முறைகள் போதாமல் இருப்பது, பாரம்பரிய முறைகளில் அதிகமாகத் தங்கியிருத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியான விவசாய முறைகள் போதாமலிருப்பது

- சந்தைப்படுத்தல் பிரச்சினைகளும் அரசாங்கப் பொறிமுறைகளின் வினைத்திறனின்மையும் (நெல் சந்தைப்படுத்தும் சபை)

- உரமானியங்களுக்குப் பதிலாக நிதிஉதவிகளை வழங்குதல்

- உலகப் பொருளாதார சரிவானது விவசாயிகளின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் குறைவடைவதற்கு வழிவகுத்துள்ளது.

- அறுவடைக்குப் பின்னரான இழப்புக்கள்ஃ விரயங்கள்

- பொருளாதாரரீதியில் இலாபத்தைத் தராத நிலத்துண்டுகள் / சிறுகூறு நிலங்கள்

- சிறப்பாக அமையாத கமநல சேவைகள்

- கிராமப்புறங்களில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் போதாமல்இருப்பது.
- பயிர் செய்யக்கூடிய பயிரினங்கள் மீதான அரசாங்கக் கட்டுப்பாடுகள்
- காட்டு மிருகங்களால் செய்யப்படும் பயிரழிப்புக்கள் (யானைகள், குரங்குகள் போன்றன)

(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது ஐந்து காரணங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)

10 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



பரீட்சார்த்திகளில் சுமார் 27.68% ஆனோர் இவ்வினாவிற்கு விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் சுமார் 50% உம்
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் சுமார் 35% உம்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் சுமார் 13% உம்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில்சுமார் 02% உம்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 4 பகுதிகளை கொண்டுள்ளது. அதில் (iv) ஆம் பகுதி கூடிய இலகுதன்மையைக் கொண்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை 46% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் கொண்ட பகுதி (iii) ஆகும். அதன் இலகுதன்மை 19% ஆகும்.

10ஆவது வினாவினைத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகள் 27.68% ஆகும். இவ்வினா நான்கு உபபகுதிகளைக் கொண்டது.

உபபகுதி (i) இன் இலகுதன்மை 28% ஆகும். நிகழ்காலத்தில் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் பின்பற்றப்படும் உபாயங்களும் முறையியல்களும் தொடர்பாக மாணவர்கள் அறிந்திராமை இலகுதன்மை குறைந்துள்ளமைக்குக் காரணமாகும். சமகால தகவல்கள் தொடர்பாக மிக அவதானத்துடன் இருக்கும் விதத்தில் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 33% ஆகும். நிகழ்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான சமகால தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக இலகுதன்மை குறைந்துள்ளது. இவ்வாறான சமகால பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களை ஆய்வு செய்ய மாணவர்களைத் தூண்டல் வேண்டும்.

உபபகுதி (ii) இன் இலகுதன்மை 19% ஆகும். இது குறைந்த இலகுதன்மையைக் கொண்ட பகுதியாகும். அண்மைக் காலத்தில் சுற்றுலாத்துறை முகங்கொடுத்துள்ள சவால்கள், அந்நியச்செலவாணி உழைத்தல் என்பன தொடர்பான சமகால தகவல்கள் பற்றிய விளக்கம் கணப்படாமை இலகுதன்மை குறையக் காரணமாகும். இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கியமானதொரு துறையான சுற்றுலாத்துறை போன்ற துறைகள் பற்றி பரீட்சார்த்திகள் ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் கற்றல் கற்பித்தற் செயன்முறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

உபபகுதி (ii) ஆனது இவ் வினாவின் கூடிய இலகுதன்மையைக் கொண்ட பகுதியாகும். அதன் இலகுதன்மை 46% ஆகும். இங்கு இலகுதன்மையை அதிகரிப்பதற்கு இலங்கையின் கிராமியப் பொருளாதாரம் தொடர்பான அறிவு இற்றைப்படுத்தக்கூடிய வகையில் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும்.

2.2.3 **வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் மற்றும் ஆலோசனைகளும் :**

இம்மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்திய தரவுகளை ஒழுங்கமைத்து, II ஆம் வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவையும் தெரிவு செய்த சதவீதமும் இலகுதன்மையும் உள்ளடக்கிய பின்வரும் வரைபு, அட்டவணையைக் மூலம் கட்டமைக்கலாம்.



வினா இலக்கம்	1	2	3	4	5	6	7	8	9	10
தெரிவுசெய்த சதவீதம்	96	98	60	17	29	54	65	54	25	28
இலகுதன்மை %	58	51	50	38	46	37	35	35	7	31

1 தொடக்கம் 5 வரையான ‘அ’ பகுதிக்கும் வினாக்கள் 6 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ‘ஆ’ பகுதிக்கும் உரியதாகும். பரீட்சார்த்திகள் ‘அ’ பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும் ‘ஆ’ பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

‘அ’ பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் 2, 1 ஆம் வினாக்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், ‘ஆ’ பகுதியிலுள்ள ஐந்து வினாக்களிளுள் 6, 5 ஆம் வினாக்கள் கூடுதலாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை தெரிவு செய்யப்பட்டுள்ள சதவீதங்கள் முறையே 98.37%, 96.38%, 64.98%, 59.89% ஆகும். அதற்கடுத்ததாக கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது 3ஆவது வினாவாகும். எஞ்சிய 6 வினாக்களில் கூடுதலானோரால் தெரிவு செய்யப்பட்டுள்ள அவ் வினாவுக்கு பரீட்சார்த்திகளில் அரைவாசிக்கு மேற்பட்டோர் (59.91%) விடையளித்துள்ளனர். பாடத்திட்டத்தில் இவ்வினாக்களுக்கு அடிப்படையாக அமைந்த கருப்பொருள், பாடவிடயங்கள் என்பன கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் கூடிய கவனத்திற்குட்பட்டவையும் மாணவர்களிடையே கூடிய பிரசித்தி பெற்றவையுமாகும். எனவே அவ்வினாக்களின் இலகுதன்மை ஒப்பீட்டு ரீதியில் உயர் பெறுமதியைப் பெறவேண்டும். வினாக்கள் தெரிவுசெய்யப்பட்ட சதவீதத்தின் இறங்குவரிசைப்படி முதலில் அமையும் வினாக்கள் முறையே 9, 10 ஆகும். எனினும் இலகுதன்மையின்படி முதலில் அமையும் வினாக்கள் முறையே 7, 8 உம் ஆகும். 7 ஆம் 8 ஆம் வினாக்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவ்வளவு திருப்திகரமானவையல்ல என்பதும் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது என்பதும் இத்தகவல்களிலிருந்து தெளிவாகின்றது. எனவே மாணவர்களின் கூடிய கவனத்தை ஈர்க்கும் இவ்வாறான வினாக்களிலிருந்து கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் மாணவர்களுக்கு வழிகாட்டுவது மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள பேருதவியாக அமையும்.

கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 2 ஆம் வினாவின் இலகுதன்மை 50% இற்கு வரையறுக்கப்பட்டுள்ளமையும் பொருளியல் பாடத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் தரப்பினரின் கவனத்திற்குட்பட வேண்டியதொரு விடயமாகும்.

சுயஊக்குவிப்புடன் (self motivation) வினாவொன்றிற்கு விடையளிக்கும் ஒருவருக்கும், சராசரியாக வினாவுக்குரிய மொத்தப் புள்ளயில் கூடிய சதவீதத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தமது விடைகளை சரியான பாட விடயங்களினூடாக ஒழுங்கமைத்து சரியாக முன்வைக்க வழிகாட்டப்பட வேண்டும்.

குறைவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது 09 ஆவது அதன் இலகுதன்மை 7% சதவீதமான குறைந்த பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பாட விடயங்கள் தொடர்பான வகுப்பறை கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் போதியளவு கவனம் செலுத்தப்படாமை புலப்படுகின்றது. தரம் 13 இன் இறுதித் தவணையில் மாணவர்கள் குறைந்தளவில் பாடசாலைக்கு வருகை தருதல் போன்ற காரணங்கள் இன்றியமைக்குப் பிரதான ஏதுவாயமைந்திருக்கலாம்.

வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாவையும் கவனத்தில் கொள்ளும்போது மிக இலகுவான வினாவின் இலகுதன்மைகூட 50% ஆக வரையறுக்கப்பட்டுள்ளதுடன் 1, 2 ஆம் வினாக்கள் தவிர்ந்த ஏனைய 8 வினாக்களினதும் இலகுதன்மை 65% ஐ விடக் குறைந்துள்ளமை இப்பாடத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரினதும் கவனத்திற்குட்பட்ட வேண்டியதொரு விடயமாகும். அதேபோல் I ஆம் வினாப்பத்திரத்தின் முழுமையான இலகுதன்மைகூட 43% சதவீதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இத் தகவல்களினூடாக, கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் கண்டாய்வுச் சோதனைகளில் ஈடுபடுவதனூடாக இலக்குக்குரிய பரிகாரச் செயற்பாடுகளை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்தல் முக்கிய தேவைப்பாடாகும்.

பகுதி III

3.0 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும் :

3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் :

பொதுவான அறிவுறுத்தல்கள்

* வினாப்பத்திரத்திலுள்ள அடிப்படை அறிவுறுத்தல்களை வாசித்து நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு நேரம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டும். வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கிக் கொண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். ஒரு வினா இரு பிரிவுகளாக ஒன்றாகக் கேட்கப்பட்டிருந்தால் இரண்டு பிரிவுகளுக்கும் விடையளிப்பதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

* பத்திரம் I இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகச் ஒரு விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும். அத்துடன் தெளிவாக அத்தெரிவின் இலக்கத்தை மாத்திரம் விடைத்தாளில் இடுதல் வேண்டும்.

* பத்திரம் II இன் (அ), (ஆ) பகுதிகளின் வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாவுக்குமான விடையை புதிய தாளில் எழுதத் தொடங்க வேண்டும்.

* விடைகள் சரியான தெளிவான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழு-துதல் வேண்டும்.

* வினா இலக்கம், பிரிவுகளின் இலக்கங்கள் ஆகியவற்றை சரியாக எழுதுதல் வேண்டும்.

* சுருக்க விடையளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் விரிவாக விடையளிப்பதைத் தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்க ணே்டிய சந்தர்ப்பங்களில் சுருக்கமாக விடையளிப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.

* வினா கேட்கப்பட்டுள்ளவிதத்திற்கமைய தர்க்கரீதியாகவும் பகுப்பாய்வுரீதியாகவும் விடயங்கள் முன்வைக்கப்படல் வேண்டும்.

* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களைப் பயன்படுத்தக்கூடாது.

* விடைக்குரிய புள்ளிகளின் அளவு, நேரம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகளுக்கேற்ப நேர முகாமைத்துவத்தை பின்பற்றுதல் வேண்டும்.

* வரைபுகளை வரையும்போது இடைவெட்டை சரியாகக் காட்டுவதுடன் அச்சுக்களையும் வரைபுக்கோடுகளையும் பெயரிடுவதும் மிக முக்கியமாகும்.

* சமன்பாடுகளைத் தீர்க்கும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணிதக் கோட்பாடுகளின்படி படிமுறையாகக காட்டப்படல் வேண்டும்.

* அம்புக்குறி, வேறு குறியீடுகள் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தும் போது அவற்றைத் தெளிவுபடுத்துதல் முக்கியமாகும்.

விசேட அறிவுறுத்தல்கள்

* பொருளியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும். உதாரணம் : சுய நுகர்வு (Autonimous.com)

* தேவையான இடங்களில் புள்ளிவிபர ரீதியான அட்டவணைகள், வரைபுகள், சமன்பாடுகள் மூலமாக விடைகளுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். வரைபுகளை சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப வரைவதிலும் அச்சுகளைச் சரியாகப் பெயரிடுவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

* கணித்தல்களின்போது ஒவ்வொரு படிமுறையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உரிய சந்தர்ப்பங்களின்போது சரியான அலகுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* சரியான குறியீடுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* உரிய வரைபடங்களை வரையும்போது கோடுகளைச் சரியாகப் பெயரிடவும் அதன் பெயர்ச்சிகளின் திசைகளை சரியாகக் குறிப்பிடவும் வேண்டும்.

* இலங்கையின் பொருளாதாரத்துக்கு மிக முக்கிய புள்ளிவிபரம் அண்மைக்கால (முன்னைய இரண்டு ஆண்டுகள்) தரவுகளை ஞாபகத்தில் வைத்திருப்பதால் விடையளிக்க இலகுவாகும்.

  - பொருளாதார வளர்ச்சி வீதம்
  - பணவீக்க விகிதம்
  - வறுமைச் சுட்டி
  - நிலுவைப் பற்றாக்குறை
  - அரச முதலீட்டு வீதம்
  - தலா ஆள்வீத வருமானம்
  - தொழிலின்மை வீதம்
  - வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை
  - அரசபடுகடன் வீதம்

* கட்டமைப்பு வினாப்பத்திரத்தின் வினாக்களுக்கு விடையளிக்கும்பொது, தர்க்க ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையில், கேட்கப்படட வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை வழங்குவதற்கான அனுபவத்தை மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

* இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வரும் விசேட குறிப்புகள் (உதாரணம் : குடித்தன வருமான ஆய்வு அறிக்கை, ஊழியப்படை பற்றிய ஆய்வு அறிக்கை, வறுமை தொடர்பான தகவல்கள்) போன்றவற்றை பரிசீலிப்பதற்கு ஊக்கப்படுத்தல்.

வரைபு தொடர்பான ஆலோசனைகள்:

* தரவுகளுக்கேற்ப வரைபுகள் வரையும்போது வரைபு தாள் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். வரைபுதாள் பயன்படுத்தாததால் சரியாக கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையை விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் இழக்கப்படுவதாக புள்ளியிடலின்போது புலப்படுகின்றது.

* அச்சுகளைச் சரியாக பெயரிடாமையும் வரைபுகளைப் பெயரிடாமையும் புள்ளிகள் குறையக் காரணமாகும்.
  உதாரணம் : உற்பத்தி சாத்திய எல்லை வளையியை பெயரிடும்போது X உம் Y உம் எனப் பெயரிடுவதற்குப் புள்ளி வழங்க முடியாது. அது X பண்டம் Y பண்டம் எனப் பெயரிடல் வேண்டும்.

* உற்பத்திச் சாத்திய எல்லை வளையியை வரையும்போது இரு அச்சுக்களையும் தொடக்கூடிய வகையில் வரைவது மிக முக்கியமாகும். அவ்வாறு இல்லாதுவிடின் அது உற்பத்திச் சாத்திய வளையியன்று.

* வரைபை வரையும்போது இடைவெட்டைச் சரியாகப் பெயரிடாமை புள்ளிகள் குறையக் காரணமாகும். உதாரணம் : நிரம்பல் கோட்டை வரையும்போது அங்கு எதிர்கணிய இடைவெட்டுப் புள்ளி ஆரம்பிக்குமாயின் அதன்படி வரைபை வரைய வேண்டும்.

உதாரணம் :



மொத்தச் செலவு வளையிலும் சுயாதீன செலவின் அளவினை வரைபில் சரியாகக் காட்ட வேண்டும்.

உதாரணம் :



* பேரினப் பொருளாதார சமநிலையைக் காட்டும்போது வருமானம், மொத்தச் செலவுகளைக் குறிக்கும்போது இரு அச்சுகளிலும் தரவுகளைச் சமனாகும்படி புள்ளியிட்டு சமவருமானச் செலவுக்கோடுகளை வரைய வேண்டும். அதேபோல சுய மாற்றமும் வருமான கிடையச்சில் குறிப்பிடல் வேண்டும்.

உதாரணம் :



* பேரின பொருளாதார சமநிலையைச் காட்டும்போது வெளிப்பாய்ச்சலைக் காட்டும் எதிர்க்கணிய இடைவெட்டினால் ஆரம்பிக்கப்படுமாயின் அதனை சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

உதாரணம் :



3.2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும் :

* எண்ணக்கருக்கள் தொடர்பான சரியானதும் நிச்சயமானதுமான அறிவு இருக்க வேண்டியதுடன், எண்ணக்கருக்கள் தொடர்பான பிரயோக ரீதியான பயன்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.

* பொருளாதார, சமூகக் காரணிகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* இதற்காக இலங்கை மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்புத் திணைக்களம், நிதியமைச்சு ஆகிய நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், பிரசுரங்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்கும் பழக்கப்பட வேண்டும். அதேமூலம் அறிவை இற்றை நிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.